# தலைவர் ம.பொ.சி



858 — 616

# தலைவர் ம. பொ. சி.

(தொகுப்பு நூல்)

C 435

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி. க. சண்முகம் நூலகம்.
தமிழ்த்துறை.

தொகுப்பாளர்
சோம. சுவாமிநாதன்

இன்ப நிலையம்
மயிலாப்பூர் :: சென்னை-4.

முதற் பதிப்பு: ஏப்ரல் 1952.

★

## காணிக்கை

காதல் ஒருவனைக் கைபிடித்தே—அவன்
காரியம் யாவினும் கைகொடுத்து
மாதர் அறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சிபெறச் செய்து வாழ்வமடி!

என்ற பாரதியார் கண்ட புதுமைப் பெண்ணின் பிரதிநிதியாக, தலைவர் ம. பொ. சி.-யின் இன்னல் நிறைந்த அரசியல் வாழ்விற்கு ஆக்கமளித்து ஆதரவு காட்டி வரும், அவருடைய வாழ்க்கைத் துணைவியார்

திருமதி. இராஜேசுவரி அம்மையாருக்கு

இந்நூலைக் காணிக்கை யாக்குகின்றோம்.

★

விலை ரூ. 1-12-0

வேங்கடரத்தினம் பிரிண்டர்ஸ், சென்னை-6.

# பதிப்புரை

○

சிறந்த தேசபக்தர்—தமிழகத்தின் தலைசிறந்த பேச்சாளர்—காந்திய காங்கிரஸ் வாதி—தமிழரசு இயக்கத்தின் தலைவர்-திரு. ம. பொ. சிவஞானம் அவர்களைத் தமிழகத்தில் அறியாதார் இல்லை. என்றாலும், கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக அரசியல், இலக்கியம், சமூகம் ஆகிய பல்வேறு துறைகளிலும் அவர் செய்துள்ள ஒப்பற்ற சேவை போதிய அளவு விளம்பரமாக வில்லை. இக்குறையைப் போக்க திரு. ம. பொ. சி. அவர்களின் சுயசரிதையை அவரே எழுதி வெளியிட வேண்டுமென்று அவருடைய நெருங்கிய நண்பர்கள் பலர் கோரினர். தன்னடக்கம் காரணமாக திரு. ம. பொ. சி. அதைச் செய்ய மறுத்துவிட்டார். ஆகவே, திரு. ம. பொ. சி. யின் அரசியல் வாழ்வு பற்றி முக்கியமான சில குறிப்புகளையும்—அவரைப்பற்றித் தமிழ்நாட்டின் பிரபல அரசியல் தலைவர்களும், தமிழ் அறிஞர்களும் கொண்டுள்ள கருத்துக்களையும் தொகுத்து வெளியிட முயற்சி செய்தோம். அதன் விளைவே இந்நூல்.

அச்சுத் தொழிலாளியாக இருந்தபோது அரசியலில் ஈடுபட்டு ஏகாதிபத்தியத்தின் அடக்கு முறைகள்—தரித்திர வாழ்க்கையின் தடைகள்—பொறாமைக்காரர்கள் தந்த தொல்லைகள்—பொருள்பலம் படைத்தோரின் போட்டிகள் ஆகிய அனைத்தையும் தகர்த்துத் தவிடுபொடியாக்கி, தன்னந் தனியாக முன்னேறி வந்துள்ள திரு. ம. பொ. சி. யின் வரலாறு, பாட்டாளி மக்களின் அரசியல் வளர்ச்சிக்கு வழி காட்டியாக இருக்கும் என்ற ஒரே நோக்கத்துடன்தான் இந்நூலை வெளியிடுகின்றோம்.

எமது வேண்டுகோளுக்கிணங்கி திரு. ம. பொ. சி. யைப் பற்றிய தங்கள் கருத்துக்களை எழுதித் தந்த அறிஞர் பெருமக்களுக்கு அன்பு கலந்த நன்றி.

சென்னை,
13—4—52.

சோம. சுவாமிநாதன்,
இன்ப நிலையம்.

[library stamp, illegible]

மதுரை காமராசர் பல்க
அவ்வை

# பொருளடக்கம்

ம. பொ. சி. வரலாறு 3

ஒழுக்கமுள்ள பாட்டாளி !
— டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு M. L. A. ... 43

பிரச்சார பீரங்கி !
— டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் M. P. ... 45

வறுமையிற் செம்மையுடையார்
— திரு. வி. க. ... 49

உணர்ச்சியின் உருவம்
— நீலாவதி ராம சுப்பிரமணியம் ... 53

ஒரு தனிப்போக்கு
— டாக்டர் மு. வரதராசனார் M.O.L. Ph. D. ... 59

சொலல் வல்லார்
— 'ஔவை' டி. கே. ஷண்முகம் ... 63

மாசற்று வாழும் மதிப்புடையார்
— நாமக்கல் கவிஞர் ... 68

தியாகிகளைப் போற்றும் தியாகி
— புலவர் தெ பொ. மீனாட்சிசுந்தரனார் ... 79

சிலப்பதிகாரத் தமிழர்
— யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் ... 82

தனிக் குரல்
— பெரியசாமித் தூரன் ... 83

எங்கள் தலைவர் ம. பொ. சி.
— கவிஞர் கா. மு. ஷெரீப் ... 85

தண்டமிழ் மேதை
— கவிமணி தேசிக வினாயகம் பிள்ளை ... 89

தமிழ் செய்த தவம்
— புலவர் ந. சஞ்சீவி M. A. ... 93

கர்ம வீரர் (கவிதை)
— கவிஞர் கு. சா. கிருஷ்ணமூர்த்தி ... 105

நான் கண்ட லட்சியவாதி
— கொ. மோ. ஜனார்த்தனம் B. A., B. Com. ... 113

ம. பொ. சி. வாழ்க! (கவிதை)
— மதுரகவி வீ. வே. முருகேச பாகவதர் ... 125

புதுயுகத் தலைவன் (கவிதை)
— கவிஞர் வானம்பாடி ... 126

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி. க. சண்முகம் நூலகம்.
தமிழியல் துறை.

# ம. பொ. சி. வரலாறு

"தலைமை தாங்கும் தகுதி என்பது கடையில் வாங்கும் சரக்கன்று; பிறர் கொடுத்துப் பெறுவதுமன்று. ஒழுக்கம், அறிவு, ஆற்றல், ஆண்மை, தியாக உணர்வு ஆகிய அனைத்தும் ஒருங்கு பெற்றவரே தலைமைப் பதவிக்குப் பூரண தகுதியுடையவராவார். இத்தனைத் தகுதிகளையும் பெற்ற ஒரு தலைவரை, நாம் நினைத்த மாத்திரத்தில் சிருஷ்டித்துவிட முடியாது. பல தலைமுறைகளுக்கு ஒரு முறைதான் அத்தகைய தலைவர்கள் தோன்றுகின்றனர். கால சக்திதான் அவர்களை நமக்குத் தருகிறது.''

இது, ராஜாஜியின் தலைமைக்கு எதிர்ப்பு எழுந்தபோது, அவருடைய தலைமையின் திறமை குறித்து திரு. ம. பொ. சி. "கல்கி"யில் எழுதிய கட்டுரையின் ஒரு பகுதியாகும்.

பண பலத்தாலும், பதவியாலும் பலர் தலைவர்களாக மதிக்கப்படுவதுண்டு. ஆனால், அந்தப் பதவியும் பண பலமும் என்றென்றும் நிலைத்திருப்பவையல்ல. என்றேனும் ஒருநாள் இழக்க வேண்டியவைதான். அப்போது தலைமை என்ற தகுதியும் தானாகவே போய்விடும்.

ஆனால், தலைவர் ம. பொ. சி. கூறியுள்ள ஆற்றல்களைப் பெற்ற தலைவர்கள், மக்கள் இதயங்களிலே இடம் பெற்றுவிடுகிறார்கள். ஆகவே, அவர்கள் பூத உடலோடு வாழ்கின்றபோது மட்டுமின்றி, பூவுலகிலிருந்து மறைந்துவிட்ட பிறகுங்கூட தலைவர்களாகவே திகழ்கின்றனர்.

தலைமைப் பதவிக்கு என்னென்ன தகுதிகள் வேண்டுமென்று ம. பொ. சி. கூறியிருக்கிறாரோ, அந்தத் தகுதிகள்

பெரும்பாலும் ஒருங்கே வாய்க்கப் பெற்றவர், தலைவர் ம. பொ. சி.

தலைவர் ம. பொ. சி., 1906-ம் ஆண்டு ஜுன் மாதம் 26-ம் தேதி சென்னை நகரில், ஆயிரம் விளக்குக்கு அருகேயுள்ள சால்வான் குப்பம் என்ற பகுதியிலே பிறந்தார். அன்னையின் பெயர் சிவகாமி; தந்தையின் பெயர் பொன்னுசாமி. ம பொ. சி.யின் தந்தையார், மெய்வருந்தப் பாடுபடும் ஒரு தொழிலாளி. அவருடைய குடும்பம் வறுமையின் சின்னமாக விளங்கியது. ஒரு பாட்டாளியின் குடும்பம் இதைவிட வேறு விதமாக இருக்குமென்று எதிர்பார்க்க முடியாதல்லவா? ஆனால், பொருட்செல்வமற்ற பெற்றோருக்கு அறிவுச் செல்வமாக விளங்குகிறார் தலைவர் ம. பொ. சி. "இருவேறு உலகத் தியற்கை வேறு, திருவேறு தெள்ளியராதலும் வேறு" என்றார் வள்ளுவப் பெருந்தகை. அவர் மொழி பொய்யாமொழியே என்பதற்கு சிவஞானத்தின் பிறப்பும் அவருக்கு இன்றுள்ள சிறப்பும் சான்றாகும்.

ம. பொ. சிக்கு ஒரு தம்பியும் ஒரு தங்கையும் உண்டு. தம்பியின் பெயர் திரு. பரசுராமன்; தங்கையின் பெயர் திருமதி பாலம்மாள். ம. பொ. சி.யின் முதல் மனைவியார் பெயர் திலோத்தமை. அவ்வம்மையார், திருமணமான சின்னாட்களுக்குள்ளேயே காலமாகிவிட்டார். ஆகவே, ம. பொ சி. தமது முதல் மனைவியாரின் சிற்றன்னையார் மகள் திருமதி. ராஜேஸ்வரி அம்மையாரை இரண்டாந்தாரமாக மணந்து கொண்டார்.

தலைவர் ம. பொ. சி.க்கு திருநாவுக்கரசு என்ற ஒரு ஆண் மகவும், கண்ணகி என்ற ஒரு பெண் மகவும் உண்டு.

## இல்லமே பள்ளி; அன்னையே ஆசிரியை!

ம. பொ. சி., வறுமைக் குடியில் பிறந்த காரணத்தால் முறையாகக் கல்வி பயில முடியவில்லை. மூன்றும் வகுப்பின்

துவக்கத்திலேயே அவருடைய பள்ளிப் படிப்பு முற்றுப் பெற்றுவிட்டது. ஆயினும், தமது அன்னையாரையே ஆசிரியையாகவும், இல்லத்தையே பள்ளியாகவும் கொண்டு ம. பொ. சி. கல்வி பயின்றார். ம. பொ. சி.யின் அன்னையார் போதிய கல்வியறிவு பெற்றவர். தேவாரம், திருவாசகம், திருவருட்பா போன்ற சமயக் குரவர்களின் பாக்களைப் பக்தியோடு பாடும் பண்புடையவர். ஆகவே, அவ்வம்மையார், மைந்தன் ம. பொ. சி.க்கு எழுத்தறிவே யன்றி, சமயப் பாடல்கள் மூலம் இலக்கிய அறிவையும் போதித்தார்.

புகழேந்திப் புலவர் இயற்றிய அல்லியரசாணி மாலை, பவளக்கொடி மாலை போன்ற நூல்களைத் தமது இளமைப் பருவத்தில் அன்னையாரின் வற்புறுத்தலின் பேரில் அடிக்கடி படித்து வந்தார். புகழேந்திப் பாடல் களின் எதுகை, மோனைச் சிறப்புக்கள் இளமைப் பருவத்தி லேயே ம. பொ. சி.யின் இதயத்தைக் கவர்ந்துவிட்டன. அதன் எதிரொலியை ம. பொ. சி.யின் ஒவ்வொரு பேச்சி லும் கேட்கிறோம்; எழுத்திலும் காண்கிறோம். நண்பர்க ளோடு தனியே பேசும்போதுகூட அவருடைய பேச் சில் எதுகை, மோனை ஏராளமாக வரும். புகழேந்தியிட மிருந்து பெற்ற இந்தச் செல்வமே ம. பொ. சி.யின் புகழ் வளருவதற்கும் ஒரு காரணமாயிற்று.

ம. பொ. சி., இளமைப் பருவத்தில் ஆங்கிலக் கல்வி பயில்வதற்கான வாய்ப்பை இழந்துவிட்டார். ஆயினும், தாம் தொழிலாளியாக இருந்த காலத்தில் நண்பர்களின் துணையைக் கொண்டு ஆங்கிலம் பயின்றார். இன்று சாதா ரணமாகக் கடிதப்போக்குவரத்துக்களைக் கவனிக்கவும், பத் திரிகைகளைப் படிக்கவும் தேவையான ஆங்கில ஞானத்தை அவர் பெற்றிருக்கிறார். அவருடைய ஆங்கில அறிவு நாள்தோறும் வளர்ந்துகொண்டே வருகிறது.

## பிறவித் தொழிலாளி

ம. பொ. சி., தம்முடைய பத்தாம் வயதிலேயே பெற்றோரின் கட்டாயத்தால் பாட்டாளி வர்க்கத்தில் சேர்ந்து விட்டார். ஆரம்பத்தில், ஐந்தாண்டுகளுக்குமேல் அவர் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருந்தார். பின்னர் தாம் தொழிலாளியாக இருந்த காலம் முழுவதும் அச்சுத் தொழிலோடு தொடர்பு கொண்டிருந்தார். அந்நாளில் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு சென்னையில் நடத்திவந்த "தமிழ்நாடு" என்ற தினசரிப் பத்திரிகையில் சுமார் ஏழு ஆண்டுகள் கம்பாஸிட்டராக வேலைபார்த்து வந்தார். பிறகு, அங்கு ஏற்பட்ட வேலை நிறுத்தத்தின் விளைவாக, 'தமிழ்நாடு' அலுவலகத்தை விட்டு வெளியேறினார். அதன் பிறகு அவர் தமது முழுநேரத்தையும் தேசப் பணிக்கே அர்ப்பணித்து வருகிறார்.

## காங்கிரஸ் தொடர்பு

ம. பொ. சி., 1927-ம் ஆண்டில் காங்கிரசில் சேர்ந்தார். அந்த ஆண்டில்தான் டாக்டர் அன்சாரியின் தலைமையில் சென்னையில் காங்கிரஸ் மகாசபை கூடியது. அந்த மகா சபை வெற்றிகரமாக நடைபெறுவதற்குப் பணி புரிந்த தொண்டர் படையில் ஒருவராகச் சேர்ந்தார் ம. பொ. சி. அந்த நாளிலிருந்து இன்றுவரை அவர் காங்கிரசோடு இடைவிடாத தொடர்புகொண்டு வந்திருக்கிறார். கடந்த 25 ஆண்டுகளில் காங்கிரஸ் நடத்திய உப்பு சத்தியாக்கிரகம், சட்டமறுப்பு இயக்கம், தனிநபர் சத்தியாக்கிரகம், ஆகஸ்டுப் புரட்சி, அரிஜன இயக்கம், மதுக்கடை மறியல் ஆகிய எல்லா இயக்கங்களிலும் இரண்டறக் கலந்து பாடு பட்டிருக்கிறார்.

ம. பொ. சி. யைப்போன்று மிக நீண்ட காலம் காங்கிரஸோடு தொடர்பு கொண்டவர்கள் மிகச் சிலரே. அவர்களி

லும், ம. பொ. சி. யைப் போன்று ஒவ்வொரு சட்ட மறுப்பு இயக்கத்திலும் ஈடுபட்டு துன்பங்களை எல்லாம் இன்பமாக ஏற்றவர் இரண்டொருவரே. தாம் காங்கிரஸில் சேர்ந்த நாள் முதல் 1942-ம் ஆண்டு வரை நடைபெற்ற உப்பு சத்தியாக்கிரகப் போர், சட்ட மறுப்பு இயக்கம், தனி நபர் சத்தியாக்கிரகம், ஆகஸ்டுப் புரட்சி ஆகிய எல்லாவற்றிலும் பங்கு கொண்டு, தடியடி, பிரம்படி, போலீஸ் லாக்கப், அபராதம், சிறைவாசம், மாகாணங் கடத்தல், 144 தடையுத்தரவு ஆகிய ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறைப் பாணங்கள் அத்தனைக்கும் மார்பு காட்டிய மாவீரர் ம. பொ. சி.

1928 பிப்ரவரி 3ந் தேதி சென்னை புரசைபாக்கத்தில் சைமன் கமிஷன் பகிஷ்கார ஊர்வலத்தில் கலந்துகொண்டதற்காக ம. பொ. சி. கைது செய்யப்பட்டார். இதுதான ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறைப் பேயாட்டத்திற்கு ம. பொ. சி. இரையான ஆரம்ப நாள்; புரட்சி வெள்ளத்தில் உணர்ச்சி கொண்டு குதித்த புனித நாள்.

1930-ல் நடைபெற்ற உப்பு சத்தியாக்கிரகத்தில் நேரடியாகப் பங்குகொண்டிருக்கிறார் ம. பொ. சி. சென்னை கடற்கரையில் சட்டத்தை மீறி உப்புக் காய்ச்சிய சத்தியாக்கிரகக் குழுவினரில் ஒருவராக இருந்து போலீஸாரின் தடியடிகளைப் பலமுறை பரிசாகப் பெற்றிருக்கிறார்.

தண்டையார்பேட்டை காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசி என்ற காரணத்திற்காக 1932 பிப்ரவரியில் சென்னை அரசாங்கம், ம. பொ. சி.யின் மீது 144 தடையுத்தரவு பிறப்பித்தது. ஆறுமாத காலத்திற்கு நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ காங்கிரஸ் நடவடிக்கைகளில் ம. பொ. சி. கலந்துகொள்ளக் கூடாதென்பது தடையுத்தரவின் கருத்து. ஆனால், ம. பொ. சி. 15-5-32-ல் இந்தத் தடையுத்தரவை மீறி பழைய வண்ணாரப் பேட்டையில் காங்கி

ரஸ் ஊர்வலம் ஒன்றிற்குத் தலைமை தாங்கிச் சென்றதற்காகக் கைது செய்யப்பட்டு நாள் முழுவதும் போலீஸ் கமிஷனர் காரியாலயத்தில் காவலில் வைக்கப்பட்டு பிறகு அன்றே நள்ளிரவில் விடுதலை செய்யப்பட்டார்.

பதினைந்து நாட்களுக்குப் பிறகு அதாவது 29-5-32ல் மீண்டும் சட்டத்தை மீறி ஊர்வலம் நடத்தியதற்காக ம. பொ. சி. கைது செய்யப்பட்டார். ஒருமாத காலம் சென்னை சிறைச்சாலையில் ரிமாண்டில் வைக்கப்பட்ட பிறகு நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட்டார்.

விடுதலையான மூன்று நாட்களுக்குப் பிறகு, அதாவது 26-6-32-ல் சென்னை ஏழுகிணறு டிவிஷனில் தடையை மீறி நடைபெற்ற சென்னை ஜில்லா அரசியல் மாநாட்டில், தண்டையார்பேட்டை காங்கிரஸ் கமிட்டியின் பிரதிநிதியாகக் கலந்துகொண்டதற்காகக் கைது செய்யப்பட்டு மண்ணடி போலீஸ் லாக்கப்பில் பலமாகத் தாக்கப்பட்டார்.

மூன்று மாதங்களுக்குப் பிறகு, அதாவது 20-9-32-ல் 144 தடையுத்தரவை மீறி, ஒரு ஊர்வலத்திற்குத் தலைமை தாங்கிச் சென்றதற்காகவும், கடைகளை அடைத்து ஹர்த்தால் செய்யுமாறு தூண்டியதற்காகவும், போலீஸார் ம. பொ. சி. யைக் கைது செய்து வழக்குத் தொடுத்தனர். வழக்கை விசாரித்த ஜார்ஜ் டவுன் நான்காவது பிரஸிடென்ஸி மாஜிஸ்திரேட் "3 ரூபாய் அபராதம், கட்டத் தவறினால் மூன்று மணி நேரம் சிறைவாசம்" என்று தீர்ப்பளித்தார். அபராதத்தைக் கட்ட மறுத்து சிறைவாசத்தை அனுபவித்தார் ம. பொ. சி.

ஒரு வாரத்திற்குப் பிறகு அதாவது 30-9-32-ல் திருவல்லிக்கேணி கடற்கரையில் 'தமிழா துள்ளி எழு!' என்ற

தலைப்பில் அரசாங்கத்தை எதிர்க்கத் தூண்டும் பிரசுரங்களை வழங்கியதற்காகக் கைது செய்யப்பட்டு ஆறு மாத கடுங்காவல் தண்டனை பெற்றார்.

1941 மே மாதம் 15உ ராயபுரத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் மத்தியில் இந்திய பாதுகாப்புச் சட்டத்தைமீறி யுத்த எதிர்ப்புப் பிரசங்கம் புரிந்தார் ம. பொ. சி. உடனே கைது செய்யப்பட்டு ஆறுவார கடுங் காவல் தண்டனை விதிக்கப்பட்டார்.

1942-ல் ஆகஸ்டு மாதம் 13உ, சட்ட விரோதமான தென்று அறிவிக்கப்பட்டுவிட்ட சென்னை ஜில்லா காங் கிரஸ் கமிட்டியின் செயலாளராக இருந்துகொண்டு சர்க்காரைக் கவிழ்க்க சதி செய்வார் என்ற சந்தேகத்தின்பேரில் கவர்னர் ஜெனரலின் உத்தரவுப்படி கைது செய்யப்பட்டார். 15 மாதங்கள் சென்னை, வேலூர், தஞ்சை, அமராவதி (மத்திய மாகாணம்) ஆகிய ஊர்களிலுள்ள சிறைகளில் மாறி மாறி காவலில் வைக்கப்பட்டார். அமராவதி சிறையில் சுமார் 11 மாத காலம் அடைபட்டிருந்தபோது, அந்தச் சிறையில் தரப்பட்ட உணவு பிடிக்காததாலும், மததிய மாகாண சீதோஷ்ண நிலை அவரது உடம்புக்கு ஒத்துக்கொள்ளாததாலும் கடுமையான நோய்வாய்ப்பட்டார். அமராவதி சிறைக்கு வெளியேயுள்ள இர்வின் ஆஸ்பத்திரியில் வைத்து சிகிச்சை தந்தனர் அதிகாரிகள். இந்த சிகிச்சையாலும் உடல்நிலை சீர்படாததால், ம. பொ. சி. யை வேலூர் சிறைக்கு மாற்றினர். பின்னர் அங்கிருந்து தஞ்சை சிறைக்கு அனுப்பப்பட்டார். சிறை புகும் போது 119 பவுண்டாக இருந்த அவரது உடல் நிறை 88 பவுண்டாக குறைந்துவிட்டது. இனி பிழைக்கமாட்டார் என்ற நிலையில், சிறை டாக்டர் ஆலோசனையின் பேரில் 6-11-43-ல் ம. பொ. சி. விடுதலையானார்.

விடுதலையாகி இரண்டாண்டுகள் வரை ம. பொ. சி. நடக்கவும் சக்தியின்றி மரணத்தின் நிழலில் வாழ்ந்து வந்தார். பின்னர் அவரது உடல்நிலை சிறிதளவு சீர் பெற்றது. எனினும், இன்னும் முன்பிருந்த பலத்தைப் பெற்றாரில்லை.

## தொழிலாளர் தலைவர்

ம. பொ. சி., தொழிலாளிக் குடும்பத்தில் பிறந்து, தொழிலாளியாகவே வாழ்க்கை நடத்தி வருவதோடு, தொழிலாளருக்குத் தலைவராகவும் விளங்கி வருகிறார். சென்னை அச்சுத் தொழிலாளர் சங்கம், ராயபுரம் கணேஷ் அலுமீனியம் தொழிலாளர் சங்கம் ஆகியவற்றின் துணைத் தலைவராகவும், வடசென்னை பித்தான் (Button) தொழிலாளர் சங்கம், 'தமிழ்நாடு' அச்சுக்கூட தொழிலாளர் சங்கம் ஆகியவற்றின் தலைவராகவும், கள்ளிறக்கும் தொழிலாளர் சங்கத்தின் செயலாளராகவும் இருந்து பாட்டாளி மக்களுக்குப் பணி புரிந்திருக்கிறார்.

சென்னையில் நடைபெற்ற திருவொற்றியூர் விம்கோ தீக்குச்சித் தொழிற்சாலை, பக்கிங்காம் அண்டு கர்னாட்டிக் மில்கள், ராயபுரம் கணேஷ் அலுமீனியம் தொழிற்சாலை, 'தமிழ்நாடு' பத்திரிகாலயம் ஆகிய பல்வேறு தொழிற்சாலைகளில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நடைபெற்ற வேலை நிறுத்தங்களை ஆதரித்துப் பிரச்சாரம் செய்திருக்கிறார்.

1933-ல் சென்னை குஜராத்தி மண்டலில் நடைபெற்ற அகில இந்திய அச்சுத்தொழிலாளர் மாநாட்டைத் துவக்கி வைத்து, அச்சுத் தொழிலாளர் பட்டுவரும் அல்லல்களை அனுபவரீதியாக விளக்கிப் பேசினார். இந்த மாநாட்டில் செங்கொடியை உயர்த்தி வைத்தார் தோழர் ப. ஜீவானந்தம்.

அவரோடு ம. பொ.சி.க்கு முதன்முதலில் தொடர்பேற்பட்டது இந்த மாநாட்டில்தான். மீரத் சதி வழக்கில் விடுதலை பெற்ற காட்டே போன்ற கம்யூனிஸ்டுகளும் இந்த மாநாட்டில் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது. 1934-ல் 'தமிழ் நாடு' அச்சகத்தில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தை ம. பொ. சி.யே தலைமை தாங்கி நடத்தினர். அந்த வேலை நிறுத்தம் முறிந்துவிட்டதன் விளைவாக, அதில் ஈடுபட்ட தொழிலாளர்கள், முதலாளி விதித்த நிபந்தனைப் பத்திரத்தில் கையெழுத்திட்டு மீண்டும் வேலைக்குச் சென்றனர். ஆனால், ம. பொ. சி. அந்த நிபந்தனைகளை ஏற்க மறுத்து தன்மானத்துடன் வேலையைத் துறந்து வெளியேறினர்.

1935—36-ம் ஆண்டுகளில், கள்ளிறக்கும் தொழிலாளர்களுக்கு கல்வி கற்றுக்கொடுப்பதற்காக, தண்டையார் பேட்டையில் இரவுப் பள்ளிக்கூடம் ஒன்றைத் துவக்கி ஊதியம் வேண்டாமல், பல தொழிலாளர்களுக்கு எழுதப் படிக்கக் கற்பித்தார்.

### சமூகத் தொண்டு

பிற்பட்ட சாதியினரின் முன்னேற்றத்துக்குப் பாடு படுவதில் ம. பொ. சி. பேரார்வம் கொண்டவர். 1933-34-ல் சென்னை ஹரிஜன சேவா சங்கப் பிரச்சாரகராக இருந்து சென்னைச் சேரிகளின் சீர்திருத்தத்திற்காகவும், அந்தச் சேரிகளில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வியபிவிருத்திக்காகவும் பெரிதும் பாடுபட்டிருக்கிறார். வட சென்னை ஹரிஜன சேவா சங்கத்தின் செயலாளராக இருந்து, தீண்டாமை விலக்குப் பிரச்சாரத்தில் மிகத் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்.

பிற்பட்ட வகுப்பினர் என்ற வகையில் கிராமணி சாதியினரின் முன்னேற்றத்திற்காகவும் பாடுபட்டிருக்கிறார். அவருடைய உழைப்பின் பலனாக, அந்தச் சாதி

யைச் சேர்ந்த இளைஞர்களில் பலர், இலவசக் கல்வியும், உத்தியோகங்களும் அடைந்திருக்கின்றனர். சமது சொந்த முயற்சியாலும், நண்பர்களின் துணையாலும் 'கிராமணி குலம்' என்ற மாதம் இருமுறைப் பத்திரிகை ஒன்றை இரண்டாண்டுகள் வரை நடத்திவந்தார். கிராமணி குல மகாஜன சங்கத்தின் செயலாளராகப் பல ஆண்டுகள் இருந்து அந்த சாதி மக்களிடையே ஒற்றுமையும் நாட்டுப் பற்றும் உண்டாக்கப் பாடுபட்டிருக்கிறார்.

தமிழ் நாட்டில், நாடார் குலத்தவரிடையே தேசீய உணர்ச்சியைப் பரப்புவதற்கென்றே துவக்கப்பட்ட தேசீய நாடார் சங்கத்தின் ஆரம்பகால ஆதரவாளர்களில் ம. பொ. சி யும் ஒருவராவார். 1938-ல் மதுரையில் நடைபெற்ற தேசீய நாடார் மாநாட்டை ம. பொ. சி.தான் துவக்கி வைத்தார்.

இன்னும் மருத்துவ குலத்தார், சலவைத் தொழிலாளர், பரதவ சமூகத்தார் ஆகிய பிற்பட்ட சமூகத்தினர் நடத்திய பல மாநாடுகளில் பங்குகொண்டு அந்த சாதியினரின் முன்னேற்றத்துக்காக உழைத்திருக்கிறார்.

## மொழித் தொண்டு

தமிழ்மொழி வளர்ச்சியில் ம. பொ. சி. காட்டிவரும் ஆர்வம் நாடறிந்ததாகும். பேச்சு மேடையில் தமிழுக்கு சிறப்பளித்த பெருமக்களில் ம. பொ. சி. முதன்மையானவர். அரசியல் சாத்திரங்களைத் தமிழில் விளக்கமுடியாது என்று எண்ணியிருந்தவர்களைத் தலைகுனியச் செய்து, தமிழில்தான் அரசியலைப்பற்றி அழகாகவும் ஆவேசமாகவும் பேசமுடியும் என்ற நிலையை உண்டாக்கினர் ம. பொ. சி.

அரசியல்துறை வேறு, இலக்கியத் துறை வேறு என்ற நிலை தமிழகத்தில் நெடுங்காலமாக நிலவியிருந்தது.

அரசியல் தலைவர்கள் இலக்கியப் புலமையை அலட்சியம் செய்வதும், இலக்கியப் புலவர்கள் அரசியலை வெறுப்பதும் சகஜமாக இருந்து வந்தது. அந்த நிலைமையை மாற்றி, அரசியலையும் இலக்கியத்தையும் ஒன்ருகப் பிணைத்த பெருமை ம. பொ. சி.யின் தனியுரிமை.

சமீபகாலமாக தமிழ் நாடெங்கணும் தமிழ் உணர்ச்சி பரவி வரக் காண்கிருேம். வள்ளுவர் மாநாடு, கம்பர் மாநாடு, புறநானூறு மாநாடு, எனப் புலவர்கள் பெயராலும், அவர்கள் இயற்றிய இலக்கியங்களின் பெயராலும் மாநாடுகள் நடைபெறுகின்றன. ஆனல், ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றும், தமிழில் தோன்றிய முதற்காப்பியமுமான சிலப்பதிகாரத்திற்கு மாநாடு நடத்தப் புலவர்கள் சிந்தித்தார்களில்லை. அந்தக் குறையைப் போக்க வேண்டுமென்ற எண்ணம் ம. பொ. சி.க்கு பல ஆண்டுகளாகவே இருந்துவந்தது. ஆகவே, 1951-ம் ஆண்டு மார்ச் மாதம் 24-ந் தேதி சென்னையில் சிலப்பதிகார மாநாட்டை மிகச் சிறப்பாக நடத்திவைத்தார். இன்று பண்டிதர்களேயன்றி, பாமரர்களும் சிலப்பதிகார காவியத்தைப் பாராட்டுகிருர்களென்ருல், அதற்கு ம. பொ. சி.யே காரணமாவார். 'சிலம்பு காட்டும் செந்நெறி' என்ற தலைப்பில் தம்முடைய 'தமிழ் முரசு' பத்திரிகையில் தொடர்ச்சியாக அவர் எழுதிவந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் சிலப்பதிகாரத்தைப் பற்றிய புதிய கண்ணேட்டமாகும்.

தமிழ், தமிழர், தமிழ்நாடு என்று கூறுவதெல்லாம் குறுகிய புத்தி என எண்ணுவோர் நிறைந்திருந்த தேசீய வட்டாரத்தில் தமிழ் உணர்ச்சி பரவப் பாடுபட்டார்- இன்னமும் பாடுபட்டு வருகிருர் ம. பொ. சி.

திரு. டி. எஸ். அவினசிலிங்கம் செட்டியாரால் துவக்கி வைக்கப்பட்ட தமிழ் வளர்ச்சிக் கழகத்தில், தமிழ் எழுத்

தாளர் சங்கத்தின் சார்பாக ஓராண்டு காலம் அங்கத்தின ராக இருந்திருக்கிறார்.

தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் துணைத்தலைவராயிருந்து எழுத்தாளர் நிலை உயர ஆலோசனைகள் கூறியிருக்கிறார். சென்னை மாகாண அரசாங்கத்தாரால் அமைக்கப்பட்டுள்ள சென்னைப்பகுதி புத்தகசாலைக் கமிட்டியில் (Library Authority) நகராண்மைக் கழகத்தின் பிரதிநிதியாக அங்கம் வகித்து தமிழ்ப் புத்தகசாலை இயக்கத்தைத் திறமையாக நடத்த ஆலோசனை கூறிவருகிறார்.

ம. பொ. சி., தமிழில் பல நூல்கள் எழுதியிருக்கிறார். அவருடைய எழுத்துத் திறமை, தமிழ் மொழியின் உரை நடைக்கு பெருமை தருவதாகும். அவருடைய தமிழ் நடை தனிச் சிறப்புடையது; உணர்ச்சி வேகமும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் ஆற்றலும் படைத்தது.

ம. பொ. சி., காங்கிரஸில் பல நிர்வாகப் பொறுப்புகளை வகித்து அனுபவம் பெற்றிருக்கிறார். தம்முடைய சக்திக்கு உட்பட்ட பொறுப்புகளை மட்டுமே அவர் ஏற்பார். எடுத்துக்கொண்ட பொறுப்பை இன்னொருவர் குறைகூறுவதற்கு இடமில்லாமல் திறம்பட நிறைவேற்றுவார். சென்னை தண்டையார்பேட்டை டிவிஷன் காங்கிரஸ் கமிட்டி செயலாளராகவும், பின்னர் அக்கமிட்டியின் தலைவராகவும் இருந்து பல ஆண்டுகள் அந்தப் பகுதியில் தேசீயம் தழைக்கப் பாடுபட்டிருக்கிறார். முதல் சர்க்கிள் காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக மூன்றாண்டுகள் இருந்து சென்னை முழுவதற்கும் வழிகாட்டும் பெருமையை வட சென்னைக்குத் தேடித் தந்தார்.

1936லிருந்து இன்றுவரை சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் அங்கத்தினராகத் தொடர்ந்து பதவி வகித்து

வருகிறார். 1937-ல் அக்கமிட்டியின் துணைச் செயலாளராக வும், பின்னர் 1938 முதல் 1946 வரை ஒன்பதாண்டுகள் செயலாளராகவும் இருந்து சென்னை நகரம் காங்கிரஸ் கோட்டையென்ற சிறப்பைத் தேடித் தந்திருக்கிறார். அவர் செயலாளராக இருந்த காலத்தில்தான் நாட்டில் தனிநபர் சத்தியாக்கிரகம், ஆகஸ்டு இயக்கம் போன்ற அரசியல் கிளர்ச்சிகள் நடைபெற்றன. சென்னைக்குத் தலைமை தாங்கி அந்தக் கிளர்ச்சிகளைத் தீவிரமாக நடத்தினார்.

1941–42-ல் யுத்த பயம் காரணமாக சென்னை நகர மக்கள் வெளி ஜில்லாக்களுக்கு அகதிகளாகக் குடியேறினர். அப்பொழுது சென்னை நகரம் ஜனக் கூட்டமின்றி வெறிச்சென்று இருந்தது. நகர மக்கள் தத்தம் உடைமைகளை அப்படியப்படியே விட்டுவிட்டு போய்விட்டனர். அந்தச் சந்தர்ப்பத்தில் காந்தியடிகளின் ஆணைப்படி ஊர்காப்புப் படைகளை அமைத்து, வெளியேறிவிட்ட மக்களின் உடைமைகளைப் பாதுகாத்தது சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி. அந்தப் பணிக்குத் தலைமை தாங்கி திறம்பட நடத்தி வைத்தார் ம. பொ. சி.

அதே சந்தர்ப்பத்தில்தான், பர்மாவில் வாழ்ந்த தமிழ் மக்கள் யுத்தநிலை காரணமாக ஆயிரம் ஆயிரமாக - அணி அணியாக–தினம் தினம் சென்னை வந்து குவிந்தனர். சென்னை சென்டிரல் ஸ்டேஷனில் அவர்களையெல்லாம் வரவேற்று உதவிபுரிய நூற்றுக்கணக்கான காங்கிரஸ் தொண்டர்கள் பகுதி பகுதியாக அணிவகுத்துப் பணி புரிந்தனர். அந்தப் பணி ம. பொ. சியின் மேற்பார்வையில்தான் நடைபெற்றது.

1951-ல் ம. பொ. சி. சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் துணைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதே

ஆண்டில் தமிழ்நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டியின் அங்கத்தினராகவும் நியமிக்கப்பட்டார்.

## 'முரசி'ன் முழக்கம்

தமிழ் நாட்டில் எத்தனையோ மாத இதழ்களும், வார இதழ்களும் வெளிவந்தன; இன்னமும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவற்றில் சில இதழ்கள், தமிழ் மக்களுக்கு சிறந்த முறையில் பணியாற்றி இருக்கின்றன. ஆனால், தமிழகப் பிரிவினை, தமிழக எல்லை மீட்சி, தமிழினத்தவரின் தனிவாழ்வு ஆகிய துறைகளில் பாடுபட்டு வரும் ஒரே ஏடு 'தமிழ் முரசு' ஆகும்.

பறையொலி கேட்டு போர்முனை செல்லும் படைவீரர்களைப் போன்று சிவஞானம் எழுப்பிய முரசொலி கேட்டு வடவேங்கடத்தை மீட்க சித்தூர் மாவட்டத் தமிழர்களும், தென்குமரியை மீட்க திருவிதாங்கூர் தமிழர்களும் போராடத் துவங்கினர். "குமரியைக் கொள்ளை கொடோம்!" - "வேங்கடத்தை விடமாட்டோம்!" என்ற கோஷங்களை வடக்கு - தெற்கு எல்லைகளிலுள்ள ஒவ்வொரு தமிழரும் இன்று கோஷிக்கக் கேட்கிறோம். அது போலவே, "மதராஸ் மனதே" என்று ஆந்திரர் ஆரவாரித்த போது "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்!" என்று சென்னைத் தமிழரேயன்றி, செந்தமிழ் நாட்டாரனைவரும் முழங்கினர். இந்தக் கோஷங்களை முரசின் மூலம் எழுப்பியவர் தலைவர் ம. பொ. சி. ஆவார். அவர் நடத்திவரும் 'தமிழ் முரசு' இல்லையேல் தமிழருக்கென ஒரு தனி இயக்கம் தோன்றியிராதென்று துணிந்து கூறலாம்.

திரு. ம. பொ. சி. பங்குகொண்ட அரசியல்—இலக்கிய மாநாடுகள் கணக்கில. அவற்றில், தமிழகத்தின் வர

லாற்றுக்கு சிறப்பளித்த மாநாடுகள் சிலவற்றைக் குறிப்பிடுவோம்:

*1945* பிப்ரவரி-மீ 4-உ தண்டையார்பேட்டையில் நடைபெற்ற முதல் சர்க்கிள் காங்கிரஸ் ஊழியர் மாநாட்டிற்கு ம. பொ. சி. தலைமை வகித்தார். பாகிஸ்தான் கோரிக்கை விஷயத்தில், காங்கிரஸ் மேலிடத்தவரோடு கொண்ட கருத்து வேற்றுமை காரணமாகக் காங்கிரஸிலிருந்து முற்றும் விலகியிருந்த ராஜாஜி, ம. பொ. சியின் வற்புறுத்தலுக் கிணங்க, இந்த மாநாட்டில் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினர். திரு. ம. பொ. சி. தமது தலைமை உரையில், தமிழ்நாட்டு காங்கிரஸ் வேலைகளுக்கு மீண்டும் ராஜாஜி தலைமை தாங்க வேண்டுமென்று வற்புறுத்தினர். இந்த மாநாடு ராஜாஜி ஆதரிப்பு இயக்கத்திற்கு துவக்கவிழாவாக இருந்தது.

*1947* நவம்பர்-மீ 9-உ சென்னை செயின்ட் மேரீஸ் மண்டபத்தில் நடைபெற்ற தமிழரசுக் கழக மாநாடுதான், தமிழினத்தின் வரலாற்றில், "சோஷலிஸத் தமிழ்க் குடியரசு" கோரி நடைபெற்ற முதல் மாநாடாகும். அம்மாநாட்டிற்குத் தலைமை தாங்கி, தமிழகத்தின் அரசுரிமைக் கிளர்ச்சியைத் துவக்கி வைத்தார் ம. பொ. சி.

*1948* ஜனவரி 18, 19 தேதிகளில் கோவையில் நடைபெற்ற தமிழ் மாகாண அரசியல் மாநாடு, ம. பொ. சியின் வரலாற்றோடு மிகமிக நெருங்கிய தொடர்புடையதாகும். அம்மாநாட்டின் தலைவர் தேர்தலில் ம. பொ. சி.யும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. கே. காமராஜரும் போட்டியிட்டனர். தாம் போட்டியிடுவதற்கான காரணங்களை விளக்கி பத்திரிகைகளில் ஒரு அறிக்கை வெளியிட்டு, அந்த அறிக்கையை அச்சிட்டு வாக்காளர்களுக்கும் அனுப்பியதைத் தவிர, தேர்தலில் வெற்றி பெறுவதற்

கான எந்த முயற்சியையும் அவர் மேற்கொள்ளவில்லை. அப்படியிருந்தும், மொத்தம் பதிவான வாக்குகளில் மூன்றில் ஒரு பங்குக்கு அதிகமான வாக்குகள் ம. பொ. சிக்குக் கிடைத்தன.

1948 ஜூலை 7உ சென்னை செயின்ட் மேரீஸ் மண்டபத்தில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு சர்வ கட்சி மாநாட்டில் கலந்து கொண்டு, பள்ளி மாணவர்களுக்கு முதல் மூன்று பாரங்களில் இந்தி மொழியைக் கட்டாய பாடமாக வைப்பதை ஆட்சேபித்துப் பேசினர். இந்த மாநாட்டில் பங்கு கொண்டதற்காக ம. பொ. சி. மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து, காங்கிரசிலிருந்து அவரை வெளியேற்ற வேண்டுமென்று சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி தீர்மானித்ததும், தமிழ்நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டி அந்தத் தீர்மானத்தை அமுல் நடத்த மறுத்து விட்டதும் நாடறிந்த விஷயம்.

1949 ஏப்ரல் 23உ ஹட்டனில் நடைபெற்ற இலங்கை இந்தியர் காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டு எட்டு லட்சம் இலங்கை இந்தியத் தொழிலாளர்களுக்கு இலங்கை அரசாங்கம் இழைத்துவரும் கொடுமைகளைக் கண்டித்து சொற்பொழிவாற்றினர். அந்தச் சொற்பொழிவின் சில பகுதிகள் "இந்தியா - இலங்கை அரசியல் உறவை பாதிக்கக் கூடியவை" என்று, இலங்கை அரசாங்கத்தார் இந்திய அரசினரிடம் புகார் செய்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

1949 நவம்பர்-மீ 5உ சென்னை கார்ப்பரேஷன் ஸ்டேடியத்தில் நடைபெற்ற தமிழக எல்லை மாநாட்டில், வரவேற்புக் குழுச் செயலாளராக இருந்து, அம்மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி வைத்தார் ம.பொ. சி. சர்வ கட்சியினரும் கலந்துகொண்ட அம்மாநாட்டில், "வடவேங்கடம் தென்

குமரிக்கு இடைப்பட்ட தமிழ் நிலத்தைத் தனி மாகாண மாக்கி, தமிழை அரசு மொழியாகச் செய்ய வேண்டும்'' என்ற தீர்மானத்தை ம. பொ. சி. யே பிரேரேபித்துப் பேசினர்.

அதே ஆண்டில், அதே மாதம் 11-ந் தேதி திருத் தணிகையில் நடைபெற்ற வடக்கெல்லை மாநாட்டில் தலைமை தாங்கி, "வேங்கடத்தை விடமாட்டோம்!'' என்று வீரமுழக்கம் செய்தார்.

1950 ஜனவரி 6உ குமரிமுனையில், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களை வரவேற்புக் குழுத் தலைவ ராகக் கொண்டு நடைபெற்ற தெற்கெல்லை மாநாட்டில், தமிழக நிலப் படத்தைத் திறந்துவைத்து "குமரியைக் கொள்ளை கொடோம்!'' என்று கோஷித்தார்.

1951 மார்ச் 23உ சென்னை ராயப்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் நடைபெற்ற திராவிட இயக்க எதிர்ப்பு மாநாட்டிற்குத் தலைமை தாங்கினர். அவருடைய தலைமை யுரை, தமிழ் நாட்டு அரசியலிலேயே பெரிய பரபரப்பை உண்டாக்கிய தெனலாம்.

1951 மே 26-ல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் விழாவில், "சிலம்பு காட்டும் செந்நெறி'' என்ற பொருள் பற்றிப் பேசினர். இம்மாநாடு, இலங்கைத் தமிழகத்துக் கும் இந்தியத் தமிழகத்துக்கும் கலாச்சார உறவை ஏற் படுத்திய முதல் மாநாடாகும்.

1951 ஜூன் மாதம் 17-ந் தேதி வீரக்கண்ணகி பிறந்த ஊராகிய காவிரிப்பூம்பட்டினத்தில் டாக்டர் ஆர். கே. சண் முகம் தலைமையில் நடைபெற்ற சிலப்பதிகார மாநாட்டில், "வேந்தனை எதிர்த்த வீரப் பெண்'' என்ற தலைப்பில் அரியதோர் சொற்பொழிவாற்றினர்.

**கோட்டைக்குள்ளே........**

1948 ஜனவரி 19உ கோவையில் நடைபெற்ற தமிழ் மாகாண அரசியல் மாநாட்டில்,

> "இந்தியாவை மொழிவழி மாகாணங்களாக பிரிப்பதோடு, தமிழ் வழங்கும் பகுதிகளை ஒன்று சேர்த்து தனி மாகாணமாகச் செய்ய வேண்டும்"

என்று காங்கிரஸ் மேலிடத்தாரைக் கோரும் தீர்மானத்தை, அமைச்சர் எம். பக்தவத்சலம் பிரேரேபித்தார். அவ்வமயம்,

> "...பிரிக்கப்படும் தமிழ் மாகாணம், திருப்பதி மலையை வடக்கெல்லையாகவும், குமரி முனையைத் தெற்கெல்லையாகவும் கொண்டிருக்க வேண்டும். மேலும், அம்மாகாணம், **சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சோஷலிஸத் தமிழ்க் குடியரசாக விளங்குவதற்கு தமிழ்நாடு காங்கிரஸ் பாடுபட வேண்டும்."**

என்ற திருத்தத்தை ம. பொ. சி. பிரேரேபித்தார். மாநாட்டுத்தலைவர் கே. காமராஜர், திருத்தத்தின் முதற்பகுதியை அங்கீகரித்துக் கொண்டு, பிற்பகுதி காங்கிரஸின் அடிப்படைக் கொள்கைகளுக்குப் புறம்பானதென்று கூறி நிராகரித்தார். நிராகரித்த பகுதி காங்கிரஸ் கொள்கைகளுக்குப் பொருந்தியதே என்றும், அதை விளக்கிப் பேச சந்தர்ப்பமளிக்குமாறும் ம. பொ. சி. கோரினர். மாநாட்டுத் தலைவர் அனுமதிக்க மறுத்தார். இதனால் மாநாட்டில் சுமார் அரைமணி நேரம் குழப்பம் நிலவியது. திருத்தத்தின் மீது ம. பொ. சி. பேசியே ஆகவேண்டுமென்று பிரதிநிதிகளில் பெரும்பாலோர் ஆரவாரம் செய்தனர். மாநாடு குழப்பத்தில் கலைந்துவிடுமோ என்று அஞ்சவேண்டிய நிலைமை ஏற்பட்டது. உடனே காங்கிரஸின் கட்டுப்பாட்டையும் கௌரவத்தையும் காக்க எண்ணி, தம்முடைய சகாக்களை சாந்தப்படுத்தி, தலைவரின் தீர்ப்பு தமக்கு

பிடிக்காமலிருந்தும் மாநாட்டில் அமைதி நிலவச் செய்வதற்காக, அதை அங்கீகரித்துக் கொண்டார் ம. பொ. சி.

## காந்தியடிகளின் ஆசி

ம. பொ. சி., காந்தியடிகளிடம் கரைகாணா அன்புடையவர். சமூகம், பொருளாதாரம் ஆகிய துறைகளில், ம. பொ. சி. புரட்சிகரமான கருத்துக்களை உடையவர் என்ருலும், நடைமுறையில் காந்தீயப் பாதையிலிருந்து விலகாதவர். 1934-ம் ஆண்டில் காந்தியடிகள் சென்னை வந்தபோது, அவரை வரவேற்பதற்காக வடசென்னையில் நியமிக்கப்பட்ட குழுவிற்கு ம. பொ. சி. செயலாளராக இருந்து பணி புரிந்தார்.

1946-ம் ஆண்டில் மீண்டும் காந்தியடிகள் சென்னை வந்திருந்தபோது, தியாகராய நகரில் அவர் தங்கியிருந்த இல்லத்திலேயே, ராஜாஜியால் காந்தியடிகளுக்கு ம. பொ. சி. அறிமுகம் செய்து வைக்கப்பட்டார். அவ்வமயம், ம. பொ. சி-யின் பொதுநல சேவையை ராஜாஜியின் மூலம் கேட்டறிந்த காந்தியடிகள் அவரை மனமார வாழ்த்திஞர்.

திருப்பாதிரிப்புலியூர் தமிழ்க்கடல் ஞானியாரடிகளோடு, அவரது இறுதிக் காலத்தில் ம. பொ. சி. நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். ம. பொ. சி. பெற்றுள்ள பேச்சாற்றலுக்கு ஞானியாரடிகளின் தொடர்பே பெருங் காரணமாகும். மற்றும், இந்தியாவின் தலைசிறந்த ராஜதந்திரியான ராஜாஜியோடு ம. பொ. சி-க்கு உள்ள தொடர்பு நாடறிந்ததாகும்.

## வீர வழிபாடு

வீரபாண்டியக் கட்டபொம்மன், கப்பலோட்டிய தமிழர் வ. உ. சி. ஆகிய மாவீரர்களின் புகழைப்பாடல்களிடையே

மதுரை காமராசர் ... அவ்வை ... சண்முகம் நூலகம்.

பரப்பிவரும் பெருமை ம. பொ. சி-க்கே உரியது. ம. பொ. சி. எழுதிய "வீரபாண்டியக் கட்டபொம்மன்", "கப்ப லோட்டிய தமிழன்" என்ற நூற்களைப் படித்துப் பாராட் டாத தமிழர் இல்லை. கட்டபொம்மன் வரலாற்றை, ம. பொ. சி. எழுதுவதற்கு முன்னர், அம்மாவீரன் ஒரு கொள்ளைக்காரனுகவும், படுகொலைகள் பல செய்த பாதக னுகவுமே மக்களுக்கு அறிமுகப்படுத்தப் பட்டிருந்தான். அந்த இழிநிலையை தமது எழுதுகோலால் மாற்றி வீர பாண்டியன் அப்பழுக்கற்ற ஒரு சுதந்தர வீரன்—அவன் நடத்திய பாஞ்சைப் புரட்சிதான் இந்திய சுதந்தரப் போரின் முதல் கட்டம் என்ற உண்மைகளை வருஷம், மாதம், தேதியோடு நிரூபணம் செய்தார் ம. பொ. சி. ஆம்; வரலாற்றுப் பேராசிரியர்களெல்லாம் செய்யத் தவறிய ஒன்றை, தாம் செய்ததன் மூலம் தமிழினத்துக்கு அழி யாப் புகழ் தேடிவிட்டார் ம. பொ. சி. அதுமட்டுமல்ல; இந்தியாவின் சுதந்தர வரலாற்றை 1857ல் நிகழ்ந்த சிப் பாய்ப் புரட்சியிலிருந்தே எழுதுவதென்று இந்திய அர சாங்கத்தார் தீர்மானித்திருந்தனர். அதை எதிர்த்து சிப் பாய்ப் புரட்சிக்கு அறுபது ஆண்டுகளுக்கு முன்னே நிகழ்ந்த பாஞ்சைப் புரட்சியிலிருந்துதான், இந்திய சுதந் தர வரலாறு எழுதப்பட வேண்டுமென்று, மேலிடத்து அரசினருக்குக் கடிதம் எழுதினுர் ம. பொ. சி. தலைவர் ம. பொ. சி. எடுத்துக்காட்டிய உண்மைகளை உணர்ந்த வரலாற்றுக் குழுவினரும், டில்லி அரசினரும் அவருடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டு விட்டதாகப் பதில் விடுத்தனர். இந்திய சுதந்தர வரலாற்றுப் புத்தகத்தில் தமிழ்நாட்டுக்கு முதலிடம் தேடித்தந்த ம. பொ. சி.யின் சேவை என்றென்றும் மறக்க முடியாததாகும்.

வீரபாண்டியன் மறைந்து 150 ஆண்டுகளுக்குப் பிறகு, அதாவது 1949-ஞ அக்டோபர்-மீ 23உ யன்று

கயத்தாறில் அவ்வீரன் தூக்கிலிடப்பட்டு அவனுடைய உடல் அடக்கம் செய்யப்பட்ட சமாதி முன்பு தேசியக் கொடியை உயர்த்தி முதன் முதலாக வீரபாண்டியன் நினைவு விழாவைத் துவக்கி வைத்தார் ம. பொ. சி.

1949 டிசம்பர் 21உ சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் துணைகொண்டு, ராயப்பேட்டை காங்கிரஸ் மண்டபத்தின் முன்பு, வ. உ. சி.யின் முகவுருவச் சிலை ஒன்றை அமைத்தார் ம. பொ. சி.

## நகரசபை ஆல்டர்மேன்

1948 நவம்பர் 19உ ம. பொ. சி. சென்னை கார்பபரேஷன் 'ஆல்டர்மேன்' ஆக தேர்ந்தெடுக்கப்பட்டார். 1949 அக்டோபர் 6உ, "சென்னை நகரம் தமிழ் நாட்டிலேயே சேர்க்கப்படவேண்டும். அதைப் பொது நகரமாக்குவதோ, தனி மாகாணமாகச் செய்வதோ கூடாது" என்ற தீர்மானம் சென்னை கார்ப்பரேஷனில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானம் நிறைவேறுவதற்கு ம. பொ. சி.யின் பெருமுயற்சியே காரணமாகும். அன்று கவுன்ஸிலில் தீர்மானத்திற்கு எதிராகப் பேசிய சிலரும், ம. பொ. சி. நிகழ்த்திய உருக்கமான சொற்பொழிவைக் கேட்ட பின்னர், தீர்மானத்திற்கு சாதகமாக வாக்களித்தது குறிப்பிடத்தக்கது.

## தமிழரசு இயக்கத்தின் தந்தை

சுதந்தர இந்தியாவில், சுதந்தரத் தமிழரசு காண வேண்டுமென்ற பேரார்வத்தால் 1946-ல் நவம்பர் 21உ தமிழரசுக் கழகத்தை ஸ்தாபித்தார். 1947 ஆகஸ்ட் 15உ சென்னையில் சுதந்தரநாளைக் கொண்டாடிவிட்டு, மறுநாள் 24 தோழர்களுடன், தமிழகத்தின் வடக்கெல்லையான திருப்பதி மலையை ஆந்திரர்களிடமிருந்து மீட்பதற்கு அங்கு வாழும் மக்களிடையே ஆதரவு தேட எட்டு

நாட்கள் சித்தூர் ஜில்லாவில் பிரசார யாத்திரை செய்தனர். திருத்தணி, புத்தூர், திருப்பதி (சந்திரகிரி) ஆகிய தாலுக்காக்களில், "வேங்கடத்தை விடமாட்டோம்!" என்ற கோஷத்தை வீதி தோறும் முழக்கினர். திருத்தணி, திருப்பதி ஆகிய ஊர்களில் நடைபெற்ற கூட்டங்களில் ஆதிக்க வெறி படைத்த சில ஆந்திரர்கள் குழப்பம் விளைவிக்க முயன்றபோதும், ஆத்திரப்படாமல் அன்புவழி நின்று அவர்களுக்கு அறிவுரை கூறினர். தமிழரசு இயக்கம் துவங்குவதற்கு முன்னர், சித்தூர் ஜில்லா தமிழ்ப் பகுதிகளை மீட்க தமிழர் எவரும் சிந்தித்தாரில்லை. ஆனால், ம பொ. சி. செய்த கிளர்ச்சியின் பயனாக சித்தூர் ஜில்லா தமிழ்ப்பகுதி, தமிழகத்தோடு சேர்க்கப் பட வேண்டுமென்ற உணர்ச்சி இன்று ஒவ்வொரு தமிழரிடையேயும் ஏற்பட்டுவிட்டது. அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட ஆந்திரப் பிரிவினைக் கமிட்டியும், ஆந்திர மாகாண காங்கிரஸ் கமிட்டியும் சித்தூர் ஜில்லா தமிழ்ப் பகுதிகளை தமிழ்நாட்டோடு சேர்க்கும் பிரச்னையை எல்லைக் கமிஷனுக்கு விட ஒப்புக்கொண்டு விட்டன. இன்றில்லாவிடினும் என்றேனும் ஒருநாள் குமரி முனையும் — திருப்பதி மலையும் தமிழரசின் தெற்கு வடக்கு எல்லைகளாக அமையுமானல் அதற்காகப்பாடுபட்ட பெருமை ம. பொ. சி.யையே சாரும்.

## ராஜாஜி தலைமைக்கு ஆதரவு

ம. பொ. சி.க்கு காங்கிரசிடம் உள்ள பற்று, கற்புடைய ஒருத்தி தன் கணவன்மீது வைத்திருக்கும் பக்தி போன்றதாகும். ஒரு சில காங்கிரஸ் தலைவர்கள், காங்கிரஸ் கட்டுப்பாட்டுக்கு விரோதமாக நடந்துகொண்ட போதெல்லாம் அவர்களுடைய போக்கை எதிர்த்துப் போராடியிருக்கிருர் ம. பொ. சி. சான்ருக, தமிழ்நாட்டின் தனிப்பெருந் தலைவர் ராஜாஜியின்பால் ம. பொ. சி-க்கு

மிகுந்த மதிப்புண்டு. ஆயினும், அப்பேரறிஞர் காங்கிரஸ் அங்கீகரிக்க மறுத்த பாக்கிஸ்தான் கோரிக்கைக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்தபோது அவருக்கு எதிர்ப்பிரச்சாரம் செய்தார் ம. பொ. சி. பிறகு பாக்கிஸ்தான் கோரிக்கையை காந்தியடிகளும், காங்கிரசும் கொள்கையளவில் ஒப்புக்கொண்டதன் விளைவாக ராஜாஜி மீண்டும் காங்கிரசில் சேர முன்வந்தபோது, அவரை மனப்பூர்வமாக வரவேற்று காங்கிரஸ் வேலைகளுக்கு அவர் தலைமை தாங்க வேண்டுமென்றார்.

ராஜாஜியின் தலைமையை விரும்பாத சிலர், ம. பொ. சி. மீது தங்களுக்கு நம்பிக்கை இல்லையென்றும், சென்னை ஜில்லா காங்கிரஸ் செயலாளர் பதவியிலிருந்து அவரை நீக்க வேண்டுமென்றும், சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியில் தீர்மானம் கொண்டு வந்தனர். கமிட்டிக் கூட்டத்தில் ஆஜராகியிருந்த 28 அங்கத்தினர்களில் 7 பேர் மட்டுமே தீர்மானத்துக்கு சாதகமாக வாக்களித்தனர். ஆகவே, தீர்மானம் படுதோல்வியுற்றது.

### தார் கமிஷன் முன் சாட்சியம்

தென்னிந்தியாவையும் மத்திய இந்தியாவையும், மொழிவழி மாகாணங்களாகப் பிரிக்க வேண்டியது அவசியமா? அவசியமாயின், பிரிக்கப்படும் மாகாணங்களின் பொருளாதார நிலை எப்படி இருக்கும்? அவற்றின் எல்லைகள் யாவை? என்பவை பற்றி விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்க மேலிடத்து அரசினர் திரு. தார் என்பாரின் தலைமையில் ஒரு கமிஷன் அமைத்தனர். அக்கமிஷன் சென்னை வந்தபோது அறிஞர் பல்லோர் அதன் முன்பு சாட்சியம் அளித்தனர். அவ்வமயம், திரு. ம. பொ. சி. யும் கமிஷன் முன்பு சாட்சியம் கொடுத்தார். அவர் தமது சாட்சியத்தில், மொழிவழி மாகாணங்கள்—குறிப்பாக, தமிழ் மாகாணம்

உடனடியாகப் பிரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை யும், அவசரத்தையும் வற்புறுத்தினர். பிரிக்கப்படும் தமி ழகத்திற்கு சென்னை தலை நகராகவும், வடவேங்கடமும் தென் குமரியும் அதன் வடக்கு தெற்கு எல்லைகளாகவும் அமைய வேண்டுமென இலக்கியச் சான்றுகளுடனும் புள்ளி, விபரங்களுடனும் வற்புறுத்தினர்.

அது மட்டுமன்றி, அமையவிருக்கும் மொழிவழி மாகாணங்கள்—ஏன் இந்திய மாகாணங்கள் அனைத்துமே சுயாட்சி மாகாணங்களாக இருக்கவேண்டு மென்றார். அயல் நாட்டு அரசியல் உறவு, உள்நாட்டு பாதுகாப்பு, போக்குவரத்து ஆகிய விஷயங்கள் மட்டும் மத்திய அர சாங்கத்துக்கு உரியனவாகவும், மிச்ச அதிகாரங்கள் உட் பட இதர எல்லா அதிகாரங்களும் மாகாணங்களுக் குரியன வாகவும் இருக்க வேண்டுமென்று கூறினர். மாகாண சுயாட்சியை வற்புறுத்தி சாட்சியம் கொடுத்தவர் ம. பொ. சி. ஒருவர்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

### மேல் சபை உறுப்பினர்

கடந்த இருபத்தாறு ஆண்டுகளில் காங்கிரஸ் ஈடு பட்ட சட்டசபை—ஸ்தலஸ்தாபன தேர்தல்களிலெல்லாம் ம. பொ. சி. பிரதான பிரச்சாரகராக இருந்து வந்திருக் கிறார். கனல் பறக்கும் அவருடைய பேச்சுக்களைக் கேட்டு காங்கிரஸின் எதிரிகள் கதிகலங்கியதுண்டு. காங்கிரஸ் அபேட்சகர் தோற்பது நிச்சயம் என இருந்த பல தொகுதி களில் ம பொ. சி. தமது பேச்சு வன்மையால் வெற்றி தேடித் தந்திருக்கிறார். ஆயினும், 1951-ம் ஆண்டுவரை, அவர் எந்தத் தேர்தலிலும் காங்கிரஸ் அபேட்சகராக நிற்க முன் வந்ததில்லை.

1946-ல் சென்னை அசெம்பிளிக்கு நடைபெற்ற பொதுத்தேர்தலில் ராஜாஜியின் ஆலோசனையின் பேரில்

அவர் வட சென்னைத் தொகுதியில் போட்டியிட காங்கிரஸ் பார்லிமெண்டரி கமிட்டியாருக்கு மனு செய்து கொண்டார். கமிட்டியாரும் ம. பொ. சி. யை காங்கிரஸ் அபேட்சகராக ஏற்குமாறு மேலிடத்தாருக்கு ஏகமனதாக சிபாரிசு செய்தனர். ஆனால், ம. பொ. சி.க்குப் பதிலாக ஒரு ஆந்திர காங்கிரஸ்காரரை வட சென்னைத் தொகுதியில் நிறுத்தி வைத்தனர் காங்கிரஸ் மேலிடத்தார். அந்நாளில் ம. பொ. சி. சுயேச்சையாளராக நின்று போட்டியிட வேண்டுமென்று காங்கிரஸ் பிரமுகர்களிலேயே பலர் வற்புறுத்தினர். சிலர் பண உதவி செய்யவும் முன் வந்தனர். காங்கிரசுக்கு எதிராக நின்ற ஒரு பெரிய பணக்காரர் தாம் விலகிக்கொண்டு ம. பொ. சி. யை ஆதரிப்பதாகவும் கூறினர். ஆயினும், வளர்த்த கடா மார்பில் பாய்வது போன்ற துரோகச் செயலில் ஈடுபட ம. பொ. சி. விரும்பவில்லை. ஆகவே, தாம் போட்டியிடாததோடு, தமக்குப் பதிலாக நிறுத்தி வைத்த ஆந்திர அபேட்சகருக்காக முழு மூச்சுடன் பாடுபட்டு அவர் வெற்றிபெறச் செய்தார்.

1952 ஜனவரியில் நடைபெற்ற குடியரசு இந்தியாவின் முதல் தேர்தலில் ம. பொ. சி. மனுச் செய்துக்கொள்ளாதபோதும், அவர் காங்கிரஸ் சார்பில் நிற்க வேண்டுமென்று தமிழ்நாடு காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டார் அவருக்கு அழைப்பு விடுத்தனர். தேர்தலில் நின்று தாம் வெற்றி பெறுவதை விட, காங்கிரசுக்கு வெற்றி தேடித்தர நாடு முழுவதும் சுற்றிப் பிரச்சாரம் செய்வதையே அவர் தமது முக்கிய கடமையாகக் கருதி, தேர்தலில் நிற்க மறுத்து விட்டார். ஆயினும், திரு. ம. பொ. சி.யின் சேவையை பார்லிமெண்டரி துறையிலும் பயன்படுத்திக் கொள்ள நினைத்து தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜரும், பார்லிமெண்டரி போர்டாரும் சென்னை

மேல்சபைத் தேர்தலில் அசெம்பிளித் தொகுதிக்கு அவரை ஒரு அபேட்சகராக நிறுத்தினர். அந்தத் தேர் தலில் போதுமான அளவுக்கு வாக்குகள் பெற்று ம. பொ. சி. மேல் சபையின் அங்கத்தினராகத் தேர்ந் தெடுக்கப் பட்டார்.

தலைவர் ம. பொ. சி., ஒழுக்கமுள்ள பாட்டாளி; காங் கிரஸின் பிரச்சார பீரங்கி; வறுமையிற் செம்மை கண்ட வள்ளல்; உணர்ச்சியின் உருவம்; தமக்கே உரிய தனிப் போக்கினர்; செல்லுஞ் சொல் வல்லார்; மாசற்று வாழும் மதிப்புடையார்; தியாகிகளைப் போற்றும் தியாகி; சிலம் பொலி செய்யும் செந்நாப் போதார்; தமிழகத்தின் தனிக் குரல்; இளைஞர்களின் இணையற்ற தலைவர்; தண்டமிழ் மேதை; தமிழ் செய்த தவம்; கலங்கா நெஞ்சுடைய கர்ம வீரர்; லட்சியவாதி; புதுயுகத் தலைவர் என்றெல்லாம் போற்றிப் புகழ்மாலை சூட்டுகின்றனர் ம. பொ. சி.யை நன் கறிந்த பெரியார்கள்.

**தலைவர் ம. பொ. சி. வாழ்க!**

★





4-11-50ல் சென்னை ஸ்டேடியத்தில் நடை பெற்ற தமிழக எல்லைப் பாதுகாப்பு மாநாட்டில், "வட வேங்கடம்-தென் குமரி தமிழ் நாட்டின் எல்லைகள்" எனக் கூறும் தீர்மானத்தை ம. பொ. சி. பிரரேபிக்கிருர்.


ராஜாஜியும்
ம. பொ. சியும்




9-11-47ல் சென்னை செயின்ட் மேரிஸ் மண்டபத்தில் நடைபெற்ற தமிழரசுக் கழக மாநாட்டின் தலைவர் ம. பொ. சி. வரவேற்புக்குழு தலைவர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் முதலியோரைப் படத்தில் காணலாம்.



திரு. ம. பொ. சியும் கலைஞர்கள் டி. கே. ஷண்முகம், டி. கே. பகவதி, என். எஸ். கிருஷ்ணன், டி. எஸ். பாலையா, எம். கே. தியாகராஜ பாகவதர் ஆகியோரும்.



26-ம் வயதில் ம. பொ. சி.



40-ம் வயதில் ம. பொ. சி.





கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையும், திரு. ம. பொ. சியும் சங்ககாலத் தமிழ் இலக்கியங்களின் சிறப்புப் பற்றி உரையாடுகின்றனர்.

★

திரு. ம. பொ. சியும் இந்நூலின் தொகுப்பாளர் சோம சுவாமிநாதனும்.





தலைவர் ம. பொ. சி. யும்
அவரது குடும்பமும்

# ஒழுக்கமுள்ள பாட்டாளி!

— டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு **M. L. A.**

'ம. பொ. சி.' என்று தமிழ்நாடெங்கும் வழங்கப் பட்டு வரும் திரு. ம. பொ. சிவஞான கிராமணியாரை அறியாதார் இல்லை. இந்தத் தமிழ்ப் பெரியாரை நன்கு அறிந்தவர்களில் நானும் ஒருவன். என்னுடைய "தமிழ் நாடு" காரியாலயத்தில், அச்சுக் கூடப் பிரிவில் திரு. சிவஞானம் பல வருஷங்கள் வேலை செய்து வந்தார். பாட்டாளியாக இருந்த அக்காலத்தில், இவர் நல்ல ஒழுக்கத்துடன் வேலை செய்து வந்ததை மட்டும் அறிந்திருந்தேன். கல்வியில் இவ்வளவு உயர் நிலைக்கு வருவாரென்று நான் எதிர்பார்க்கவில்லை. நான் மட்டுமல்ல; அப்போது அவரை அறிந்திருந்த யாருமே எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் 1942-43ல் இவர் அமராவதி (மத்திய பிரதேச) சிறையில் நோயுற்றிருந்த போது, இவர் விஷயமாக கவர்னரையும், பிரிட்டிஷ் மந்திரி ஒருவரையும் நான் கண்டு பேசி, இவரை வேலூர் சிறைக்கு மாற்றும்படி கேட்டபோதுதான் திரு. ம. பொ. சி.யின் சுதந்திர உணர்ச்சி எனக்குப் புலப்பட்டது. "ம. பொ. சி. மிகவும் அபாயகரமான அரசியல் வாதி!" என்று கவர்னர் கூறினர். எனது மனம் குதூகலமடைந்தது. திரு. சிவஞானம் பேசுவதை முதல் தடவை

யாக, சென்னையில் சமீபத்தில்தான் கேட்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது.

இவருடைய மேடைத் தமிழையும், பேச்சின் கருத்துக்களையும் கேட்டு மகிழ்ச்சி யடைந்தேன். இவர் மிக மிக உயர்ந்த தமிழன் என்பது எனது தெளிவான கருத்தாகும். ம. பொ. சி. எழுதியிருக்கும் ஒரு சில புத்தகங்களையும் படித்திருக்கின்றேன். பாட்டாளியாக இருந்த இவர் எப்படி இவ்வளவு படிப்பாளியானர் என்பது ஆச்சரியம்தான்.

அர்த்தமற்ற வார்த்தைகளை அடுக்கடுக்காகப் பேசுவோரும் உண்டு. ஆனல், சிவஞானத்தின் பேச்சுக்கள் பொருள் நிறைந்ததா யிருப்பதுடன், தமிழர் உள்ளங்களில் ஓர் புது சக்தியை எழுப்பக் கூடிய வீராவேசம் கொண்டதாகவும் இருக்கின்றது.

ம. பொ. சி. யின் சேவை தமிழ் நாட்டுக்கு இன்றுள்ள நிலைமையில் மிகவும் அவசியம்.

பொறுப்புள்ள பதவியும், பண வசதியும் ம. பொ. சிவஞான கிராமணியாருக்கு தமிழர்கள் கொடுக்க வேண்டும். தமிழ்நாடெங்கும் அவர் சுற்றி, தமிழ் மக்களைத் தட்டி எழுப்பி, கட்டுத் திட்டமான தமிழ் சமுதாயத்தை சிருஷ்டிக்க வேண்டும் என்று திரு. கிராமணியாரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

# * பிரச்சார பீரங்கி!

—டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் எம். பி.

ம. பொ. சி., ஒப்பற்ற உண்மைத் தேசபக்தர். அவரை அறியாதவர்கள் தமிழ்நாட்டில் இல்லை எனலாம். 1927-ம் ஆண்டிலேயே அவர் தேசப்பணியில் ஈடுபட்டுவிட்டதாக எனக்கு ஞாபகம். அன்று முதல் இன்று வரை சுமார் 25 ஆண்டுகளாக தேச நலனுக்காக அவர் பட்டுவரும் கஷ்ட நஷ்டங்கள் கொஞ்சமல்ல. பல சத்தியாக்கிரகப் போராட்டங்களில் ஈடுபட்டு சிறைபுகுந்து எலும்புருவானவர். தாங்கமுடியாத அளவுக்கு உடல் நிலை பாதிக்கப்பட்டிருந்தபோது கூட, அவர் போராட்டங்களிலிருந்து ஒதுங்காமல் சிறைபுகுந்து கஷ்டப்பட்டிருக்கிறார்.

எந்தவித சுயநல நோக்கமும் இல்லாமல் தேசத்துக்குப் பாடுபடும் உயர்ந்த பண்புடையவர் ம. பொ. சி. தம் மனதில் உண்மை என்று பட்டதை எந்த சூழ்நிலையிலும் எவ்வளவு எதிர்ப்புக்கிடையேயும் அஞ்சாது எடுத்துக் கூறும் நெஞ்சுரம் வாய்ந்தவர் ம. பொ. சி. சான்றாக, ராஜாஜியின் தலைமைக்கு பலமான எதிர்ப்பு இருந்த சமயத்தில் அவரை ஆத

* 29-1-52ல் சென்னை தேனாம்பேட்டை சர்வோதயா சங்கத்தில் திரு. ம. பொ. சி. யின் உருவப் படத்தைத் திறந்து வைத்து ஆற்றிய சொற்பொழிவு.

ரித்து ம. பொ. சி. தமிழ்நாடு முழுவதும் சுற்றி வீரம் ததும்ப நிகழ்த்திய சொற்பொழிவுகள் என்னல் என்றும் மறக்க முடியாதவை.

ம.பொ.சி. வெறும்பேச்சு தேசபக்தர் அல்லர். உணர்ச்சியுள்ள தேசபக்தர். காலஞ்சென்ற தலைவர் சத்தியமூர்த்தி போன்று விவாதத் திறமையுடன் பேசும் பேச்சாளர். தேர்தல்கள் வரும்போதெல்லாம், தம் கட்சி வெற்றி பெற வேண்டுமென்று முழுமூச்சுடன் பாடுபட்டு வந்திருக்கிறார் ம.பொ. சி. ஆனல், தமக்காக பதவி வேண்டுமென்று அவர் மனதால்கூட நினைத்தது கிடையாது. ம. பொ. சி., தமிழரசுக் கழகம் என்ற ஒரு தனி அமைப்பை ஏற்படுத்திக் கொண்டு தமிழ் நாட்டுக்குத் தொண்டு செய்து வருகிறார். அவர் காங்கிரஸ்காரராக இருந்தும், தமிழகம் தனி ராஜ்யமாக வேண்டும் என்பதற்காக, எழுதியும் பேசியும் பிரச்சாரம் செய்து வருகிறார். அதற்காக, 'தமிழ் முரசு' என்ற ஒரு பத்திரிகையும் நடத்தி வருகிறார். ம. பொ. சி.யின் மனப்பண்பைப் புரிந்து கொள்ளாத சில காங்கிரஸ்காரர்கள் அவர் தமிழரசு இயக்கம் நடத்துவதற்காக அவரை எதிர்த்ததுண்டு. அந்த சமயத்தில்கூட திருவாளர் சிவஞான கிராமணியார் நிதானத்தை இழக்காமல் தமது கட்சித் தோழர்களுக்கு தக்க சமாதானம் கூறி வந்திருக்கிறார். தமிழ் நாட்டிலே சிலர், திராவிட நாடு என்ற பெயரால் இந்திய நாட்டைத் துண்டு போட விரும்புகிறார்களே அது போலன்றி, நியாயமான முறையில் மொழி அடிப்படையில் தமிழகத்தைப் பிரிக்கவேண்டும் என்பது ம. பொ. சி.

யின் எண்ணம். இதுவே, காங்கிரஸின் கொள்கையு மாகும்.

'சென்னை மனதே' என்று ஆந்திரர் ஆர்ப் பாட்டம் செய்தபோது அவர்களை எதிர்த்து ம. பொ. சி. போராடியதும், அதன் பயனாக தமிழகத்தின் தலைநகரான சென்னை பாதுகாக்கப்பட்டதும் தமிழ் மக்கள் மறக்க முடியாதவை. தமது தமிழரசுக் கழ கத்தின் மூலம் தமிழக இளைஞர்கள் வட்டாரத்தில் ஓர் புத்துணர்ச்சியை உண்டாக்கினார் ம. பொ. சி. உணர்ச்சியுடன் பேசக்கூடிய பல அருமையான பேச்சாளர்களை அவர் தயார் செய்துள்ளார்.

படித்துப் பட்டம் பெற்று விட்டதனாலேயே அறிஞராகி விட்டதாக நினைத்துக் கொண்டிருக் கிறார்கள் சிலர். ம. பொ. சி., கல்லூரியில் பட்டம் பெறாமலே உண்மை அறிஞராக விளங்குகின்றார். கிராமணியார் பேசுகிறா ரென்றால், பாமரமக்கள் மட்டுமன்றி, படித்துப் பட்டம் பெற்றவர்களும் கேட்டு மகிழ விரும்புகின்றனர்.

இந்தக் காலத்தில் அரசியல் உலகில் பதவிப் பித்தர்களும், பணப் பித்தர்களும்தான் நிறைந் திருக்கின்றனர். ஆனால், வறுமையில் வாழும் ம. பொ. சி., பணமோ பதவியோ மற்றும் எந்த சுய நல நோக்கமோ இல்லாமல் நாட்டுக்காக உழைத்து வருகிறார்.

பொதுத் தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர்கள் வெற்றி அடைந்ததற்கு ம. பொ. சி.யின் பிரச்சார

பலம் முக்கிய காரணமென்பதை யாரும் மறுக்க முடியாது. 1937-ம் ஆண்டில் தேர்தல் நடந்தபோது பிரச்சார பீரங்கியாக சத்தியமூர்த்தி இருந்தார். இந்தத் தேர்தலில் அவர் இல்லாத குறையை திருவாளர் கிராமணியார் போக்கிவிட்டார். ம. பொ. சி. ஆங்கில மோஸ்தரில் அறிஞரானவரல்லர். ஆழ்ந்த தமிழ் ஞானத்தால், இலக்கியப் புலமையால் அறிஞரானர். அவருடைய பேச்சில், உணர்ச்சி வேகம், நகைச்சுவை, வீரக்கனல் ஆகிய அனைத்தும் கலந்திருக்கும். அவர் தன்னம்பிக்கை உடையவர். தமது கருத்தை அழுத்தம் திருத்தமாக வற்புறுத்தும் ஆற்றலுடையவர்.

★

# வறுமையிற் செம்மையுடையார்

—திரு. வி. க.

'வறுமையிற் செம்மை' என்பது ஒரு முது மொழி. அதன் பொருள் ஆழமுடையது. அதற்குப் பலர் பலதிறப் பொருள் கூறுப.

வறுமையிற் செம்மையை வாழ்க்கையிற் பொருத்திப் பார்த்தல் வேண்டும்; பார்த்தால், சில நுட்பங்கள் புலனாகும். சிற்சிலர் வாழ்க்கை இலக்கியங்கள் இதற்குச் சான்றாக நிற்கின்றன. அவற்றுள் ஒன்று தமிழ்ச் செல்வம் ம. பொ. சிவஞானத்தின் வாழ்க்கை இலக்கியம்.

தோழர் சிவஞானம் வறுமைக் குடியில் பிறந்தவர்; வளர்ந்தவர்; அவர்தம் பிறப்பும் வளர்ப்பும் என்ன செய்தன? அவர்க்குச் செம்மைத் தலைமையை வழங்கின. தோழர், தமிழ் நாட்டுத் தலைவருள் ஒருவராக விளங்குதல் கண்கூடு. இது வறுமையிற் செம்மையன்றோ?

வறுமையில் மூழ்கிய சிவஞானத்துக்கு இளமையில் தமிழ் நூல் பயிலும் வாய்ப்பு நேர்ந்தது. இவ்வாய்ப்புடன் அவர்க்குப் பெருநாவலர் ஞானியார் போன்றார் சொன்மழையில் திளைக்கும் பேறும் கிடைத்தது. அவ்வாய்ப்பும் இப்பேறும் சிவ

ஞானத்தை நாவலராக்கின. இஃதென்னை? வறுமை யிற் செம்மையன்றோ?

வறிய சிவஞானம் தனிமை வாழ்க்கை நடத்தினு ரில்லை. அவர் இல்வாழ்க்கையில் ஈடுபட்டார். வறுமையில் செம்மை கூட்டும் பண்பு இல்வாழ்க் கைக்கு உண்டு. வறிஞரின் தனித்த வாழ்க்கை செம்மையற்ற நரகமாகும். வறிய நரகத்தை, சிவ ஞானத்தின் இல்வாழ்க்கை செம்மை வீடாக்கிற்று. வறுமையிற் செம்மையின் பெற்றி என்னே!

தோழர் சிவஞானத்தின் தலைமை ஜனநாயக உணர்விளின்றும் முகிழ்த்தது. இதற்குக் காரணம் பலபடக் கூறலாம். ஈண்டுச் சிறந்த ஒன்றைக் குறித்தல் சாலும். அது, தொழிலாளரிடைச் சிவ ஞானம் சிலகாலம் தொண்டாற்ற நேர்ந்தமை. வறிய தொழிலாளர் கூட்டுறவு ஜனநாயகச் செம் மையை நல்குவது இயற்கையே.

ஜனநாயக உணர்வு மலர்ந்து தோழரைக் காங் கிரசில் கடாவியது; சிறைப்படுத்தியது; துன்பச் சூழலில் நிறுத்தியது. இவை, வறுமை நோய்க்குரிய செம்மை மருந்துகள்.

வறுமையில் முகிழ்க்கும் ஜனநாயக உணர்வு செம்மையை நாடும் இயல்புடையது. செம்மை எனில், எச்செம்மை? ஈண்டு வறுமையில் தோய்ந் தார் வாழ்க்கையைச் சிந்தித்தல் வேண்டும். வறுமை யில் தோய்ந்தவருள் சிறந்தவர் காரல் மார்க்ஸ் என்று கூறலாம். அவ்வறியர், உலகுக்கு என்ன அறிவுறுத்தினர்? செம்மையை அறிவுறுத்தினர்.

செம்மை எது? பழம் பொருள் ஒரு பால் கிடக்க. புதுப் பொருள் யாது? காரல் மார்க்ஸ் கண்ட பொதுமை. இது தமிழ் நாட்டில் ஒருபோது வள்ளுவ ரால் காணப்பெற்றது. பழைய வள்ளுவ விதை இப் போது புதிய மார்க்ஸீயமாகக் கனிந்துள்ளது. இக் கனிவு தோழர் சிவஞானத்தை வறுமையில் செம்மை காண உந்தியது. சிவஞானம் இந்நாளில் வறுமை யைப் போக்கவும் பொதுமையை வளர்க்கவும் முயன்று வருதல் வெள்ளிடைமலை.

இவ்வளவில் நின்று சிவஞானத்தின் வாழ்க் கையை நோக்கலாம். அது வறுமையிற் செம்மைக் கோர் இலக்கியமாக விளங்குதல் காணலாம். வறுமையிற் செம்மை சிவஞானமாகியது என்று சுருங்கச் சொல்லலாம்.

வறுமையிற் செம்மை - சிவஞானத்தின் வாழ்க் கை, சில செல்வங்களைப் பெற்றுள்ளது. அவற் றுள் விழுமிய ஒன்று என் உள்ளத்தைக் கவருவது. அது சொற் செல்வம்.

வறுமையிற் செம்மை மேடையேறும்; மெல் லிய உடல், மலர்ந்த முகம், மொய்த்த மீசை, கூர்த்த நோக்கு, கூட்டத்தின் நெஞ்சைக் கொள்ளை கொள்ளும். சிவஞானம் வாய் திறப் பார். அவ்வாய் யாண்டிருந்து திறக்கிறது? மூலம் - மூலம் - மூலக் காற்றினின்றும் வீறும் எழுச்சி விரைந்தும் இரைந்தும் வாயைத் திறக் கிறது. உடன் தொடர்ந்து நா எழும்; புயல் வீசும்; முகில் ஓடும்; மின்னும்; இடிக்கும்;

மழை, மழை, சொன்மழை, தமிழ் மழை பொழியும்; வெள்ளம் பெருகும்; சிவஞானம் சொல்லில் பீடும் மிடுக்கும் ஏக்கழுத்தும் மிடையும். அம்மிடைவினின்றும் மின்னற்கொடி கதுவும். அது காதுகட்குக் கிளர்ச்சியாகும்; மனத்திற்கு உணர்ச்சியாகும். கிளர்ச்சியும் உணர்ச்சியும் நாட்டை விழிக்கச் செய்கின்றன. இவை யாவும் சிவஞானத்தின் சொற்செல்வப் பயன்கள்.

தோழர் சிவஞானத்தின்பால் ஒரு முரசு மிளிர்கிறது. அது 'தமிழ் முரசு'. அம்'முரசு' தமிழ் - தமிழ்நாடு - பொதுமை - என்று முழங்குகிறது; அதனல் தமிழரசு அரும்புகிறது. 'முரசு' வாழ்க! அரசு வெல்க!

சிவம் - அன்பு; ஞானம் - வீரம். இப்போது நாட்டிற்கு அன்பு வீரம் தேவை. அவ்வன்பு வீரம் சிவஞானம். அன்புள்ள இடத்தில் வீரமுண்டு. வீரமுள்ள இடத்தில் அன்புண்டு. 'ஈர நெஞ்சினர் யாதும் குறைவிலார், வீரமென்னல் விளம்புந் தகையதோ' என்பது சேக்கிழார் திருவாக்கு.

வறுமையிற் செம்மை - அன்பு வீரம் - 'தமிழ் முரசு' - தமிழரசு - சிவஞானம், சிவஞானம், சிவஞானம், சிவஞானம் பொலிக! அவர்தம் முயற்சி ஓங்குக!

# உணர்ச்சியின் உருவம்

—நீலாவதி ராமசுப்பிரமணியம்

தமிழ் நாட்டில் சிவஞானம் என்ருல், யார் என்று சொல்ல வேண்டியதில்லை. வ. உ. சி. என்ற திருநாமம், எப்படிப் பிரசித்தமோ, அப்படியே, ம. பொ. சி. என்பதும் ஆகும். ம. பொ. சிவஞானம் துடிதுடிப்புள்ள இளைஞர் மட்டுமன்று; கருமத்திலே கண்ணுயுள்ள - காரியத்திலே உறுதி கொண்ட கலைஞருமாவார். நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் அவரது நாவில் பலவிதமாக நடம்புரிவதைப் பார்க்கலாம். சிலப்பதிகாரத்தை வெறும் இலக்கியமாக எண்ணுமல், பழமை பொருந்திய நூல் என்று பாராமல், வீரக்கன்னியின் தீரமிக்க சரிதம் என்று வேண்டாமல், அரசியல் கண்கொண்டு. ஆராய்கிருர். அவ் வீராங்கனையின் வெற்றி முரசில் வெறி கொண்டு, தமிழ் நாட்டுப் பெண்மணியின் தலைசிறந்த கற்புத் திறனையும், பழிவழிப்பட்ட வேந்தனின் பழி துடைத்த பாவையின் பயங்கரத் திருவிளையாடலையும், எண்ணி, எண்ணி இறும்பூதெய்தி 'எங்கள் சிலப்பதிகாரம்', எங்கள் சிலப்பதிகாரம்' என்று மார் தட்டி மகிழ்ச்சிகொள்வார். "தமிழனென்று சொல்லடா, தலைநிமிர்ந்து நில்லடா!" என்று நாமக்கல் கவிஞர் கூறினர். அந்தத் தமிழனென்ற ஊற்று

தங்கு தடையின்றி ஓடுகின்றது நம் சிவஞானத்தின் உள்ளத்திலே. செக்கிழுத்த நம் சிதம்பரத்தை எண்ணிப் பேச முற்பட்டால், அவர் சிந்தையிலே செந்தீயழல்கள், கொழுந்து விட்டெரிந்து வார்த்தைகளைக் கொட்டிவிடும். வீரமிக்க தமிழரை வியந்து போற்றி அவர்களின் அடிச்சுவட்டில் ஆழ்ந்து, அதை சிரமேற்தாங்கி சீரியதொண்டியற்றத் துடிக்கும். வீர உள்ளம் படைத்தவர். நாவன்மையும், கைவண்ணமும், கைவரப் பெற்ற நற்றமிழ் வல்லார். பேச எழுந்தால், "எங்கிருந்து வருவதோ!" என்றபடி வான மழையெனப் பொழியும். அதில் வெறும் அலங்காரம், அடுக்குமட்டுமிருக்காது. உணர்ச்சியும் துடிப்பும் ஒருங்கே அலைமோதும். இறைவனளித்த இனியகுரலால், கணத்திற்குக்கணம் புதுப்புது கருத்துக்களைப் பொழிந்துவிடும். பேச்சு எப்படி உணர்ச்சி வெள்ளத்தில் மிதக்கிறதோ, அப்படியே எழுத்தும். இந்த இருபாக்கியமும், நம் சிவஞானத்திற்கு அமைந்தது தமிழ் நாட்டின் தவமேயாகும்.

தமிழ்ப் பெருங் கவிகளிடத்து அளவிறந்த பக்தி கொண்ட அன்பர் பாரதியின் வீரக் கவிகள் என்றும் அவர் மனத்தில் பதிந்து கிடக்கும். பெருங் காப்பியங்களும் அருந் தமிழும், திருந்திய கொள்கைகளும் கொண்ட தமிழ் மக்கள், பிற இனத்தவர் எவருக்கும் தலைகுனிந்து வாழ வேண்டியதில்லை என்ற இறும்பூது மிக்கவர். தமிழ்த் தொண்டு, இலக்கியத் தொண்டு, அரசியல் தொண்டு எதிலும் முன் வைத்த காலை பின்வைப்பதில்லை. இனிய முகத்

தோடும், இன் சொல்லோடும் அளவளாவும் சுபாவம் உடையவர். தமிழ் மக்கள் பழைய வீரம், அன்பு, அறம், ஒழுங்கு இவைகளிலே நிலைபெறவேண்டுமென்ற ஆவலொன்றே என்றும் அவர் உள்ளத்திலே இடம் பெற்றிருப்பது.

அரசியலில், அண்ணல் காந்தி அடிகளாரின் அன்பொலியால் வசீகரிக்கப்பட்டு, நாட்டின் அடிமைத் தளையறுக்க தீரமாய் உழைத்து தேச மக்களின் அன்பைப் பெற்றவர் சிவஞானம். அடிமைத் தளை நீக்கம், அன்னியர்க்குப் பணியாமை என்பதில் அவர் வீரபாண்டியக் கட்டபொம்மனின் உள்ளத்தைப் பெற்றவர். சிறை வாழ்க்கையை நிறைய அநுபவித்தவர். அறிஞர் ராஜாஜியின் அன்பிற்குரியவர். உடல் மெலிவுதான்; ஆனால், உள்ளம் வயிரம். போராட்ட உணர்ச்சியே பெரிதும் கொண்டவர். ஆனால், வேண்டாத வெறிபிடித்த நிலையில்லை. உரிமையை அடைய, கடமை உணர்ச்சியோடு கட்டுப்பாடான நிலையோடு போர்க்களம்புகுவார். அண்ணலின் வழியும் அதுவேயன்றோ?

சமீப காலமாக நடைபெற்றுவரும், "மகளுஸ் மனதே" என்ற கிளர்ச்சியை சமயம் நேரும்போதெல்லாம் மண்டையிலடித்து சகலரையும் தூங்காது தட்டி எழுப்பிக் கொண்டேயிருப்பதில் கண்ணுங் கருத்துமாய் உழைக்கிறார்.

"படையாமல் உண்ணுக தமிழ் நாடு வாழ்க". என்ற நாமக்கல் கவிஞரின் கவியைப் போல் இல்லையென்று சொல்லத் தெரியாத தமிழர்கள், இந்த

விஷயத்தில் எங்கு மிதமாய் இருந்துவிடுகிருர்களோ என்று எந்த நேரத்திலும், இந்த சிந்தனையிலேயே இருந்து வருகிருர்.

தமிழ் மக்கள் எப்படி பழைய பண்பாட்டோடு, வாழவேண்டுமென்று ஆசைப்படுகிருரோ, அப்படியே பெண் மக்களும், பழைய வீரம், பண்பாடு இவைகளோடு வாழவேண்டுமென்ற ஆவல் நிரம்பப் பெற்றவர். ஆம்; கண்ணகியின் வரலாறு அநீதி கொண்ட அரசனின் கதியை மட்டுமா நிச்சயிக்கிறது; பெண்ணின் சக்தியையுமல்லவா பேசுகிறது. இதை வைத்துத்தானே என்னவோ, "ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே" என்ற பழமொழி இன்று நம்மிடை உலவி வருகிறது.

இன்றைய தமிழ்நாட்டுப் பெண் மக்கள் இசைத் தமிழை மறந்து, வசைத் தமிழை மேற்கொண்டிருப்பதாக வருந்துகிறது அவர் உள்ளம். அதுவும் தாம் பெற்ற பாலர்களிடமுமா என்று பதறுகிறது. ஒரு சில பெண்கள் வசைபாட இறங்கிவிட்டால், நாம் காதவழி ஓடவேண்டியதுதான். என்னே இவ்விழிநிலை! தென்னப்பிரிக்க சத்தியாக்கிரகத்திலே, மகாத்மா காந்தி அடிகள் தமிழ் நாட்டுப் பெண்களின் பெருமையை உணரச் செய்த வீரவனிதை வள்ளியம்மாளின் வழித்தோன்றல்கள் வாழும் வகை ஈதென்ருல் நெஞ்சம் குமுருமல் என்ன செய்யும்? ஒரு சமயம் நேரில் பேசிக் கொண்டிருக்கும் போதும் அதையேதான் கூறி மனமுடைந்தார், அன்பர் சிவஞானம். இது விஷயமாக இங்கு எழு

துவதென்ருல், அதுவே, ஒரு தனிக் கட்டுரையாகி விடும்.

தமிழுக்கும், வீரத்திற்கும், தலை வணங்கும் சிவஞானத்தின் சரிதை எல்லோரும் அறிய வேண்டியதே. சுமார் இருபத்தி ஐந்து ஆண்டுகளாக, அரசியல், இலக்கியம், மொழி இத்துறைகளில் இடைவிடாது தொண்டாற்றி இன்னல் பல அடைந்திருக்கிருர்.

"தமிழ் நாட்டில் சிவஞான கிராமணியார் என்ருல் அது ஒரு தனிப் பண்பு." என்று ரசிகமணி திரு. டி. கே. சி. அவர்கள் கூறியிருப்பதைவிட வேறு என்ன இருக்கிறது நான் சொல்வதற்கு!

சமீபத்தில் சிவஞானம் அவர்கள் வீரபாண்டியக் கட்டபொம்மனின் நினைவு நாளைத் துவக்கி, தமிழ் நாட்டில் அவ்வீரனின் திருநாமம், எல்லோர் உள்ளத்திலும், வீற்றிருக்கச் செய்துவிட்டார். இனி, வீரபாண்டியன் புகழ் வெற்றியெட்டுத் திக்கு மெட்டக் கொட்டுமென்பதிலும் ஐயமுண்டோ!

மதவெறியில் அன்பருக்கு அளவுகடந்த வருத்தம். மதவெறியால் இந்நாட்டில் நடைபெற்ற கொடுமைக் காட்சிகள் எத்தனையோ? அதிலே குறிப்பிட வேண்டியது, உலக உத்தமரை சமாதான தூதரை மக்களின் சீரிய வாழ்வுக்கென்றே மனங்கனிய உழைத்த பெரியாரை - வள்ளுவன் வகுத்த வாழ்க்கை நெறியிலே திகழ்ந்த வள்ளலை - சத்தியத்தையும் தருமத்தையுமே ஆயுதங்களாகக் கொண்ட தவ யோகியை மத வெறியன் கோட்சே கும்பிட்டுக் கொலை செய்த கோரமாகும்.

"ஏ! மதவெறியே! நீ, உனது கொலைக் கரங்களை மாற்றிக்கொண்டாய். கொலைக் கருவிகளையும் மாற்றிக் கொண்டாய்; ஆனால் கொலைக் குணத்தை மட்டும் மாற்றிக் கொண்டாய் இல்லை." என்று சிவஞானம் சிந்தை நொந்து பேசுகிறார். உண்மை தானே! குணமும், மனமும் மாறாவிட்டால், எந்த சட்டத்தால்தான் என்ன செய்துவிட முடியும்?

கப்பலோட்டிய தமிழனும், கன்னித் தமிழில் கரைகாணாக் காதல் உடையானும் ஆன, புரட்சி வீரன் சிதம்பரனாரின் வரலாறும், வீரபாண்டியக் கட்டபொம்மனின் சரிதமும், இவர் எழுதிய நூல்களில், உணர்ச்சியின் சிகரங்கள் எனலாம்.

பொதுவாக, மக்கள் நலத்திற்கும், தேச நலத்திற்கும், உழைக்கும் உத்தமர்களின், வாழ்வை, வரலாற்றை அறிவது பெரிய அநுபவம். அச் சீரிய தொண்டை மேற்கொண்டிருப்பது பாராட்டத் தக்கது. வாழ்க கன்னித் தமிழ்!!

# ஒரு தனிப் போக்கு

—டாக்டர் மு. வரதராஜன்

நாட்டுப் பற்று ஒரு குற்றமாகக் கருதப்படும் காலம் இன்னும் வரவில்லை. உலகத்தில் ஒரு நாட்டைச் சுரண்டி மற்றொரு நாடு வாழவேண்டிய நிலை உள்ள வரையில், ஒரு நாட்டை ஏய்த்து மற்றொரு நாடு வாழவேண்டிய நிலை உள்ள வரையில், சுரண்டப்படும் நாடும் ஏய்க்கப்படும் நாடும் ஒரு வகையான நாட்டுப் பற்றுக்கொள்ளும்; சுரண்டும் நாடும் ஏய்க்கும் நாடும் மற்றொரு வகையான நாட்டுப் பற்றுக் கொள்ளும். சுரண்டல், ஏய்த்தல் என்ற இரண்டும் இல்லாத நல்ல நிலை ஒன்று உலகமெல்லாம் நிலவுமானால், அன்று நாட்டுப் பற்று என்பது குற்றமாகக் கருதப்படக்கூடும். ஆனால் இன்று நாட்டுப் பற்று மதிக்கப்படுகின்றது; போற்றப்படுகின்றது. எது நாடு என்று வரையறை செய்யும்போதுதான் மதிப்பிலும் போற்றுதலிலும் எச்சரிக்கை செய்யப்படுகின்றது. வரலாறு காரணமாக வகுத்தாவது, பூகோள அமைப்பைக் கொண்டு பிரித்தாவது, அப்போதைய ஆட்சிமுறை பற்றிப் பகுத்தாவது, பேசப்படும் மொழியைக் கொண்டு வரையறைப்படுத்தியாவது நாடு இன்னது என்று உணர்ந்து நாட்டுப் பற்றுக் கொள்ளலாம். முன் கூறிய மூவகைப்

பகுப்பும் பொது மக்கள் வாழ்க்கையோடு அவ்வள வாகத் தொடர்பு இல்லாத காரணத்தால், நெடுங் காலம் நிற்பன அல்ல. ஆனல் மொழியின் வேறு பாட்டைக் கொண்டு நாடு வகுத்து நாட்டுப் பற்றுக் கொள்வதே மிகவும் இயற்கையானது; நெடுங்காலம் நிலைத்தும் நிற்பது. வரலாறு என்பது மாறிவிட்ட பழங்கதை. பூகோள அமைப்பு என்பது இன்று உள்ள விஞ்ஞான இணைப்புக்கு முன் நிற்காதது. ஆட்சி முறை என்பது மக்களின் எழுச்சிக்கும் உணர்ச்சிக்கும் ஏற்றபடி மாறுவது. ஆனல் மொழியோ நிலையானது; வரலாறு மாறினலும், விஞ்ஞானம் வளர்ந்தாலும், ஆட்சி வேறுபட்டா லும், மக்கள் பேசும் மொழி மாறுவது அருமை யினும் அருமை; மொழித்துறையில் சிறுசிறு மாறுதல் நேர்வதற்கும் பற்பல நூற்றுண்டுகள் செல்கின்றன.

இந்த உண்மையை உணர்ந்தால்தான் நாட்டுப் பற்றுக்கும் மொழிப் பற்றுக்கும் உள்ள உறவு விளங்கும்; நாட்டுப் பற்றும் மொழிப் பற்றுமே குறிக்கோளாகக் கொண்டு இருபது ஆண்டுகள் பொதுத் தொண்டில் கழித்த திரு. ம. பொ. சிவ ஞான கிராமணியாரின் போக்கும் விளங்கும்.

நாட்டுப் பற்றுக்கு ஒரு மேடை, மொழிப் பற்றுக்கு ஒரு மேடை என இருந்துவரும் நிலைமை வருந்தத்தக்க நிலைமையாகும். இந்த இருவகை மேடையையும் ஒன்றுக்கி உண்மை வழியை வடநாட் டில் விளக்கியவர்கள் தாகூரும் காந்தியடிகளும்; தென் நாட்டில் விளக்கியவர்கள் வ. உ. சிதம்பரம்

பிள்ளையும் திரு. வி. கலியாண சுந்தரனாரும். இந்த நல்ல கொள்கைக்காகவே ஒரு கட்சியும் கண்டு, ஒரு முரசும் முழக்குபவர் திரு. சிவஞானம்.

செல்வாக்கும் பெற்று மேல்நிலை உற்றவர்களின் குணங்களை மட்டும் எடுத்துப் பேசினால், அவர்களுடைய உதவியைப் பெறமுடியும். செல்வாக்கு இழந்து தாழ்நிலை உற்றவர்களின் குற்றங்களை மட்டும் எடுத்துத் தூற்றினாலும், அவர்களுடைய உதவியை இன்னும் மிகுதியாகப் பெற்று வாழ்க்கையில் முன்னேற முடியும். இதற்கு மாறாக உரிமையுணர்வே மிகுந்தவர்கள் எப்போதும் செல்வாக்குள்ளவர்களின் குறை கண்டு கடிவதிலே முனைந்திருப்பதும், செல்வாக்கு இழந்தவர்களின் குணம் கண்டு போற்ற விரும்புவதும் இயற்கையே. ஆயின் திருவள்ளுவர் அரசியலில் கூறுவது 'குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொளல்' என்னும் நெறியே ஆகும். திரு. கிராமணியாரின் பேச்சிலும் எழுத்திலும் எவரைப் பற்றிப் பேசினாலும் எழுதினாலும் குணம் குற்றம் இரண்டையும் சீர்தூக்கிப் பார்க்கும் பண்பு இருப்பது தனிப் பெருஞ் சிறப்பாகும். தம் கட்சியைச் சார்ந்தவர் என்ற காரணத்தால் அவருடைய குற்றங்களையும் குணமாகக் காணுவதும், எதிர் கட்சியினைச் சேர்ந்தவர் என்ற காரணத்தால் அவருடைய குணங்களையும் குற்றமாகக் காணுவதுமாகிய அரசியல் மூட நம்பிக்கை திரு. ம. பொ. சி. அவர்களிடம் இருக்கக் கண்டதில்லை.

பேச்சிலும் எழுத்திலுமே அன்றித் திரு. கிராமணியாரின் எண்ணத்திலேயே ஒரு தனிப் போக்கு உண்டு. எண்ணத்தில் உள்ள புதுவகைத் தெளிவும் எழுச்சியுமே அவருடைய முரசிலும் மேடையிலும் ஒலிக்கின்றன. 'உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்'.

பழந்தமிழிலக்கியத்திலிருந்து எடுத்துக் காட்டுக்கள் கிளம்பும்; அவை பாமரரும் தெரிந்து கொள்ளக் கூடிய வகையில் வடிவு பெறும்.

பழங்காலப் புலவர் பெருமக்களின் உள்ளக் கருத்துக்கள் ஆராயப்படும்; அவை பாட்டாளி மக்களின் முன்னேற்றத்திற்கு உதவும் வகையில் எடுத்துரைக்கப்படும்.

காந்தீயம் போற்றப்படும்; கார்ல் மார்க்ஸ் தத்துவமும் ஆராயப்படும்.

கருத்துக்களில் எளிமை காணப்படும்; எளிதில் அளவிட முடியாத ஆழமும் காணப்படும்.

கலைவளம் மல்கியிருக்கும்; அது வாழ்வின் தேவைகளுக்கு ஏற்றவைகளாகவே மாண்புறும்.

பழைய பண்பாடு மதிக்கப்படும்; சீர்திருத்தப் புதுமையும் மணங்கமழும்.

அழிவு செய்ய வரும் பெருவெள்ளம் போல் அலைகள் புரளும்; ஆக்க வேலைக்கு உரிய வகையில் அணைகளும் அமையும்.

ஆத்திரம் விஞ்சும்; அறம் விளங்கும்.

எல்லாம் சேர்ந்த ம. பொ. சி. ஒரு தனிப் போக்கு என்றே சொல்ல வேண்டும்.

# ‘சொல்லல் வல்லன்’

—டி. கே. ஷண்முகம்

கூட்டத்தில் மாறுபட்ட கருத்துடையவர்கள் இருக்கலாம்; குழப்பத்தை உண்டாக்குபவர்கள் இருக்கலாம்; கொள்கையில் பற்றில்லாதவர்களும் இருக்கலாம். அத்தகையவர்களும் தம்மை மறந்த நிலையில் அமர்ந்திருக்க வேண்டும். சொற்பொழி வாளரின் நாவன்மையும், வாதத் திறமையும் நண்பர் களை மட்டுமல்ல; எதிரிகளையும் தன் வயப்படுத்தும் தன்மையதா யிருத்தல் வேண்டும்.

**கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்**
**வேட்ப மொழிவதாம் சொல்**

தமிழ்மறை தந்த இந்த உண்மைக்கு எடுத்துக் காட் டாக விளங்கும் சொல்வன்மையுடையவர்கள் மிகச் சிலர். அவர்களில் ஒருவர் நமது தலைவர் திரு. ம. பொ. சி. அவர்கள்.

கவிஞர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், பேச்சாளர்கள் ஆகியோரிடத்தில் எப்பொழுதும் அன்புத் தொடர்புடையவன் நான்.

சுமார் ஐந்தாண்டுகளுக்கு முன் திரு. ம. பொ. சி. அவர்கள் பொன்மலை ரயில்வேத் தொழிலாளர் மாநாட்டுக்காக திருச்சிராப்பள்ளிக்கு

வந்திருந்தார். அப்போது ஔவையாரைக் காண எங்கள் அரங்கிற்கும் விஜயம் செய்தார். அன்று தான் முதன் முதலாக அவரைக் கண்டேன். மறு நாள் அவருடன் நட்புக் கொள்ளும் வாய்ப்பும் கிட்டியது. உள்ளத்தைத் திறந்து பேசும் அவரது உயரிய பண்பாடு; பழந்தமிழ் இலக்கியங்களில் அவருக்குள்ள பற்றுதல்; தமிழர்களின் நன்மைக்கு இன்றியமையாததென்று நான் உறுதியாய் எண்ணியிருக்கும் அவருடைய தமிழரசுக் கழகக் கொள்கை; இவைகளே அவரிடம் என்னை ஈடுபடச் செய்தவை.

அவரோடு அளவளாவிக் கொண்டிருப்பதில் எனக்கொரு தனி மகிழ்ச்சி; நண்பர்களோடு சிரித்து மகிழும்போதுகூட அவருடைய பேச்சுக்கள் சிந்தனைக்கு விருந்தளிக்கும். பயனற்ற சொற்களைப் பேசிப் பொழுதை வீணாக்கும் வழக்கம் அவரிடம் இல்லை.

> சொல்லுக சொல்லிற் பயனுடைய; சொல்லற்க
> சொல்லிற் பயனிலாச் சொல்.

என்ற வள்ளுவர் வாக்கை அவர் நன்றாய் உணர்ந்தவர்.

எனது வற்புறுத்தலின் மேல் ஓய்வெடுத்துக் கொள்ள ஒருமுறை கோவையில் எங்களோடு சில நாட்கள் தங்கினார். அப்போதுதான் அவருடன் நெருங்கிப் பழகி உறவாடினேன். இரவு முழுவதும் குடல் நோயால் சிரமப்படுவார். பொழுது புலர்ந்ததும் ஆர்வத்தோடு அழைக்கும் அன்பர்

களின் விருப்பத்திற்கிணங்கி சொற்பொழிவு செய்யப் புறப்பட்டுவிடுவார்; இதன் பெயர்தான் ஓய்வு!

துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை

என்ற பொய்யா மொழியின் உண்மையை அப்பொழுதுதான் நன்குணர்ந்தேன்.

நண்பர்கள் என்பதற்காக முகஸ்துதி செய்யும் வழக்கம் அவரிடம் கிடையாது. கோவையில் தங்கியிருந்த அந்த சமயத்தில், ஒவ்வொரு நாளும் நாடகம் முடிந்தபின், நாடகத்தில் தமக்குச் சரியல்லவெனத் தோன்றிய விஷயங்களை எடுத்துக்காட்டி உறுதியோடு வாதிப்பார். அவருடைய விமர்சனக் கருத்துக்கள் எங்களுக்குப் பெரிதும் பயன்பட்டிருக்கின்றன.

அவருடைய அரசியல் பேச்சையும், இலக்கியப் பேச்சையும் நான் கேட்டிருக்கிறேன். அரசியல் பேச்சில் ஆண்மை தாண்டவம் செய்யும். இலக்கியப் பேச்சில் இனிமை கொப்பளிக்கும்.

நீண்ட நேரம் பேசவேண்டுமென்பதற்காக, எடுத்துக்கொண்ட விஷயத்திற்குப் புறம்பான வீண் அளப்புகளில் அவர் இறங்குவதில்லை. முன்னுக்குப் பின் முரணாக உளறிக் கொட்டுவதுமில்லை. நன்கு ஆராய்ந்து முடிவு கட்டிய தெள்ளிய கருத்துக்களை ஆணித்தரமாக வெளியிடும் ஆற்றல் படைத்தவர் அவர். அவருடைய உள்ளத்திலே உண்மையொளி இருப்பதால் வாக்கிலும் ஒளி வீசுகிறது; மற்ற

வர் எளிதில் மறுத்துப் பேசும் தன்மையில் அவர் பேசுவதில்லே.

சொல்லுக; சொல்லேப் பிறிதோர்சொல் அச்சொல்லே
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து

என்று தமிழ் மறை கட்டளேயிடும் சக்தி வாய்ந்த சொற்கள் அவருடையவை.

இன்று தமிழ் நாடெங்கும், தமிழர்கள் வாழும் இடங்களில் எல்லாம் வ. உ. சி. நாள் கொண்டாடப் படுகிறது. ஆம், நாம் கண்ணூரக் காண்கிறோம். ஆனல், சில ஆண்டுகளுக்கு முன்பு வரையில், இந்த நினைவு தமிழர்களுக்கு வரவில்லே; செக்கிழுத்த தமிழனின் தியாகத்தை மறந்திருந்த தலேவர்கள் கூட மக்கள் முன்வந்து மனம் திறந்து பேசும் இன்றைய நிலேக்குக் காரணம் திரு. ம. பொ. சி. அவர்களின் சொல்லும் எழுத்துமே என்பதை யாரே மறக்க முடியும்!

கடந்த ஆண்டில் வீரபாண்டியக் கட்டப்பொம் பொம்மன் நினைவுநாள் தமிழ் நாட்டின் தலேநகரில் திரு. ம. பொ. சி. அவர்களால் தொடங்கிவைக்கப் பட்டது. அதைத் தொடர்ந்து நாட்டின் பல பாகங் களிலும் கொண்டாட்டங்கள் நடைபெற்றன. வரும் ஆண்டுகளில் தமிழகத்தின் மூலே முடுக்குகளில் எல் லாம் கட்டபொம்மனின் வீரச் சரிதம் முழங்கக் கேட்கலாம்.

**விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது**
**சொல்லுதல் வல்லார்ப் பெறின்**

என்பது எவ்வளவு பேருண்மை! ம. பொ. சி. அவர்கள் உடல் நலம் குன்றியவர்; ஆனல், ஊக்

கம் குன்ருதவர். அஞ்சாமை அவருடன் பிறந்தது. கோவையில் நடந்த தமிழ் மாகாண அரசியல் மாநாட்டில் அதைக் காணும் பேறு பெற்றேன்.

சொலல் வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது

திரு. ம. பொ. சி. அவர்கள் நீண்டகாலம் வாழ வேண்டும் தமிழ்மக்கள் வாழ்வுக்காக. குமரிமுனையில் வாழும் தமிழர்களாகிய நாங்கள் தாயகத்துடன் ஒன்றுபட்டுவாழ நடத்தும் போரணியில் அவருடைய பங்கு மகத்தானது என்பதை உணர்ந்திருக்கிருேம்.

வாழ்க ம. பொ. சி.!

# மாசற்று வாழும் மதிப்புடையவர்

—நாமக்கல் கவிஞர்

'கப்பலோட்டிய தமிழன்' என்று சொன்ன உடனேயே இந்திய நாட்டின் எந்த மூலையிலும் சுதந்தர இயக்கத்தின் சரித்திரத்தை அறிந்த எல்லாருக்கும் அது தூத்துக்குடி வக்கீல் வ. உ. சிதம்பரம் பிள்ளையைக் குறிப்பது என்று தெரியும். தமிழ் நாட்டில் ஒவ்வொரு குக்கிராமத்திலும் கூட இப்போது எதிரொலி கேட்க எழும்புகிற ஓசை 'கப்பலோட்டிய தமிழன்' என்பது.

9—2—49-ல் இந்தியாவின் கவர்னர் ஜெனரலான சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரி அவர்கள் டில்லியிலிருந்து அதற்கென்றே தூத்துக்குடி வந்து அந்தக் 'கப்பலோட்டிய தமிழன்' சிதம்பரம் பிள்ளையின் பெயரால் ஒரு கப்பலை ஓட்டும்படி செய்தார். இந்த மாபெரும் நிகழ்ச்சியைப் பிரசுரித்த தமிழ்ப் பத்திரிகைகள் எல்லாம் 'சிதம்பரம் பிள்ளை' என்ற பெயரைக் கூட விட்டு விட்டு வெறும் 'கப்பலோட்டிய தமிழன்' என்ற பெயரைக் கொண்டே அந்த நிகழ்ச்சியை சித்திரித்தன.

இந்த 'கப்பலோட்டிய தமிழன்' என்ற சொற்றொடரை முதன்முதல் தமிழர்களுக்குத் தந்த ஏக

போக உரிமையும், பெருமையும் திரு. சிவஞான கிரா மணியவர்களுக்கே சேர்ந்தது. திரு. வ. உ. சிதம் பரம் பிள்ளை, அவருடைய அந்திய காலத்தில் அன்ன வஸ்திரத்துக்கும் கூட போதிய ஆதரவின்றி மிகக் கொடிய வறுமையில் வாடி வதங்கி இறந்தார் என் பதை நினைத்து நினைத்து, கதறிக் கதறிக் கண்ணீர் விட்டுக் கலங்கிய ஒரு சில தேசபக்தர்களுள் சிவ ஞானம் முதன்மையானவர். "ஐயோ, அருமைப் புலவன் சுப்ரமணிய பாரதியைப் பட்டினி போட்டு பதைக்கச் செய்துவிட்ட பழியை அறிந்திருந்தும் சிதம்பரம் பிள்ளைக்குக் கூட நாம் உதவாமற் போனோமே" என்று சிவஞானம் கலங்கினதை நெடுநாளைக்கு முன்னால் நான் நேரிற் கண்டவன்.

சுப்ரமண்ய பாரதி, அவர் கடைசி மூச்சு பிரிகிற வரையிலும் அன்னிய ஆட்சியை வெறுத்துப் பேசி பிரிட்டிஷ் அரசாட்சி அவரைப் பற்றி அச்சப்பட வேண்டிய முறையிலேயே வாழ்ந்தார். ஆகையினால் பாரதிக்கு பகிரங்கமாக உதவி புரிய அறிவாளி களும் அஞ்சிக்கிடந்தார்கள். மறைமுகமாக உதவி கள் செய்கிறவர்களையும் ரகசியப் போலீசார் கண் காணித்து வந்தார்கள் என்ற காரணமும் இருந்தது.

ஆனால், சிதம்பரம் பிள்ளையின் கடைசி நாட்கள் அரசாங்கத்தார் அவரைப் பற்றி அச்சப்படவேண் டியதாக இருக்கவில்லை. கடைசி வரையிலும் சிதம் பரம் பிள்ளையின் சுதந்தர ஆர்வமோ, தேச பக்தியோ, காங்கிரஸ் அபிமானமோ குறையவில்லை யென்றாலும், உடல் நிலையின் காரணத்தால் அவர்

அரசியல் விஷயங்களிலிருந்து பகிரங்கமாக விலகி யிருந்து, வெறும் இலக்கிய சேவையில் மட்டும் ஈடு பட்டிருந்தார். அப்போது அவருக்கு உதவி செய்ய யாரும் பயப்பட்டிருக்கவேண்டியதில்லை. அப்படி யிருந்தும் அந்த 'கப்பலோட்டிய தமிழனு'க்கு நாம் உதவி செய்யாமல் அவர் உணவுக்கும் உடைக்கும் ஏங்கி உயிர் துறக்க விட்டுவிட்டோமே என்று துடி துடித்துப் பேசிவந்த தொண்டர் சிவஞான கிரா மணி. உண்மையாகவே திரு. சிதம்பரம் பிள்ளை தம் அந்திய காலத்தில் அவ்வளவு வறுமையுற்றிருந் தார் என்பதை எல்லாரும் அறியமாட்டார்கள்.

சிதம்பரம் பிள்ளை, அவருடைய கடைசி காலத் தில் எப்படி வறுமையால் நொந்து வாடிக் கிடந்தார் என்பதை தம்முடைய அபூர்வ பேச்சுத் திறமை யோடு சிவஞானம் நெடுநாளைக்கு முன் செய்த பிர சங்கங்களைக் கேட்டு நான் சிதம்பரம் பிள்ளையை நினைத்துக் கண்ணீர் சிந்தினதுண்டு.

> 'கப்பலோட்டிய தமிழன்' சிதம்பரம் பிள்ளைக்குஇன்று ஏற்பட்டுள்ள சிறப்புகளுக்கு முன்னணியாகக் கங்கணங்கட்டிக் கொண்டு உழைத்தவர் ஸ்ரீ. சிவஞான கிராமணியார் என்றால் அது மிகவும் தகும்.

திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளையின் திருநாமத் துக்குச் சிறப்புச் செய்தது சிவஞானத்தின் சேவை களில் மிகவும் குறிப்பிடத் தகுந்தது என்றாலும் சிவ ஞானத்தைப் பாராட்டவேண்டிய பல்வேறு சிறப்பு கள் அவருக்குண்டு. கிராமணியவர்கள் நமது நாட்

டின் விடுதலைக்காக தம்முடைய சக்திக்கு மீறிய தியாகம் செய்து பல இன்னல்களைச் சகித்த சுதந்தரத் தொண்டர். வெகு அழகான பேச்சாளர்; நல்ல எழுத்தாளர்; தமிழ் மொழி, தமிழ்ப் பண்பு, தமிழ் இனம், தமிழ் அரசு என்பனவற்றில் அளவு கடந்த ஆவேசமுள்ளவர். எந்த வேலையில் ஈடுபட்டாலும் ஓய்வு கருதாத உழைப்பாளி.

திரு. சிவஞானம் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக காங்கிரஸ் வேலைகளுக்கான எல்லாத் துறைகளிலும் தம்முடைய முழு நேரத்தையும் முழு பலத்தோடு செலவிட்டு சேவை செய்பவர். மகாத்மா காந்தியின் இயக்கம் ஆரம்பித்த நாள் முதல் சிவஞானம் சென்னை வட்டத்தில் செய்துள்ள சேவைகள் நாம் மிகவும் நன்றியுடன் ஞாபகத்தில் வைக்க வேண்டியவை. சத்யாக்ரஹப் போராட்டத்தில் சென்னை மக்கள் அவ்வளவு தீவிரங்கொண்டதற்கு திரு. சிவஞானம் சென்னை காங்கிரஸ் கமிட்டியின் நிர்வாகியாக இருந்து உழைத்த உழைப்பும் செய்த பிரசங்கங்களும்தான் ஜீவநாடிகளாக இருந்தன என்பதை சென்னையின் காங்கிரஸ் சரித்திரம் என்றென்றும் இசைக்கும்.

சத்தியாக்ரகியாக சிவஞானம் பலமுறை சிறை புகுந்தார். ஒவ்வொரு தடவையும் சிறைவாசத்தினல் உண்டான சீர்கெட்டால் கொடிய நோயுற்று வருந்தினர். கடைசி தடவை அவர் சிறையினின்றும் வெளிவந்தபோது சிவஞானம் இனி ஜீவித்திருக்க முடியாது என்று உறவினரும் நண்பர்களும் ஒப்பாரி

பாடிவிட்டார்கள்; ஆனால், எப்படியோ தப்பிப் பிழைத்தார்.

இப்போது நாம் மிகவும் பெருமை கொண்டாடும்படி கவர்னர் ஜெனரலாக இருந்த ராஜாஜி அவர்கள் நெடுங்காலமாக காந்திஜியின் பரம பக்தருள் ஒருவர். இருந்தும் அவர் வெகு துணிச்சலுடன் காந்திஜிக்கு மிகவும் மாறுபட்ட ஒரு கருத்தை சுமார் பத்து வருஷங்களுக்கு முன்னால் வெளியிட்டார். இப்போது நாம் எல்லாருமாகச் சேர்ந்து மனமொப்பி கொடுத்திருக்கிற 'பாக்கிஸ்தானை' 'கொடுத்துத் தொலைப்பதுதான் நல்லது' என்று அப்போதே ராஜாஜி சொன்னார். அதனால் உண்டான குழப்பங்களினால் ராஜாஜி காங்கிரஸ் ஸ்தாபனத்திலிருந்து விலகிவிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. காங்கிரசை விட்டு விலகிய பின்னர் அவர் தம்முடைய கருத்தை பிரசாரம் செய்யத் தலைப்பட்டார். அதனால் தமிழ் நாட்டு காங்கிரஸ் வாதிகளில் மிகப் பெரும் பகுதியினர் ராஜாஜியை தேசத் துரோகியென்று அவமதித்துப் பிரசாரம் செய்தார்கள். ரொம்ப நல்ல மனிதர்கள் என்று கருதப்பட்ட பலபேர் அப்போது ராஜாஜியைப் பற்றிப் பேசிய இகழுரைகள் மிகவும் கொச்சையானவை. காங்கிரஸ் ஸ்தாபனங்களில் செல்வாக்குள்ளவர்களாக இருந்தவர்களுக்குள் பெரும்பாலோர் ராஜாஜியை இகழும் கட்சியைச் சேர்ந்தவர்கள்.

ராஜாஜிக்கு அநுதாபம் காட்டினவர்கள் 'மைனரிடி'தான்.

அந்த 'மைனாரிடி'யிலும் பகிரங்கமாக 'ராஜாஜி கட்சியைச் சேர்ந்தவன்' என்று சொன்னவர்கள் கொஞ்சம் பேர்.

அந்த வெகு சிலரிலும் ராஜாஜிக்கு நேர்ந்த அவமதிப்பு தங்களுக்கும் நேர்மைக்கும் நேரிட்ட அவமதிப்பு என்று நினைத்து அந்த சமயத்தில் ராஜாஜிக்குப் பக்கபலமாக நிற்கவேண்டியது தம் கடன் என்று கருதினவர்கள் அதினிலும் சிலரே.

அந்தச் சிலரிலும் ராஜாஜியின் கௌரவத்தை காக்கவேணும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு தங்களுடைய சுக சௌகரியங்களை முற்றிலும் மறந்து ஓடோடியும் உழைத்தவர்கள் மிகவும் சொற்பம்.

அந்த சொற்ப எண்ணிக்கையைச் சேர்ந்தவருள் முதன்மையானவர் சிவஞானம்.

அன்னந் தண்ணீரென்ற சிந்தனைகூட இல்லாமல் ஊரூராக அலைந்து திரிந்து சிவஞானம் ராஜாஜியின் பெருமைகளைக் காப்பதற்காகச் செய்த பிரசங்கங்கள் செப்பேட்டில் அல்ல பொன்னேட்டில் பொறிக்கத் தக்கன.

இதில் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் நல்லவர்கள்; எதைச் சேர்ந்தவர்கள் கெட்டவர்கள் என்று சொல்வதற்கு ஒன்றுமில்லை. ஆனால், துரும்பு போன்ற உடல் கொண்ட சிவஞானம் இரும்பு போன்ற வலிமையுடனும், எஃகு போன்ற உறுதி

யுடனும் தாம் எப்படி உழைத்தார்என்பதை மட்டும் தான் இங்கே கவனிக்க வேண்டும். ராஜாஜிக்காக சிவஞானம் அவ்வளவு பாடுபட்டது முற்றிலும் தன்னலங்கருதாமல் ஒரு நியாயத்துக்காக மட்டும் செய்தது என்பது, அப்போது ராஜாஜி இருந்த மிகவும் பரிதபிக்கத் தகுந்த நிலைமையில், அவர் பிற்காலத்தில் கவர்னர் ஜெனரல் ஆவார் என்று யாரும் நினைத்திருக்க முடியாது என்ற ஒன்றே உறுதிப் படுத்தும்.

சிவஞான கிராமணியவர்கள் வெகு நல்ல பேச்சாளர். எவ்வளவு நேரம் பேசினாலும் சுவை குறையாது; சுதி மங்காது; சொல் சோர்வுபடாது. எதை எப்படித் தாக்கிப் பேசினாலும் கண்ணியக் குறைவான பதப் பிரயோகங்களைப் பார்க்க முடியாது. எதிர் கட்சியினர் நாணுறும்படி அவர்களுடைய குற்றங்களை எடுத்துக்காட்டி இனிய சொற்களால் இடித்துக் கூறுவார். தன்னுடைய கட்சியில் பலக் குறைவிருப்பினும் அவர் பேசுகின்ற அழகில் பலம் பெறும். அவர் பேசவேண்டியதை சிந்தித்துப் பார்க்கக்கூட நேரம் கிடைக்காமல் பேசவேண்டி நேரிட்டாலும் முன்னாலேயே தயார் செய்துவைத்த பிரசங்கம்போல தங்கு தடையில்லாமல் திக்கித் திணறாமல் மடைதிறந்த வெள்ளம்போல் பேசக்கூடிய மனோதைரியம் நிறைந்தவர்.

சிவஞானம் எழுத்தாளர் என்பதைக் காட்டிலும், பேச்சாளர் என்ற முறையில்தான் தமிழுலகம் அவரை அதிகமாக அறிந்திருக்கிறது என்றாலும்

அவருடைய எழுதும் திறமையும் நல்ல வளமுடையது என்பதைப் பார்த்து வருகிறோம்.

தாய் மொழியாகிய தமிழின்மேல் எல்லையற்ற பற்றுடையவர். ஆனால், தமிழ் மொழியில்தான் எல்லா அறிவும் இருக்கிறதென்றோ, அல்லது தமிழ் மொழியே இந்திய நாட்டின் பொது மொழியாக முடியும் என்றோ, திரு. சிவஞானம் நம்புகின்றவரல்ல. ஆனாலும், இத்தனைச் சிறப்புகளும் தமிழுக்கு வந்துவிட்டால் தேவலை என்கின்ற ஆர்வமுடையவர். ஏன் எனில், அறம், காதல், வீரம் என்கிற பண்புகளை தமிழ் இலக்கியங்கள் காட்டும் தனி தினுசில் ஆழ்ந்த நம்பிக்கை உடையவர். உலகம் முழுதும் மக்கள் சமுதாயம் தமிழ் இலக்கியங்களில் காணப் படுகிற முறையில் அமைந்தால் நலம் என்ற நம் பிக்கையுள்ளவர்.

தமிழன் என்றொரு இனமுண்டு
தனியே அவர்க்கொரு குணமுண்டு
அமிழ்தம் அவனுடை மொழியாகும்
அன்பே அவனுடைய வழியாகும்

என்ற பாட்டிலுள்ள கருத்து அப்படியே வாழ்க் கைக்கு வந்துவிடவேணும் என்று விரும்புகிறவர் சிவஞானம். அநீதிகளை அடித்துப் பேசுவதிலும் கொடுங்கோலை வெறுத்துக் கூறுவதிலும் சிவ ஞானம் வெறிகொண்ட வேகமுள்ளவர்.

அவருடைய பேச்சிலும் எழுத்திலும் போர்க் கோலமும் வீரமுழக்கமும் பொங்கும். என்றாலும்,

அவருள்ளத்தில் நிரம்பியிருக்கும் தமிழ்ப் பண்பும் காந்தி பக்தியும் முடிவில் சத்தியம் சாந்தத்திலேயே இழுத்து நிறுத்தும். அரசியல் வாதங்களில் சத்திய மும் சாந்தமும் இடையிடையே தடுமாறுவன போலத் தோன்றினாலும், செயல் முறையைக் குறிக்க வரும்போது கிராமணியாரின் நோக்கம் காந்தியத்தைத் தழுவியே நிற்கும். இதை காந்தி யைப் பற்றி அவர் பேசிய பேச்சுகளும் எழுதிய எழுத்துக்களும் காட்டும். காந்தி மகாத்மா சாந்த மூர்த்தியானாலும் கோழையல்ல என்பதை அடிப் படையாகக் கொண்டது சிவஞானத்தின் கொள்கை. “முடியுமானால் ஹிம்சை செய்கிறவனுக்கும் திருப்பி ஹிம்சை செய்யாமல் அவன் கொடுமையை எதிர்த்து அன்புசெய். அதனல் நீ அழிந்து போவதானாலும் சரி. அப்படி ஹிம்சையை சகித்துக்கொள்ள முடியாவிட்டாலும் ஒருநாளும் கொடுமைக்குத் தலை வணங்கிப் பணிந்துபோகும் கோழையாகாதே” என்பதுதான் காந்தியடிகளின் உபதேசங்களின் மர்மம். இதிலுள்ள பிற்பகுதியைப் பின்பற்றுகிற வர் சிவஞானம். தமிழ் இலக்கியங்களின் கருத்தும் இதுதான் என்பது சிவஞானத்தின் நம்பிக்கை. இதுவேதான் தமிழ்ப்பண்பு என்பது அவருடைய கருத்து என்று நான் கருதுகிறேன்.

அறங்களைக் கடைப்பிடித்துக் காக்கவேண்டும்; அன்புவழி (காதல் வழி)யில் வாழ்க்கை நடத்த வேண்டும்; கொடுமையை எதிர்த்து வீரம் காட்ட வேண்டும் என்பதே தமிழ்ப் பண்பு என்பதும், அந்த முறையை வற்புறுத்தக் கூடிய சமுதாயமும்

அரசியலும் உலகில் அமையவேணும் என்பதுதான் சிவஞான கிராமணியவர்களின் ஆசை என்று அவருடைய பேச்சுக்களிலிருந்தும், எழுத்துக்களிலிருந்தும் மட்டுமல்ல; அவருடன் பலமுறை சல்லாபித்ததிலிருந்து நான் அனுமானிக்கிறேன்.

அவருடைய இந்த ஆசையிலிருந்து உதித்தது தான் அவருடைய தனித் 'தமிழரசு' இயக்கம் என்பதும் என்னுடைய அபிப்பிராயம். உலகம் முழுவதிலும் தமிழ் இலக்கியங்கள் காட்டுகின்ற பண்புகள் நிரம்பிய சமுதாயமும் அரசியலும் உண்டாவது முடியாத காரியம். என்றாலும், தமிழ் நாட்டில் மட்டுமாவது அப்படி ஒரு முயற்சியைச் செய்யத் தமிழர்களுக்கு ஏகபோக உரிமை இருக்கவேணும் என்று அவர் கோருகிறார் என்பது என் ஊகம்.

சிவஞானம் செய்கிற 'தமிழரசு' முயற்சி சரியா தப்பா, முடியுமா முடியாதா என்பவற்றைப் பற்றித் தீர்ப்புச் சொல்வதோ, கட்சி பேசுவதோ என் வேலையல்ல. 'தமிழரசு' முயற்சி ஒரு அரசியல் விவாதம். அது கொடுத்தல் - வாங்குதல் என்பதைப் போன்றது; விவாதம் நிரம்பியது. சுதந்தரமான 'தமிழரசு' வேண்டுமென்று வாதித்தால் தமிழ் நாட்டுக்கு நியாயமான உரிமைகளும் சலுகைகளும் கிடைத்த மட்டில் கிடைக்கட்டுமே என்பது நோக்கமாக இருக்கலாம். ஆதலால், 'தமிழரசு' முயற்சி ஒரு அரசியல் பேச்சு. அதிலிருந்துமட்டும் திரு. சிவஞான கிராமணியாரின் தகுதிகளைத் தீர்மானித்துவிட முடியாது. ஒரு மனிதருடைய உண்மையான பெருமை

களை அவருடைய அரசியல் பேச்சுக்களிலும் எழுத்துக்களிலும் இருந்துமட்டும் அளந்துவிட முடியாது. அந்த மனிதருடைய அந்தரங்க வாழ்க்கை, அவர் மனிதனுக்கு மனிதனுக நடந்துகொள்ளும் மாதிரி, சம்பாதனை முயற்சிகளின் சுத்தம், கொடுத்தல் வாங்குதலில் உள்ள நாணயம், பொது நலத்தைக் கருதும் பொறுப்பு, உண்மைத் தன்மை, உபகார சிந்தை முதலிய பல விஷயங்களையும் சேர்த்துப் பார்த்தால்தான் அவருடைய தகுதி விளங்கும். அந்த முறையில் திரு. சிவஞானம் மேற்சொன்ன எல்லாத் துறைகளிலும் மாசற்று வாழும் மதிப்புடையவர்; மிகக் கொடிய வறுமையிலும் செம்மை காக்கும் சிறப்புள்ளவர். எல்லாவிதத்திலும் நம்பத் தகுந்தவர்.

அவருடைய தேச பக்தியும், காந்தீயப் பற்றும், தமிழ் ஆர்வமும் பேச்சுத் திறனும் எழுத்து வல்லமையும், நெடுநாளைக்கு இந்த நாட்டிற்கு உதவிவரும்படி எல்லா நலன்களும் பெருகவேண்டும் என்று மன மார வாழ்த்தி இறைவனை வணங்குகிறேன்.

# தியாகிகளைப் போற்றும் தியாகி

தே. போ. மீனாட்சிசுந்தரனார்

சிவஞான கிராமணியார் தமிழ் நாடறிந்த பேச்சாளர். அவரது பேச்சு வெற்றுப்பேச்சு அன்று; மேடை ஆரவாரம் அன்று; கேட்போர் உள்ளத்தில் வீரத்தினை எழுப்பிப் பேரியக்கத்தில் ஈடுபடச் செய்யும் பெரும் பேச்சு. தமிழரசுக் கழகம், சென்னையைக் காத்து இன்று வெற்றிகண்டுள்ளது. தமிழ் நாடு இப் பெருந் தொண்டிற்கு என்றும் இவருக்குக் கடமைப் பட்டுள்ளது. தமிழ் நாட்டோடு ஒத்துத் துடிக்கின்றது இவருள்ளம். சித்தூர்த் தமிழனும் திருவாங்கூர்த் தமிழனும் விழித்தெழுந்து இவரைத் தம்மவர் எனத் தழுவிக்கொள்ளும் காட்சியே இதனை விளக்குகிறது.

தமிழன் உள்ளத்தோடு தமிழின் வீறுப்பெல்லாம் இவர் பேச்சில் துள்ளிக் கூத்தாடக் காணலாம். "எதுகை மோனை இன்றிப் பேசுகிறான்" என்ற பழமொழியின் உண்மைப் பொருள் எனக்கு விளங்கியதே இல்லை. உணர்ச்சிபொங்கி வழிவதற்கு அடையாளம் எதுகையும் மோனையும் என்பதனைச் செயற்கைப் பேச்சிலும் செயற்கைச் செய்யுளிலும் எவ்வாறு அறிய முடியும். பொது மக்களுடன் வாழ வரும்போதுதான் பிச்சைக்கேட்பதிலும் எதுகை

மோனை, ஒப்பாரியிலும் எதுகைமோனை, பெண்களின் சிங்காரப் பேச்சிலும் எதுகை மோனை, உள்ளத்தினைத் தொட்டறியும் பேச்செல்லாம் எதுகை மோனையாக வரக் காண்போம். இத்தகைய பேச்சுக்கள் அல்லவா பழமொழிகள். எதுகையும் மோனையும் இயற்கையாக அலைமேல் அலையாக வருவதுதான் தமிழின் சிறப்பு. ஏழைத் தமிழின் இந்தச் சிறப்பினை, ஏழைத் தமிழனுக்கு ஏழைத் தமிழனாய் வாழும் இவர் பேச்சில் காணலாம்.

தமிழ்க்கென உயிர் கொடுத்த வீரரோடும் உறவு கொண்டு வாழ்கிறார் கிராமணியார். கப்பலோட்டிய தமிழர் வ. உ. சி.க்கு எவரும் திருநாள் கொண்டாடுகிற காட்சியை இன்று காண்கிறோம். கிராமணியார் கட்டபொம்மன் வரலாற்றை எழுதி அவன் திருநாளையும் கொண்டாடச் செய்கின்றார். தமிழ் நாட்டில் தமிழ்ப் பெருமக்களுக்குத் திருவிழாக் கொண்டாடும் வழக்கத்தினை ஒரு பேரியக்கமாக நடத்திவரும் பெருமை கிராமணியாருடையதே.

இந்தப் பெருந் தியாகிகளை நினைத்து இவ்வாறு இவர் உருகுவதேன்? உயிருள்ளவரைப் பாராட்டினாலும் ஊதியம் உண்டு! பாம்பறியும் பாம்பின்கால். தாமும் ஒரு தியாகியாதலின் தியாகிகளைப் போற்றுகின்றார். தியாகி என்றால் வள்ளல்களையே எண்ணுவது பழங் காலம்; உயிரையும் கொடுப்பாரையே எண்ணுவது இந்தக் காலம். காந்தியுகத்தின் புரட்சி இது. இந்தப் புரட்சியில் ஏழைகளும் இவ்வாறு வள்ளல்கள் ஆகலாம்.

கிராமணியாரின் உடலைக் கண்டால் பெரிய மீசைதான் தோன்றுகிறது. ஆம்; மற்றைப்படி எலும்பும் தோலும்தான். அம்மட்டோ, உயிரை வளர்க்கும் உணவும் கொள்ளமுடியாதபடி வயிற்றிற்குள் புண். சுதந்திரப் போரில் பட்ட வீரப் புண்; சிறைச்சாலை கொடுத்த வீரப் பரிசில். பேச்சினைக் கேட்டு மகிழ்கின்றோம். புண்ணினை ஆற்ற முயல்கின்றோமா? தமிழகத்தைப் பற்றி அவர் காணும் கனவுகள் நனவுகளானால் மட்டுமே அந்தப் புண் ஆறும். வாழ்க ம. பொ. சி.!

# சிலப்பதிகாரத் தமிழர்

—யோகி ஸ்ரீ. சுத்தானந்த பாரதியார்

அன்புத் தமிழீர்,

தமிழுணர்ச்சித் திருவாளரான சிவஞான கிராமணியார் வாழ்க்கை வரலாற்றை வெளியிடுவது தமிழுக்கே பெருமையாகும். தமிழர் இறந்தாரையே கொண்டாடுவர்; இருந்தாரை மறப்பர் என்ற வசை நீங்க வேண்டும். தலைவர் சிவஞானம் சிறந்த தமிழறிஞர், சிலப்பதிகாரத் தமிழர், வீறுபெற்ற பேச்சாளர், சொல்லும் செயலும் ஒன்றான வினைத்திட்பமுடையார். நாட்டிற்கே உயிர் வாழும் தியாகி. விடுதலைப் போராட்டத்தில் ஆறு முறை சிறை சென்ற வீரர். உரிமைபெற்ற இந்தியாவில் உரிமை பெற்ற தமிழரசை நிலைநாட்ட உணர்ச்சிகொண்டெழுந்த தனித்தமிழர். தமிழர் இத்தமிழ்த் தொண்டரை நன்கு மதித்துப் போற்றுவது தமிழுக்கும் தமிழகத்திற்கும் செய்கடனாகும்.

எட்டுத் திசையும் இளந்தமிழர் சீர்த்திபெறக்
கொட்டு முரசங் குதித்தெழுங்கள்—கட்டில்லா
வீரத் தமிழரசை வேகமுற நாட்டிடவே
சூரக் கனலாற் றுணிந்து.

எந்தாய் வாழ்க!

# தனிக் குரல்

—பெ. தூரன்

முதலில் எழுந்தது ஒரே ஒரு தனிக்குரல். ஆனல், அது ஆணித்தரமான குரல். மெலிந்து போன உடலிலிருந்து வந்த குரல்தான்; இருந்தாலும் சிம்ம கர்ஜனையாக வந்த குரல். தமிழ்நாட்டின் எல்லைகளைப் பற்றி பாட்டில் படித்திருக்கிருேம். தென்குமரி வடவேங்கடம் என்று பெருமையாகப் பேசியிருக்கிருேம். அது நடைமுறையில் நிச்சயமாக வேண்டும் என்று சங்கநாதம் செய்து, தமிழர்களைத் தங்கள் உரிமையைப் பாதுகாத்துக்கொள்ளும்படித் தட்டி எழுப்பவந்த வீரக் குரல்களில் முன்னிற்பது ம. பொ. சி.யின் கம்பீரக் குரல்.

அவருடைய வீரமுழக்கம் வேங்கடத்திலிருந்து குமரிமுனை வரையில் தமிழர்கள் வாழும் பிரதேசங்களிலெல்லாம் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

கிராமணியார், ஆழ்ந்த காங்கிரஸ்காரர். இந்தியத் தாயிடம் மாருத அன்பு பூண்டவர். அன்னையின் விடுதலைக்காக அநேக துன்பங்களையெல்லாம் ஆண்மையோடு சகித்தவர். இந்திய நாட்டின் முன்னேற்றத்திலே, ஒற்றுமையிலே மட்டற்ற ஆர்வமுடையவர். ஆனல் அதற்காகத் தமிழ்நாட்டை சித

றடிக்க அவர் ஒப்புக்கொள்ளமாட்டார். யார்தான் ஒப்புக்கொள்ளுவார்கள்?

தமிழன்னையின் பெருமையிலே மகிழ்வெய்து கின்றவன் நான். தமிழன்னையின் உயர்வுக்குப் பணியாற்றுகிறவர்களையெல்லாம் நான் போற்று கிறேன். குறுகிய உள்ளத்தோடு பணி செய்கிற வர்களையல்ல. தமிழன்னை அறிவுறுத்தியுள்ளபடி "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற அடிப் படையிலே அன்னையின் பெருமைக்குப் பாடுபடுகிற வர்களைப் போற்றுகிறேன். அம்முறையிலே இவரை நான் போற்றிப் புகழ்கின்றேன்.

ம. பொ. சி.யைப் பற்றி இன்னும் பல சொல்ல லாம். அவருடைய சொல்வன்மை — அவருடைய தமிழ் வேகம்—எல்லாம் சிறப்பாகச் சொல்லலாம்.

ஆனல், நான் முதலில் கூறியது ஒன்றே போதும். வாழ்க ம. பொ. சி.

# எங்கள் தலைவர் ம. பொ. சி.

—கவிஞர் கா. மு. ஷெரீப்

தமிழுக்காக உயிர் வாழ்ந்தோர் பலர். தமிழ் நலனுக்காக உயிர் துறந்தோர் மிகப்பலர். ஆனால் எங்கள் தலைவரோ, தமிழையே உயிராக—தமிழரின் நலத்தையே பிறவியின் குறிக்கோளாகக் கொண்டு வாழ்பவர்.

எடுப்பான மூக்கு; இதயத்தையே கவர்வது போல் நம்மைக் கூர்ந்துநோக்கும் கண்கள்; எலும்பும் இளைத்த உடல்; முறுக்கி விடப்படாத—இல்லை! முறுக்கிவிட முடியாத—வாளிப்பான மீசை; நடுத்தர உயரம்; தூய கதராடை..... இத்தனையும் சேர்ந்த எழிலுருவில் காட்சியளிப்பவர்தான் எங்கள் தலைவர் — வருங்காலத் தமிழகத்தின் வழிகாட்டி — திரு. ம. பொ. சிவஞானம்!

வயது நாற்பத்திரண்டுதான்; ஆனால் வண்டமிழ் ஆராய்ச்சியில் அவருக்கு வயது ஆயிரம் என்றாலும் தகும்! நோய் சதா அவரை வாட்டிக்கொண்டே இருக்கும்; ஆயினும் தமது பிரச்சார வேலையைத் தொடர்ந்து நடத்திக்கொண்டுதான் இருப்பார்.

அடுக்கு மொழிகளுடன் ஆழ்ந்த கருத்துக்களை எளிய நடையினிலே இனிமை கொஞ்சப் பேசுவதில்

இணையற்ற வீரர். அவரது சொற்பொழிவின் முன் இளைஞர்களின் நெஞ்சம் வெல்லப் பாகுதான்; எதிர்க் கட்சியாளர்களும் போற்றித் தலையசைப்பது சகஜமான நிகழ்ச்சி.

அவருடைய வாழ்வே அரசியல் போராட்ட மய மானது. இந்தியாவின் விடுதலையை நோக்கமாகக் கொண்ட காங்கிரஸில் சேர்ந்து தீவிரமாக உழைத்தார். வெள்ளை ஏகாதிபத்தியத்தை அகற்றுவதற்காக வெகு தீவிரமாய் போராடினார். சிறையையே வீடாகவும், வீட்டையே சிறையாகவும் தண்டனை பெற்றுக் கொடுந் துன்பமுற்றார். அந்நிய ஆதிக்கத்தை ஒழிப்பதற்கு நம் அகில இந்தியாவுடன் தோள்சேர்ந்து நின்று அகிம்சைப் போர் புரிந்தார். அப்பொழுதும் நம்மைப் பெற்றெடுத்த தமிழ்நாட்டின் பெருமைகளைப் புகழாத நாளே இல்லை.

இந்திய தேசம் விடுதலை பெற்றுவிட்டது. இனி நம் இன்பத் தமிழ்நாடு விடுதலை அடையவேண்டும். அசோக மன்னனின் ஆட்சிக் காலத்திலுங்கூட, தனித்து நின்று தன்னரசு செலுத்திச் சிறப்புற்ற தமிழரசை மீண்டும் நிலைநாட்டவேண்டும். இடைக் காலத்திலே துண்டாடப்பட்டுப் பிரிந்து கிடக்கும் திருவிதாங்கூர் தமிழகம், காரைக்கால், புதுச்சேரி, கொச்சின், சித்தூர், கோலார் தங்கவயல் ஆகிய பகுதிகளையும் நம் தாயகத்துடன் இணைத்து, குமரி முதல் வேங்கடம் வரையுள்ள புதிய தமிழகத்தை அமைத்தாகவேண்டும். அதில் சுய நிர்ணய உரிமையுள்ள சோஷலிசக் குடியரசை நிறுவி, ஏழ்மையும்,

சுரண்டலும், சாதிமதப் பிளவுகளுமற்ற புதிய சமுதாயத்தை உருவாக்கவேண்டும். இந்த அரும் பணியைச் செய்து முடிப்பதற்காகவே தமிழரசுக் கழகத்தைத் தோற்றுவித்து தன்னலம் கருதாது பாடுபட்டு வருகிருர் தலைவர் ம. பொ. சி.

கட்சிக்கென்று நிதியில்லை. ஆனல், கஷ்டப்பட்டு கண்விழித்து நூல் எழுதி அதில் வரும் வருமானத்தையும் கட்சிக்காகவே செலவழித்து, துன்பத்தைத் துணிந்து ஏற்று வாழும் பண்புடைய தனித் தலைவர் அவர்.

வாழ்வுக்கு மனையில்லை. மனைவியருக்கு வந்த சீதன வீட்டையும் கட்சிக் காரியாலயத்துக்கெனத் தந்திருக்கும் தலைவர் ம. பொ. சி., ஒருவரேதான்.

சுருக்கமாக சொல்லவேண்டுமானல், உலகத்துக்கு உயர்ந்த தத்துவத்தை வழங்கிய 'மார்க்ஸி'ன் வாழ்க்கை எப்படியோ அப்படி அமைந்திருப்பது தலைவர் ம. பொ. சி. அவர்க்ளின் தனிப்பட்ட வாழ்க்கை.

சீன நாட்டின் செம்மைக்காக பாடுபட்ட தலைவன் மா-சே-துங்; இந்தோனேஷியா அரசியல் தலைவன் சுகர்ணே, ரஷ்ய நாட்டின் இணையற்ற தலைவன் ஸ்டாலின் ஆகிய உயர்ந்த தலைவர்களின் வரிசையிலே வைத்துப் பார்க்கப்பட வேண்டியவர் ம. பொ. சி. என்ருல் மிகையாகாது.

அவரிடத்தில் நான் கண்ட குறை ஒன்றே ஒன்றுதான். எவ்வளவோ எண்ணிப் பார்த்த பின்பும் அதை நான் சொல்லாமலிருக்க முடியவில்லை.

அதுதான், எப்பொழுதும் ஓய்வென்பதேயில்லாமல் படிப்பது, எழுதுவது, அன்றைய உணவுக்கு வழி யென்ன என்ற கவலை சற்றுமின்றி பக்கத்திலிருப் பவர்களுடன் பல்வேறு விஷயங்கள் பற்றி சர்ச்சை செய்துக்கொண்டிருப்பது.

உடனிருந்து பணிபுரியும் என்போன்ருர், தலை வர் உடல் நிலை கண்டு கவலைப்படாமல் இருக்க முடியாது. ஆனல் கட்டாயப்படுத்தி அவரை ஓய்வு பெறச் செய்ய நாங்கள் எடுத்துக் கொண்ட முயற்சி யில் ஒருநாள் கூட எங்களால் வெற்றிபெற முடிய வில்லை.

இந்தப் போக்கை தனக்காக இல்லாவிட்டா லும், தமிழகத்தின் - தமிழர்களின் நன்மையை முன்னிட்டாவது தலைவர் ம. பொ. சி. மாற்றிக் கொள்ளத்தான் வேண்டும். இது எங்கள் மாற்ற முடியாத ஆசை.

வெல்க ம. பொ. சி.யின் கொள்கை. வாழ்க, அவர் புகழ் வையம் உள்ள வரை! வளர்க, அவ ரின் ஆயுள் பன் நெடுங்காலம்!

# தண்டமிழ் மேதை ம. பொ. சி.

—கவிமணி சி. தேசிக விநாயகம் பிள்ளை

இந்திய நாடு அடிமைப்பட்டிருந்த காலத்தில் அதன் விடுதலைக்காகப் பல்லாயிரம் மக்கள் அல்லும் பகலும் அயராது உழைத்ததோடு, அரிய பெரிய தியாகங்களும் புரிந்தனர். அவரெல்லாம் நம்மால் வந்தித்து வாழ்த்தத்தக்கவர்கள் என்பதில் ஐயமில்லை. அந்நிய ஆட்சியினின்று நாடு விடுதலை பெற்றதும் தம் குறிக்கோள் நிறைவேறிவிட்டதெனக் கருதி அவருள் பலரும் அமைந்துவிட்டனர். ஆங்கிலேயரின் வெளியேற்றத்தால் நாட்டைப் பற்றியிருந்த ஒரு பிணிப்புத்தான் அகன்றுள்ளது. இன்னும் எத்தனையோ பிணிப்புகள் இருக்கின்றன. அவையனைத்தும் ஒன்றன்பின் ஒன்ருக அறுபட வேண்டும்; வாழ்க்கை வசதிகள் பெருக வேண்டும்; ஆத்மீக வளர்ச்சி பரவ வேண்டும். அப்படியானுல் தான் இந்திய மக்கள் உண்மையான விடுதலையுடன் நிம்மதியான வாழ்வைப் பெறமுடியும். இதனையுணர்ந்து தொண்டாற்றிவரும் தொண்டர்களும், அறிஞர்களும், தலைவர்களும் நம்மிடையில் இல்லாமலில்லை. அவருள், தமிழினத்தை ஒன்றுபடுத்தி ஓர் 'சோஷலிச தமிழ்க் குடியரசு நிறுவவேண்டுமென்ற தலையாய நோக்கங்கொண்டு தளராது உழைத்துவரும் அன்பர் திரு. சிவஞான கிராமணியார்.

கிராமணியாரை நான் நேரில் பார்த்தது சற்றுப் பிந்தித்தான். அதற்குமுன் அவரெழுதிய எழுத்தில்தான் பார்த்திருக்கிறேன். அப்போது அவரைப் பற்றிய என் கற்பனை உருவம் எப்படியிருந்தது தெரியுமா? கனல் கக்கும் விழிகளும், ஆண்மை துடி துடிக்கும் மீசையும், வீரக் களை தாண்டவமாடும் முகமுமாகிய கரிய பெரிய உருவத்தோடு இருப்பார் என்று கருதியிருந்தேன். ஆனல், அவரை நேரில் பார்த்ததும் எவ்வளவு ஏமாந்து போனேன்! சின்னஞ் சிறிய சிவந்த மேனி; கனிந்த பார்வை; இனிய தோற்றம்; எல்லாம் தலை கீழ் மாறுதல்! அவர் எழுத்துக்கள் என் கற்பனையை அடியோடு மயக்கி ஏமாந்துபோக வைத்துவிட்டனவே என்ற வருத்தம் எனக்கிருந்தது. ஆனல், ஒன்று மட்டும் சரியாயிருந்ததில் சற்று ஆறுதலுண்டு. வீரத்தின் குறியான மீசை என் கற்பனையைக் கடந்து சென்றுவிடவில்லை.

முன்பெல்லாம் அவர் மீசை முகத்தில் மறைந்திருக்குமாம்; இப்போதோ முகத்தை மறைத்திருக்கிறது மீசை! இதை அவர் சொல்லக் கேட்டபோது நகைப்பாகத்தான் இருந்தது. என்ருலும், சிறை வாழ்வு அவர் உடலை எந்த அளவுக்கு வற்றச் செய்து விட்டது என்பதை நினைக்கப் பரிதாபமாக இருக்கிறது. நாடு நலம்பெற வேண்டுமென்று உழைக்கும் உத்தமர்களுக்கு கிடைக்கும் பரிசுவகைகளுள் இந்த வற்றலுடம்பும் ஒன்று போலும்! இந்நிலையிலும் அயராது உழைத்துவரும் அவர் உழைப்பே உழைப்பு; சேவையே சேவை.

கிராமணியாரின் காட்சி எவ்வளவு இனியதோ அதுபோல அவர் நடத்தும் 'தமிழ் முரசு'ம் இனிய தோற்றமுடையது! அமைப்பில் மட்டுமல்ல; எழுத்துக்களிலும் இனிமையைப் பார்க்கலாம். உயிர்த் துடிப்புடன் கூடிய இனிய எளிய தூயநடை அவருக்கு உடன்பிறப்பு. பேச்சும் இப்படியே இருக்குமென்று சொல்லக் கேட்டிருக்கிறேன். அப்படியிருக்குமானல், அவர் பேராற்றல் படைத்த ஓர் மனிதர் என்பதற்குச் சந்தேமில்லை. ஏனென்ருல், எழுத்து வன்மையும் பேச்சு வன்மையும் ஒருவரிடம் ஒருங்கு அமைவதென்பது மிக அருமை. அத்தகையவர்களாய் மிகச் சிலரைத்தான் காணமுடியும். அவர்கள் நினைத்தால் ஒரு பெரிய ஜனசமூகத்தையே ஒன்று திரட்டிவிடவும், நினைத்த திசை நோக்கி வழிநடத்தவும் முடியும். கிராமணியார் ஒரு தனிப்பெரும் இயக்கத்தை - தமிழரசு இயக்கத்தை வெற்றியுடன் நடத்திக்கொண்டு போகின்ருரென்ருல் அதற்குக் காரணம் இந்த இருவகை ஆற்றலும் அவரிடம் இருப்பதுதான். அத்துடன் அவரிடம் சிறப்பாக தியாக குணமும் அமைந்திருக்கிறது. ஆகவே, அவர் வடவேங்கடம் தென்குமரியிடைப்பட்ட தமிழரனைவரையும் ஒன்றுதிரட்டி ஓர் தமிழரசாட்சியை நிலைநாட்டத் துணிவதோ அதில் வெற்றி காண்பதோ வியக்கத் தக்கதேயல்ல. அவரது உயரிய கோரிக்கை வெற்றியடையும் காலம் மிக அண்மையிலிருக்கும் என்பது என் நம்பிக்கை.

கிராமணியார் தமிழர்களைத் தட்டி எழுப்பும் முறை மெச்சத் தகுந்தது- அவர் பண்டைத் தமிழர்

களின் பண்பாடுகளைத் திரட்டித்தந்து அவற்றின் வாயிலாகவே உணர்ச்சி ஊட்ட முயல்கிறார். அவர் தமிழிலக்கியங்களைக் கற்பது வெறும் அறிவுக்காகவோ இன்பத்துக்காகவோ பொழுதுபோக்குக்காகவோ அல்ல; தமிழினத்தின் உயர்வை அவற்றின்மூலம் புலப்படுத்துவதற்காகவே அவர் அவற்றைக் கற்கிறார். இது மிக்க பயன் தரும் செயலாகும்.

கண்ணகியின் வீரமும், கட்டபொம்மன் ஆண்மையும், வ. உ. சி.யின் தியாகமும் அவரைப் பெரிதும் கவர்ந்தன வாதல் வேண்டும். இவைபற்றிய எழுத்தோவியங்களை அவர் எழுதிய புத்தகங்களிலும் பத்திரிகைளிலும் பார்க்கிறோம். அவை உயிராற்றலும், உணர்ச்சி வேகமும் ததும்ப அமைந்துள்ளன. ஆகவே, கிராமணியார் நாட்டின் நலன் கருதி உழைக்கும் ஓர் அரசியல் சீர்திருத்தக்காரர் மட்டுமல்ல; பண்டைத் தமிழிலக்கியங்களையும் பிற்கால வரலாறுகளையும் துருவி ஆராய்ந்து தமிழின மேன்மை காட்டும் தண்டமிழ் மேதையுமாவார். அவர் சேவை மொழி, அரசியல், பொருளாதார சமத்துவம் ஆகிய மூன்றினையும் இணைத்து நிற்பதொன்றாகும்- அவர் நன்னோக்கம் தமிழ் மக்களின் ஒத்துழைப்பால் விரைவில் வெற்றி பெறுமாக. அதற்கு ஆண்டவன் அருள் சுரப்பாராக!

வாழ்க தமிழ் மொழி!

வாழ்க தமிழினம்!

வாழ்க தமிழரசே!

# தமிழ் செய்த தவம்

ந. சஞ்சீவி M. A.

பலருக்குப் பொது வாழ்க்கை என்பது இன்பப் பொய்கை - உல்லாசப் படகு - புகழ் ஏணி.

பட்டங்களை வைத்துக்கொண்டும் பதவிகளில் வீற்றிருந்தும் பொதுமக்களிடமிருந்து பணந் திரட்டிப் பங்களாக்களில் வாழ்வதும்; அதே பொது மக்களின் நெஞ்சுணர்வை - நம்பிக்கையைக் கொள்ளை அடித்து செல்வாக்கு என்ற மாளிகையில் ஏறி, புகழ் என்ற நிலா முற்றத்தில் உலாவி, செருக்கென்ற பொற்கிண்ணத்தில் ஆணவம் என்ற மதுவை அருந்தி அரசியல் சீமான்களாய் வாழ்வதுமே அவர்கள் வாழ்க்கை லட்சியம்!

பெரும்பாலான அரசியல் தலைவர்களைப் பற்றிய பொதுவிதி இதுதான். ஆனல் இந்தப் பொது விதியைப் பற்றி, தூய அரசியல் தொண்டர்கள் - சிந்தனையாளர்கள் - நினைக்கும் போதெல்லாம், ஐயோ! இந்தப் பொதுவிதிக்கு விலக்கே கிடையாதா? எங்குமே கிடையாதா? என்றுமே கிடையாதா என எண்ணி எண்ணி இதயம் துடிப்பார்கள் அல்லவா? அந்தத் தூயோரின் இதயத்துடிப்பு வீண்போகாது.

தன்னல வாழ்க்கையை, மக்களை ஏமாற்றும் தந்திரத்தை திறமை என்ற திரைபோட்டு மறைத்து சூழ்ச்சியும் சுயநலமும் கோரத் தாண்டவம் புரியும் அரசியல் உலகில் - பணமும் புகழும் பட்டமும் பதவியும் - கட்சி வெறியைக் கட்டியாளும் சுயநலத் தலைவர்களும் புரியும் கொடுமைகளைக் கண்டு கலங்காது - முப்பது ஆண்டுகளாக ஊன் உறக்கம் இன்றி உழைத்தும் - சிறைசென்று சிப்பிஏந்தி சீரழிந்த பின்னும் - தன் உடல் மெலிவைக் கண்டு சோர்ந்து ஓய்வு கொள்ளாமல் - தன் இனத்தின் மெலிவு கண்டு மனங் குமுறிப் பாடுபடும் வீரர் ஒருவர் இன்றும் வாழ்கிறார் - இங்கேயே, தமிழகத்திலேயே வாழ்கிறார் - உங்களுக்கும் எனக்கும் தலைவராகவும் வாழ்கிறார். ஆம் இந்த உண்மையை நினைக்கும் போது நம் தோள்கள் பூரிக்கின்றன. யார் அந்தப் பெரியவர்? அவர்தான் தலைவர் ம. பொ. சி. ஆம், தமிழ் ஞானம் என்ற தீயிலே கடந்த முப்பது ஆண்டுகளாக போட்டுப் புடமிட்ட பின்னும் "சுடச் சுட ஒளிவிடும்" தேசீயம் என்ற பொன்னாய் - சொக்கத் தங்கமாய் விளங்கும் சிவஞானம்.

ஆறு ஆண்டுகட்கு முன்பு ஒருநாள் மாலை எங்கள் ஊருக்கு அடுத்துள்ள பொன்மலை தொழிற் சாலையில் நடைபெற்ற மாபெருந் தொழிலாளர் மாநாட்டுப் பந்தலில்தான் முதன்முதல் என்னருமைத் தலைவர் ம. பொ. சி.யைச் சந்தித்தேன். கதர் வேட்டியும், சட்டையும், கோட்டும், அங்கவஸ்திரமும் அணிந்து மெலிந்த வடிவினராய் இருந்தார் ம. பொ. சி. அன்று கண்ட அவர் தோற்றத்தையும்,

"காலனினும் கொடிய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் நெஞ்செலும்பைப் பிளந்தெறியப் புறப்பட்டு விட்டேன் என்ருலும், கள்ளமற்ற குழந்தையின் தூய்மையான உள்ளம்தான் என் இதயம்" என்று எடுத்துரைப்பதுபோன்று இருந்த அன்புருவான அவர் முகத்தையும் - நீறு பூத்த நெருப்பைப் போன்று நெஞ்சிலே கனன்றிருந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆவேச அனலே, அடக்கம் என்ற சாம்பலால் மூடி வைத்திருக்கும் உண்மையை உலகிற்கு விநாடிக்கு ஒருமுறை வீசும் கண்ணொளியால் வெளிப்படுத்தும் அந்தப் போர்வீரரின் பார்வையையும் - புளியமரத்தில் தூக்கிலிட்டுக் கொல்லப்பட்ட நேரத்தில் புரட்சிப் பிரகடனத்தைப் படித்த வீரபாண்டியன் பரம்பரை இன்னும் அழியவில்லை என்று பேய் ஆட்டம் ஆடிய ஏகாதிபத்தியக் கொடுங்கோலர்க்கு எச்சரிக்கை கொடுப்பதுபோல் முறுக்கி விட்டிருந்த அந்த மீசையையும், இன்றும் - இனியும் - அவர் விரும்பும் விடுதலை பெற்ற வருங்காலத் தமிழகத்தில் நான் சாம்பலாகும் அந்தக் கடைசி நாள் வரையிலும் மறக்கமுடியாது.

தலைவர் ம. பொ. சி.யால் தமிழ் மொழிக்கு - தமிழ் நாட்டிற்கு - தமிழ் இனத்திற்கு என்ன நன்மை? கட்டுரையாளனுகிய என்னையே நான் கேட்டுக்கொள்ளும் இதே கேள்வியைத்தான் இன்னும் சில பல ஆண்டுகள் கழித்து சுதந்திர - சுய நிர்ணய - சோஷியலிச தமிழகத்தின் - ம. பொ. சி. போன்ற வீரத் தமிழர்களின் அழியாப் புகழ்ச் சின்னத்தின் வரலாற்றை எழுதப்போகும் இன உணர்ச்சி

படைத்த வரலாற்று ஆசிரியர்கள் காலம் என்ற பழஞ் சுவடியில் எழுதப்பட்டுவிட்ட புதிய அத்தியாயங்களைப் புரட்டிப் புரட்டிப் பார்த்துக்கொண்டே கேட்கப் போகிறார்கள். அந்த வரலாற்றாசிரியர்கள் தங்களைத் தாங்களே கேட்டுக்கொள்ளப் போகும் அந்த கேள்விக்கு விடை எழுதும்போது பேனாவின் மை கொண்டு அல்ல - புரட்சி ஒளி வீசும் பொன் எழுத்துக்களால் எழுதுவார்கள்.

காதல் மனைவியைப் பிரிந்து கடுஞ் சிறையில் புரிந்த தவத்தால் - செந்தமிழ் நாட்டைப் பிரிந்து சிறையிலே பட்ட துன்பத்தால் - சிப்பி ஏந்தி சீரழிந்தக் கொடுமையால் - தம்மைத்தாமே சுதந்திர தேவிக்கு அறிமுகப்படுத்திக் கொண்டார் அண்ணல் ம. பொ. சி.

அதே நேரத்தில் சுதந்திர தேவியின் பலி பீடத்தில் தங்கள் செந்நீரைச் சிந்தி அல்லல் உற்ற நேரத்திலும் ஆனந்தம் கொண்ட வீரத் தியாகிகட்காக சிரம் வணங்கி - கண்ணீரை உதிர்த்து அஞ்சலி செய்யும் கருணை படைத்த கன்னித் தமிழ் நாட்டு மக்கட்குத் தன் சொந்தத் திறமைகளாலேயே தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார் ம. பொ. சி.

ம. பொ. சி., சிறந்த எழுத்தாளர்; நிகரற்ற பேச்சாளர்.

உண்மை என்ற ஆவேசத்தோடு கலந்து வீசியெறியும் எரிமலைகளைப் போன்றவை ம. பொ. சி. யின் சொற்பொழிவுகள். அடிமைத் நாயகத்தில்

அவருடைய சொற்பொழிவுகளைக் கேட்டு சுயநலத் தலைமைகள் நடுங்குகின்றன.

தமிழகத்தில் இந்தத் தலைமுறையிலும், கடந்த பல தலைமுறைகளிலும் சிறந்த தமிழ் சுருக்கெழுத்தாளர்கள் இல்லாத குறையை வருங்காலத் தமிழகம் நினைந்து நினைந்து வருந்தப்போகிறது. தேசபக்தர் சிதம்பரனர், தேசீய வீரர் சுப்பிரமணிய சிவா, தமிழ்க்கடல் ஞானியார் அடிகள், தமிழ்ப்பெரியார் திரு. வி. க. போன்ற பெருமக்களின் சொற்பொழிவுகள் பல வரிவடிவம் பெருமல் காற்ருேடு கலந்துவிட்டன. அதே நிலைதான் ம. பொ. சி.யின் ஆவேசச் சொற்பொழிவுகள் பலவற்றிற்கும் நேர்ந்துவிட்டன. இளந்தமிழர் உலகம் இனியேனும் மனம் வைக்குமானல் தமிழ்மொழியில் 'சொற்பொழிவு இலக்கியம்' செழிக்கச் செய்ய முடியும். ம. பொ. சி. போன்ற வீரத் தமிழர்களின் சொற்பொழிவுகட்கு வரிவடிவம் தந்து வைப்போமானல் வருங்காலத் தமிழகத்தில் கிரேக்க நாட்டு டெமாஸ்தனிஸ் முழங்கிய முழக்கங்களையும் - இங்கிலாந்து தேசத்து பர்க் பேசிய பேச்சுக்களையும் கற்பதுபோன்று மனம் வருந்தாமல் கற்க முடியும்.

வேங்கடத்திலிருந்து குமரிமுனை வரை வாழும் லட்சக்கணக்கான தமிழ் மக்கள், ஈட்டி போன்ற கூர்மையும் - அருவி போன்ற அழகும் படைத்த அவர் எழுத்துக்களை அறிந்துள்ளார்கள்.

ம. பொ. சி. பேசுகிருர் என்ருல், அவர் வாய் பேசவில்லை; உயிர் பேசுகிறது. அப்படியேதான்

ம. பொ. சி. எழுதுகிறார் என்றால், அவர் கை எழுத வில்லை; உயிர் எழுதுகிறது.

கட்டுரை வரைவது-தலையங்கங்களை எழுதுவது - அறிக்கைகளைப் பிரசுரிப்பது - என்பது ம. பொ. சி.க்கு உயிருக்குயிரான பிரச்சினைகள்; ஓய்வில்லாத் தொண்டு.

செங்கற்களை அடுக்குவதுபோல் செந்தமிழ்ச் சொற்களை அடுக்கி அடுக்கி வைப்பதோ, குழந்தைகள் கூழாங்கற்களை வைத்து விளையாடுவதுபோல் - பொருளறிவற்ற கவிஞர்கள் சிலேடை யமகங்களை வைத்து சிலம்பம் ஆடுவது போல் - உருவகச் சொற்களை உருட்டிப் புரட்டி ஓடவிடுவதோ அவருக்குப் பிடிக்கவே பிடிக்காது. எதை எழுதினாலும், எதைப் பேசினாலும், ஏன்? எதை எண்ணினாலும், எப்படி வாழ்ந்தாலும், அதில் ஒரு தெளிவும் - தீர்க்க தரிசனமும் இருந்தால் போதும் என்று நம்புகிறவர் ம. பொ. சி.

ம. பொ. சி.யின் எழுத்திலும் பேச்சிலும் பொருளற்ற வெறும் வெறியைப் பார்க்கமுடியாது. அவர் எழுத்தும் பேச்சும் எங்கள் காவிரியாற்றின் வெள்ளத்தைப் போன்றது. பொன்னி நதியின் வெள்ளத்திலே, பெரும் ஆவேசமும் உண்டு; புதுமை அழகும் உண்டு. அப்படித்தான் ம. பொ. சி.யின் எழுத்தாற்றலும் பேச்சாற்றலும். அவர் எழுத்தி லும் பேச்சிலும் நாள்தோறும் நாள்தோறும் நவ நவமான கருத்துக்கள் நடமாடுகின்ற காரணத்தால் தான் அவர் ஆயிரக்கணக்கான சொற்பொழிவு

களைச் செய்தபின்னும் - எத்தனை எத்தனையோ கட்டுரைகளை எழுதிக் குவித்தபின்னும் - "ம. பொ. சி. பேசுகிறார் - ம. பொ. சி. பேசுகிறார்" என்று மக்கள் திரளுகின்றனர். "ம. பொ. சி. எழுதியுள்ளார் - ம. பொ. சி. எழுதியுள்ளார்" என்று அவர் எழுதும் கட்டுரைகளையும் புத்தகங்களையும் பல்லாயிரக் கணக்கான மக்கள் படிக்கிறார்கள். உண்மையைக் கூறுமிடத்து வளருகின்ற தமிழ் உரைநடை இலக்கியத்தை வளமுறச் செய்யும் முன்னணி எழுத்தாளரில் ம. பொ. சி.யும் ஒருவர். "தமிழ் முரசி"ல் அவர் எழுதியுள்ள "தமிழருக்கும் சுயநிர்ணயம்" "ஆந்திரப் பொங்கல்" போன்ற அரசியல் கட்டுரைகளையும் "சங்கத் தமிழ் வளர்ப்போம்!" "கண்ணகிக்கு கோயில் உண்டா?" "சிலம்பும் மேகலையும்" "சிலம்பு காட்டும் செந்நெறி" "வள்ளுவர் வகுத்த வழி" போன்ற இலக்கிய கட்டுரைகளைப் படித்துப் பாராட்டாத தமிழ் இலக்கிய மாணவருமுண்டோ?

பல "பெருமக்கள்" எழுதும் புத்தகங்களைப் போல் ஒரு மணி நேரத்தில் படித்து உடனே வீசி எறியத் தோன்றும் குப்பைக் கூளங்களை எழுதுவது ம. பொ. சி.க்குக் கனவிலும் முடியாத காரியம். பண்டைத் தமிழ் இலக்கியங்களைப் புதிய கண் கொண்டு பார்த்து காலத்திற்கு ஏற்ற நெறியைப் பரப்புவதில் பெரு வெற்றிகண்டார் ம. பொ. சி. அவர் எழுதிய எண்ணிறந்த கட்டுரைகளும் "கப்பலோட்டிய தமிழன்", "வீரபாண்டியக் கட்டபொம்மன்" போன்ற புரட்சி வீரர்களின் வாழ்க்கை வரலாறுகளும், "சிலப்பதிகாரமும் தமிழரும்" போன்ற

இலக்கிய ஆராய்ச்சி நூல்களும் "தமிழர் கண்ட காந்தி", "சுதந்திரப் போரில் தமிழகம்" போன்ற வீர உணர்ச்சி நிறைந்தசொல் ஓவியங்களும் "தமிழன் குரல்" போன்ற சிந்தனைக்குரிய அரசியல் ஆராய்ச்சி நூல்களும், "வானொலியில் ம. பொ. சி." போன்ற சொற்பொழிவுகளின் தொகுதியும், வருங்காலத் தமிழகத்தில் பெருந்தலைவர் திரு. வி. க.; பேரறிஞர் டாக்டர் மு. வ., பெரும்புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் போன்ற சான்றோர்கள் எழுதிய ஒப்பற்ற நூல்களோடு ஒருசேர வைத்துப் போற்றிப் படித்துப் பாராட்டப்படும்.

ம. பொ. சி.யின் எழுத்தும் பேச்சும் சிறந்த இலக்கிய படைப்புகளாய் விளங்கக் காரணம் என்ன? ஆம்; ம. பொ. சி.யின் புகழுக்கு வித்தாய் விளங்கும் அதே வைப்புகள்தான் தமிழ் இனத்தின் புகழுக்கும் ஆணிவேராய்த் திகழும் செந்தமிழ் இலக்கியங்கள்.

புறவாழ்வில் ம. பொ. சி.யை வாழச் செய்வது ஆபத்துகளை வரவேற்கும் அரசியல். அகவாழ்வில் அவரை வாழச் செய்வது ஆனந்தத்தை அளிக்கும் இலக்கியங்கள்.

ம. பொ. சி.யின் உயிர் தமிழ். அதை வைத்துத்தான் அவர் நாட்டைப் பார்க்கிறார் - இனத்தைக் காண்கிறார் - ஏன்? தன்னையே பல நேரங்களில் கடுமையாகச் சோதித்துப் பார்க்கிறார். திருக்குறளும் சிலப்பதிகாரமும் சங்க இலக்கியங்களும்

பாரதியின் நூல்களும் ம. பொ. சி.க்கு உயிருக்கு உயிரானவை. தாம் வழிபட்டுப் பின்பற்றும் தலைவரை "வள்ளுவர் வழிவந்த வ. உ. சி." என்று போற்றுகிறார். தமது பிறப்புரிமை என மதித்து அவர் கேட்கும் தமிழரசை சிலப்பதிகாரத்தில் சிந்திக் கிடக்கும் பரல்கள் என்று சொல்கிறார். அமைய இருக்கும் புதிய தமிழகத்தில் சங்க இலக்கியங்களில் பொங்கித் ததும்பும் தமிழ்ப் பண்பாடு தழைக்க வேண்டும் என்று பறை சாற்றுகிறார். அவர் பார்க்கத் துடிக்கும் ஐக்கிய இந்தியக் குடியரசுகளின் கூட்டாட்சியை பாரதியாரின் கற்பனை உச்சியில் - கவிதைக் கோட்டையில் ஆடிப்பறக்கும் "தாயின் மணிக்கொடி" தரும் செய்தி எனக் குவலயம் அறிய முரசு கொட்டுகிறார்.

சிறந்த எழுத்தாளராக - ஒப்பற்ற பேச்சாளராக விளங்குவதில் மட்டுமே ம. பொ. சி.யின் மாண்பு முழுவதும் அடங்கி விடுகிறதா? இல்லை - ஒருநாளும் இல்லை. அவருடைய தனிப் பெருமை, உன்னதமான உயிரினும் சிறந்த தமிழரசு குறிக்கோளில் தான் அடங்கிக் கிடக்கிறது. 'தமிழ்' என்ற சொல்லைக் கொண்டு மக்கள் மனதை மயக்கி, அச்சொல் வழிப்பட்ட அருமைப் பண்பாட்டிற்கு மாறான கருத்தற்ற கோஷங்களால் - கற்பனைக் கொள்கைகளால் - அழித்துவரும் சுயநல அரசியல்வாதிகளிடம் சிக்கிச் சிறுமையுறும் தமிழ்சாதிக்குப் புத்துயிர் அளிக்கும் புதிய லட்சியத்தைக் - குறிக்கோளைத் தெளிவாகவும் - திறமையாகவும் - துணிவாகவும் சொல்லிய ஒரே தலைவர் - முதல் தலைவர் -

ம. பொ. சி. அல்லவா? இதை இன்று யார் மறுத்தாலும் எதிர்கால வரலாறு மறக்க முடியாது.

தமிழ்த்தாய், தலைமுறை தலைமுறையாக தொல்காப்பியர் தொட்டு பாரதியார் ஈருக, எத்தனை எத்தனையோ அறிஞர் பெருமக்களைப் பெற்றெடுத்து வருகிருள். வாழையடி வாழையடியாகத் தோன்றிவரும் அவ்வீரப் பெருமக்களின் - கலைச் செல்வரின் - கால் வழியிலே தோன்றியவர்தான் ம. பொ. சி. ஒரு மொழியினுடைய வாழ்வு மக்கள் சமுதாயத்தில் அது பெற்றிருக்கும் இடத்தைப் பொறுத்தது. தமிழ் மொழியின் கடந்தகால வரலாற்றைப் புரட்டிப் பார்த்து அதே நேரத்தில் அதன் நிகழ்கால நிலையை நினைத்துப் பார்த்தால் ம. பொ. சி. யினுடைய நெஞ்சக் குமுறலை கண்ணிழந்த குருடரும் - காதிழந்த செவிடரும் மனமிருந்தால் புரிந்து கொள்ள முடியும்.

விடுதலை இந்தியாவின் வெட்கத்திற்குரிய நிலைமையைக் கண்டு வேதனைப்படாதார் யார்? 'காலம்' என்ற கல்லறையில் தமிழ் இலக்கியங்கள் தடைபட்டு அழிந்து போகாமல் காக்க வேண்டுமானல், ஒரு சில படிப்பாளர்களின் மொழியாக அல்லாமல், பாமர மக்களின் நெஞ்சக் கோயிலிலும் அது ஆனந்தக் களிநடனம் புரியவேண்டுமானல், நம் அன்னைமொழி அரசுமொழியாகித் தீரவேண்டும் என்ற ஆவேசத் தீ, தமிழனுய் பிறந்த ஒவ்வொருவரின் இதயத்திலும் எழுநாவிட்டு எரிய வேண்டும். உறங்கிக் கிடக்கும் தமிழ் மக்கள் உள்ளத்தில் அந்

தத் தீயை மூட்டவந்த உத்தமர்தான் தலைவர் ம. பொ. சி. எந்தத் தமிழ் அன்னை, காலம் என்ற பெரு வெளியில் அமர்ந்து புரியும் கடுமை நிறைந்த தவத் தீயின் சுடர்களாய் வள்ளுவரையும் பாரதியாரையும் பெற்றெடுத்தாளோ, அதே அன்னைதான் அந்த வள்ளுவரும் பாரதியும் வளமுறச் செய்த தமிழ் மொழி, வயிறு வளர்க்க வந்த கூட்டத்தினரின் மொழிக்குக் குற்றேவல் புரியும் சிறுமை நிலையைச் சீறி எறிந்து வையம் ஆளும் மொழிகள் என்ற வரிசையிலே நிற்கப் போராடும் போர் வீரர் ம. பொ. சி.யையும் பெற்றெடுத்துள்ளாள். ஆம்; ஆகஸ்டு 15-க்குப் பின்பு - அரசியல் விடுதலையை இந்தியா அடைந்த ஆனந்தத் திருநாளைக் கொண்டாடிய பின்பு - "என் அன்னை மொழி அரசுமொழியாகின்ற வரை என் எலும்புகளுக்கும் ஓய்வு கிடையாது" என்று முழக்கம் செய்யும் ஒரே தலைவர் ம. பொ. சி.

தமிழ் இனத்தவரே! உங்கள் திருவாய்கள் முழங்கட்டும் - "ம. பொ. சி. வாழ்க! வாழ்க!" என்று; உங்கள் திருக்கரங்கள் குவியட்டும், "கன்னித் தமிழ் வளர்க்கக் காலம் என்ற பெருவெளியில் அமர்ந்து கடும் தவம் புரியும் வீரத்தாயின் திருவடிகள் வெல்க" என்று.

வீரத்தலைவர் ம. பொ. சி. தம் வாழ்வில் பெற்ற வெற்றியின் வேரைத் தேடிக் காணவேண்டுமானால், அவருடைய சொந்த வாழ்க்கையை ஆராய்ந்து பார்க்கவேண்டும். அச்சுக் கோர்க்கும் தொழிலாளியாக இருந்தபோதுதான் அரசியலில் ஈடுபட்டார் ம.

பொ. சி. அச்சுக் கோர்த்து கோர்த்து அயர்ந்து போன நேரத்தில் கசங்கிக் கிடந்த பத்திரிகை களைப் படிப்பதில் கவனம் செலுத்திய தொழிலாளி ம. பொ. சி.தான் இன்று பத்திரிகைகள் பாராட் டும் மக்கள் தலைவராகக் காட்சி அளிக்கிறார். B. A., M. A. பட்டதாரி அல்ல ம பொ. சி. S. S. L. C. தேர்வு-ஏன்-எட்டாவது வகுப்புகூட எப்படி இருக் கும் என்று எட்டிப் பார்த்தும் அறியார் ம. பொ. சி. ஆனல், அரசியல் பேரறிஞர்களும்-சட்ட நிபுணர் களும் போற்றும் அரசியல் கொள்கைகளைப் பல் கலைக் கழக மாணவரிலிருந்து பாடுபட்டு உழைக்கும் பாட்டாளி ஈருகப் பாமரரும் புரிந்து பாராட்டும்படித் தெளிவாகப் பேசுகிறார். தலைவர் ம. பொ. சி.யின் இந்த ஒப்பற்ற திறமையைப் பாராட்டும் அதே நேரத்தில் கஞ்சிக் கலயத்திலேயே கடைசி நாட் களையும் கழித்த ஏழைக் குடும்பத்திலே பிறந்து இன்னும் வறுமையையே தோழமை கொண்டு வாழும் அந்த வீரரின் வேதனை வாழ்க்கையையும் சேர்த்து சிந்திக்க வேண்டும். பட்டங்களைக் காணுத, பணத்தின் மமதை அறியாத ம. பொ. சி., பதவி வெறி கொண்டவருமல்லர். பதவி மோகம் பிடித் தலையும் நாற்காலிப் பித்தர்களைக் கண்டால் அவர் மனம் நகைக்கும்; வயிறு குமுறும், “ஐயோ தமிழ் நாடே! இவர்களையும் பெற்றுயே!” என்று அவர் கண்கள் கலங்கும்.

பாறைக்கு அடியில் கிடக்கும் பசும் புல்போல் சமுதாயக் கொடுமைகட்கு அடியில் சிக்கிக் கிடக்கும் ம. பொ. சி.யின் துயர வாழ்க்கையை அவர் திறமை

களைப் பாராட்டும் உலகம்கூட அறியாது. கொடுமைகளுக்கு மத்தியிலே பிறந்து - கொடுமைகளை எதிர்த்து எதிர்த்து, அந்த எதிர்ப்பிலேயே - ஏன்? - அந்த எதிர்ப்பாலேயே வளர்ந்து-அந்தக் கொடுமைகளை அடியோடு ஒழிக்கவே வாழும் வைர நெஞ்சினராகிய ம. பொ. சி.யின் வீர வாழ்வின் வெற்றிக்கு மூல காரணமாக இருப்பது எது? ஒழுக்கம்! ஒழுக்கம்!! ஒழுக்கம்!!! பொது வாழ்க்கையில் கால் வைத்த நாள் தொட்டு புகழ்த் தென்றல் வீசும் பொழுதும் - பழிப் புயல் சாடும் பொழுதும், மயங்காதும் கலங்காதும் வேங்கட மலையின் உறுதியைப்போல் - பொதிகை மலையின் திண்மையைப்போல் வீரத் தலைவர் ம. பொ. சி.யை வாழச் செய்வது ஒழுக்கம் ஒன்றே.

"பொதுத் தொண்டு - அரசியல் பணி - என்பது நெருப்பு ஆற்றை நூல் இழையால் கடப்பதை நிகர்க்கும்" - இந்த நல் ஒழுக்க உணர்வு நிறைந்த நினைப்பே தலைவர் ம. பொ. சி.யின் பொது வாழ்க்கையில் உள்ள ஒரே போக்கு. "ஒன்றுபட்ட இந்தியாவில் உரிமைபெற்ற தமிழகத்தில் சுதந்திர - சமதர்மக் குடியரசு" - இதுவே அவருடைய வாழ்வின் கடைசி நோக்கம் - இலட்சியம். இந்த இலட்சியத்தைத் தன் கண்களாலேயே காணவேண்டும் என்ற ஆத்திரத்தால்தான் வறுமை என்ற தீயில் நின்றபோதும் வாலுயர் லட்சியங்களை மறவாது - ஒற்றுமைச் சங்கு ஊதி - உண்மை முரசு கொட்டி - உயிரையும் பணயமாக வைக்க உறுதிகொண்டு போராடுகிறார், இயக்க வீரர் - படைத் தளபதி - நாட்டின் காவலர் - மக்களின் தலைவர் ம. பொ. சி.

"ம. பொ. சி. வாழ்க!" - "ம. பொ. சி. வாழ்க!" என்ற முழக்கம் இன்று கூட்டங்கள் தோறும், மாநாடுகள் தோறும் விண் அதிர மண் அதிர முழங்குகிறது. ஆம்; தலைவர் ம. பொ. சி. ஒரு தனி மனிதரல்ல; ஒரு தலைசிறந்த தத்துவத்தின் உயிர் படைத்த பிரதிநிதி. ம. பொ. சி.யின் வெற்றி அந்த மாண்புமிக்க தத்துவத்தின் வெற்றி. எந்த வீரத் தமிழ் மக்கள் இன்று தமிழ் அரசு காணவேண்டும் என்ற ஆவேசத்தால் "ம. பொ. சி. வாழ்க! வாழ்க!" என்ற குரலைப் புரட்சி முழக்கமாக முழங்குகிறார்களோ, அதே வீரத்தமிழ் மக்களின் குழந்தைகள் - ஆம் - புதிய தமிழ்க் குடியரசின் பெருமை மிக்க பெருங்குடி மக்கள் ஆடிப் பறக்கும் அந்தத் தமிழரசுக் கொடியின் கீழ் படை படையாக அணிவகுத்து நின்று - வீரவாள் மீது கைவைத்து - நன்றி உணர்ச்சியால் நனைந்துபோன நெஞ்சக் குரலோடு - "ம. பொ. சி. வாழ்க!" - "ம. பொ. சி. வாழ்க!" என்ற குரலை - முழக்கத்தை வெற்றி முழக்கமாக முழங்குவார்கள்.

# கர்மவீரர் ம. பொ. சி!

கு. சா. கிருஷ்ணமூர்த்தி

இந்தியநற் சந்தையிலே வணிகம் செய்ய
எங்கிருந்தோ இங்குவந்த ஆங்கிலேயர்
சொந்தமதி யற்றமன்னர் பேராசைக்குத்
தூபமிட்டுத் துணைபுரிந்துப் போர்விளைத்து
"வெந்தழியும் வீட்டினிலே பறித்தமட்டும்
வேட்டை"யென்றின் னாட்டினர சுரிமையெல்லாம்
மந்தியப்பம் பகிர்ந்தளித்த கதையைப்போலே
வஞ்சனையால் மண்ணாளும் உரிமைபெற்றார்!

வெள்ளையர்தம் கொள்ளையாட்சி விதைமுளைத்து
வேரரும்பி மரமாகா முன்னே, இன்றே
கிள்ளியெறிந் திடவேண்டும் என்றேகூறிக்
கிளர்ந்தெழுந்து சுதந்திரப்போர்த் துவக்கிரத்தம்
வெள்ளமெனப் பாய்ச்சிவீர வெற்றிகண்ட
வீரச்செந் தமிழ்வேந்தன் கட்டபொம்மன்
கள்ளமிலாச் சுதந்திரப்போர்க் கனல்கனிந்து
"காந்தி"யெனும் சுதந்திரஒளி கதிரைக்கண்டோம்!

சாந்தம் அன்பு கருணை தயை அகிம்சைமேவும்
சத்தியத்தின் அடிப்படையில் விடுதலைப்போர்
காந்திமகான் தொடங்கஎங்கும் உணர்ச்சிவேகம்
கடல்மடையைக் கடந்தவெள்ளம் போலேபொங்கி
மாந்தரெல்லாம் போர்வீரர்க் கோலங்கொண்ட
மட்டில்லாக் காட்சிகண்டு வறுமைச்சேற்றில்

நீந்துகின்ற நிலைதனையும் மறந்துதியாக
நெருப்பிடையே குதித்தசிவ ஞானம்வாழ்க!

இந்தியநந் நாட்டுரிமைப் போர்முழக்கம்
இமயமுதல் குமரிவரை எழுச்சிகொண்டு
கொந்தளித்துக் குமுறியெழ இளைஞர்கூட்டம்
குதித்தனவே தேசியத் தியாகத்தீயில்!
விந்தைமிகும் புதுமைவழி வகுத்த காந்தி
விடுதலைப்போர்ப் படையினிலே திரண்டவீரச்
செந்தமிழர் கணக்கற்ருேர்! அந்நாள் ம. பொ.
சிவஞானம் தேசியத் தொண்டரானுர்!

சந்தையென இந்தநாட்டு வளமிகுந்த
சரக்குவிலை கொள்ளவந்த ஆங்கிலேயர்
தந்திரத்தால் நாடாளும் உரிமைபெற்ற
தகுதியற்ற செயல்தனைக்கண் டுளங்கொதித்து
செந்தமிழர்ப் பெரும்படையில் வெள்ளையர்தம்
சிரமறுத்துச் சுதந்திரப்போர் துவக்கிமுன்னர்
தந்ததமிழ் வீரசிங்கம் கட்டபொம்மன்
தனதுவழித் தோன்றல்சிவ ஞானம்வாழ்க!

ஒப்பருந்தாய் நாட்டுரிமைப் போர்முழக்கம்
உருக்குலையக் கண்டுள்ளம் உருகிச்சீறி
எப்படியும் அன்னியர்தம் ஆதிக்கத்தை
எதிர்த்தொழித்தே தீர்வதெனச் சுதந்திரப்போர்க்
கப்பல்கண்டு இரண்டுஜென்மக் கைதியாகிக்
கல்லுடைத்துச் சிப்பியேந்திச் செக்கிழுத்த
செப்பரிய தேசபக்தத் தமிழன் வ. உ.
சிதம்பரத்தின் வழித்தோன்றல் சிவஞானம்தான்!

மச்சுமனை மாளிகைசேர் செல்வபோக
வாழ்க்கைநலச் சூழ்நிலையில் கல்விகற்று

மெச்சுங்கலா சாலையுயர்ப் பட்டம்பெற்று
　　மேடையிலே பேசுகின்ற 'மேதை'யல்ல!
அச்செழுத்துக் கோர்த்தடுக்கி உழைத்துமாதம்
　　ஐந்துவெள்ளிக் காசுபெற்ற சிவஞானத்தின்
நச்சனைய வாழ்வினைநா டறியா(து!)அந்த
　　நாவலன்தன் நல்லறிவைப் புகழுங்கண்டீர்!

அன்னைதந்தை மனைவிமக்கள் உடன்பிறந்தோர்
　　அலறியழு தரைவயிற்று உணவுக்கேங்கும்
இன்னல்பெரி தெனமதியா தடிமைவாழ்வின்
　　இழிவகற்றத் துடிதுடித்து இளமைவாழ்வின்
தன்னலமெல் லாந்துறந்து சிறைக்கோட்டத்துள்
　　தனிமையிலே பலமுறைகள் தவங்கள்செய்த
பின்னர்வந்த சுதந்திரத்தில் தமிழினத்தின்
　　பேரரசு கோரும்சிவ ஞானம்வாழ்க!

அன்னியர்கள் அகன்றனரென் றறைவதல்லால்
　　அடிமையென்னும் நிலைமாறுநிலையில் இன்னும்
தன்னலஞ்சூழ் நிலைநிறைந்தோர் தம்கைக்குள்ளே
　　தனியுடைமைத் தத்துவமே மிகமேலோங்கி
இன்னுமிருக்கின்ற நிலைதன்னை நீக்கி
　　இனவாரி சோஷலிசக் குடிகளாட்சி
உன்னதநற் கொள்கைமுறை வகுத்துக்காட்டும்
　　ஒப்பற்ற தலைவன்சிவ ஞானம்வாழ்க!

வழிவழியாய்ப் பதவியிலே ஒட்டிக்கொண்டோர்,
　　வாய்ப்பையெதிர் பார்த்திருப்போர் வடக்குநோக்கி
ஒழியாது துதிபாடித் தங்கள்தங்கள்
　　ஒய்யார வாழ்வுதனை உயர்த்திக்கொள்ள
மொழிவாரிக் கொள்கைதனை இழித்துப்பேசி
　　மொழிவுயர்வை, இனநலத்தை, உரிமைவாழ்வைக்
குழிதோண்டிப் புதைத்திடுந்தீச் செயல்எதிர்த்துக்
　　கொக்கரிக்கும் சிவஞானக் கோமான்வாழ்க!

"சேவலைப்போல் நிமிர்ந்துநின்று கொக்கரித்து
செந்தமிழின் இலக்கியச்சீர் எதுகைமோனை
மேவுமெழில் ஆற்ருெழுக்காய் கவிதையைப்போல்
வீரமுடன் நகைச்சுவையும் விரவிக்காணக்
கோவையென அடுக்கடுக்காய்ப் பொருள்மலிந்து
கொட்டுகின்ற இனிமைமிகும் சொற்பெருக்கும்
நாவலிமை மிக்கசிவ ஞான"மென்றிந்
நாடுபுகழ் நல்லறிஞன் நாளும்வாழ்க!

இலக்கியத்தின் நல்லறிவு பெற்ருரெல்லாம்
இடர்விளைக்கும் சமயவெறிப் போராட்டத்தின்
நிலைக்களமாய் இருந்திடுவார்! அரசியற்போர்
நிகழ்த்துகின்ருேர் உலகிலென்றும் நிலைத்துநிற்கும்
கலைத்துறையில், பொது அறிவில், இலக்கியத்தில்
கவலைகொள்ளார்! இந்நிலைக்குப் புறம்பாய்நின்று
இலக்கியத்தில் அரசியலை இணைத்துக்காட்டும்
இயல்புடைநல் லறிஞன்சிவ ஞானம்வாழ்க!

நாட்டின்விடு தலைக்குப்பின் இன்பவாழ்வின்
நலங்களெல்லாம் பெருகிடுமந் நலத்திற்குப்பின்
வீட்டிலுறும் இன்னலெல்லாம், வறுமையெல்லாம்
விலகியின்ப நலங்களெல்லாம் விளையும்! என்ற
நாட்டமுடன் இடையருத போராட்டத்தால்
நலிந்துமிக மெலிந்துவிட்ட உடலில்என்றும்
வாட்டமுரு வயிரநெஞ்சம் வாய்க்கப்பெற்ற
வண்தமிழர் தலைவன்சிவ ஞானம்வாழ்க!

சிக்கல்மிகும் ஆட்சிமுறைத் திட்டம்கண்டு
சீரழிந்த நிலைமாறித் தமிழினத்தார்
மிக்கநலம் பெறவேண்டின் வள்ளுவன்தன்
மேதினிகொள் நீதிமுறைக் குறளைக்கொண்டு

தக்கதொரு சோஷலிசக் குடிமையாட்சித்
தமிழகத்தின் தனியுரிமை யாகவின்றே
இக்கணமே அமைத்திடுதல் வேண்டுமென்றே
எழுச்சிமுர சறையும்சிவ ஞானம்வாழ்க!

காலைமுதல் மாலைவரைக் கழனிச்சேற்றில்
காளையுடன் உழுதுழலும் உழவனுக்கும்,
ஆலையிலே நைந்துருகி உழைத்துநல்ல
ஆடைதரும் தோழனுக்கும், உலகில்மற்றும்
வேலையில்லா வேதனையால் வாடுவோர்க்கும்,
வேலைசெய்தும் உணவு உடைத் தேவைக்கேற்ற
கூலியில்லாக் கொடியசமுதாயக் கூற்றைக்
கொன்றழிக்கக் குமுறும்சிவ ஞானம்வாழ்க!

"தீந்தமிழ்நந் நாட்டினரின் எல்லைக்குள்ளே
சிறிதளவும் பிறர்பறிக்கச் சகியேன்" என்று
ஆந்திரரும் கோளரும் அதிர்ச்சிகொள்ள
அருந்தமிழ்நாட் டெல்லையெல்லாம் சென்றெதிர்ப்பை
நீந்தி! எங்கும் பிறர்சூழ்ச்சித் திட்டமெல்லாம்
நிலைகுலையச் செய்து; மொழி வாரிநாட்டைக்
காந்திவழி நின்றமைக்கத் தொண்டுசெய்யும்
கர்மவீரன் ம. பொ. சி. நாளும்வாழ்க!

சமயவெறிச் சாத்திரத்தைப் புராணச்சூதை
சாதிமதப் பகையுணர்ச்சிப் பிரிவைநீக்கிச்
சமத்துவநந் நெறித்தமிழ்மா மறைச்சிலம்பும்
சங்கஇலக் கியங்களெனும் அறிவுநூலும்
குமரிவட வேங்கடத்துக் கிடையேகல்விக்
கொள்கையெனக் கொள்ளுமுயர்க் கொற்றம்கண்டு
தமிழர்தனி யரசுரிமைக் குடிகளாட்சி
தனைநிறுவத் துடிக்கும்சிவ ஞானம்வாழ்க!

பகுத்தறிவுப் பாதைசென்றோர் தேசபக்தி
பாபமெனத் தள்ளிவைத்தார்! தேசபக்தர்
பகுத்தறிவு பேசுவதே இழிவென்றெண்ணிப்
பகுத்தறியா துறுமுகின்றார்! புரட்சிவேகம்
மிகுத்தவரோ மாஸ்கோவின் பக்தரானார்!
மிதவாதக் காரர்களோ பதவிபெற்று
சுகபோகக் காரர்தம்மைப் பாவையாகும்
துயர்நிலைக்கண் டுருகும்சிவ ஞானம்வாழ்க!

“எனதுஇனப் பெயர்தமிழன்! என்தாய்நாடு
இன்பச்செந் தமிழ்நாடு! என்கோரிக்கை
தனியுரிமைத் தமிழரசு! குடிமையாட்சித்
தளராத சோஷலிசக் கொள்கையாகும்!
இனவாரி சமுதாய இந்தியாவே
என்கூட்டுக் குடும்பமென்பேன்! உலகில்மற்றும்
புனல்சூழ்நாட் டினர்களெல்லாம் உடன்பிறந்தார்!”
புனிதமிகும் ம. பொ. சி. கொள்கைஇஃதே!

# நான் கண்ட லட்சியவாதி

கோ. மோ. ஜனார்த்தனம் B. A., B. Com.

ஒரு சிறு அறை; அதிலே, பஞ்சு மெத்தை-தலையணை ஏதுமற்ற ஒரு கட்டில்; அதன்மேல் சில புத்தகங்கள் அங்குமிங்குமாகச் சிதறிக் கிடந்தன. ஒரு புத்தகத்தைக் கரத்தால் பற்றிக் கருத்தூன்றிப் படித்தவண்ணம் அமர்ந்திருந்தது—இன்னும் மெலிவதற்கு இடமில்லாமல் மெலிந்துவிட்ட ஒரு உருவம்.

சிவந்த மேனி; இடுப்பில் தூய கதராடை; திறந்த மார்பு; ஒளி துலங்கும் முகம்; சற்று எடுப்பாக அணி செய்யும் கூரிய மூக்கு; கம்பீரத்தையும் கண்ணியத்தையும் எடுத்தோதும் கருத்து அடர்ந்த முறுக்கிவிடப்படாத மீசை; ஒழுங்காகச் சீவி விடப்படாத கிராப். இப்படித்தான் முதன் முதலில் தலைவர் ம. பொ. சி. எனக்குக் காட்சியளித்தார். சுமார் ஆறு ஆண்டுகளுக்கு முன் நான் கண்ட இந்தக் காட்சி இன்றளவும் என் மனக்கண்முன் நினைக்கும் போதெல்லாம் வந்து தோன்றிக்கொண்டிருக்கிறது.

அப்போது சென்னையில் பாரதி விழாவை நடத்தும் முயற்சியில் ம. பொ. சி. ஈடுபட்டிருந்தார். விழாக் குழுவின் செயலாளர் பொறுப்பையும் அவரே ஏற்றுக்கொண்டிருந்தார். அவருக்குத்

துணைச் செயலாளராக, மாணவர்களின் பிரதிநிதியாக நானும், நண்பர் சி. வேங்கடசாமியும் தேர்ந்தெடுக்கப்பட்டோம். பாரதி விழாவுக்கான செயல் திட்டத்தை வரையறுக்கும் பொருட்டே, அன்று நானும் சி. வே. யும் ம. பொ. சி.யின் இல்லம் சென்றோம்.

ம. பொ. சி., இன்முகங்காட்டி எங்களை வரவேற்றார். அவருடைய மீசையைப் பார்த்ததும் நாங்கள் கொஞ்சம் அஞ்சினோம். என்றாலும், அந்த மீசையை ஒரு அங்கமாகக் கொண்டிருந்த முகத்தில் ததும்பிய அன்பு 'அஞ்சேல்!' என்று எங்களுக்கு அபயம் கொடுத்தது. ஒளிவீசும் கண்கள், அவர் ஒரு சிறந்த சிந்தனையாளர் என்பதை வெளிப்படுத்தின.

அப்போது, தமிழரசுக் கழகமோ, "தமிழ் முரசு"ப் பத்திரிகையோ தோன்றவில்லை. ஆனால், தமிழகத்தில் தமிழரசு காணவேண்டும் என்ற எண்ணமும், அதைக் காண்பதற்கான செயல் திட்டங்களும் ம. பொ. சி.யின் உள்ளத்தே உருவாகி இருந்தது.

ம. பொ. சி.யின் உடல் நலத்தை விசாரித்த பிறகு, அவர் உள்ளக்கிடக்கையைப் பற்றியும் மெள்ளப் பேச ஆரம்பித்தோம். தமிழகம் தனியரசு நாடாக வேண்டும்; தமிழ், அரசு மொழியாக வேண்டும் என்பதற்கான காரணங்களை அவர் எங்களுக்கு விரித்துரைத்தார். அதுவரை ஒரு சாதாரண காங்கிரஸ்காரர்—சிறை சென்ற தியாகி என்ற அளவில்

தான் அவரை நாங்கள் மதிப்பிட்டிருந்தோம். ஆனல், அவர் தன்னுடைய லட்சியத் தமிழகத்தைப் பற்றி, எங்களுக்கு விரித்துரைத்தபோது அவருடைய அபார அரசியல் ஞானத்தைக் கண்டு நாங்கள் வியப்படைந்தோம். எங்களுடைய பேச்சுக்கிடையே, தமது கருத்துக்கு ஆதாரமாக, அவர் எடுத்துக் காட்டிய தமிழ் இலக்கியச் சான்றுகள், அவருடைய தமிழ்ப் புலமையை நன்கு வெளிப்படுத்தின. ஆம்; ம. பொ. சி. வெறும் 'சிறைப் பறவை'யல்ல — சிந்தனைவாதி; இந்தியா முழுவதையும் நேசிக்கும் தேசியவாதியாயினும், தமிழர் என்ற இன உணர்ச்சியில் அவர் வேறு யாருக்கும் பின் வாங்கியவர் அல்லர் என்பதை அறிந்துகொண்டோம். நான் முதல் முதலாக அவரைச் சந்தித்த போது எங்களுக்குள் நடந்த சம்பாஷணையின் ஒரு கட்டம்:

**நான்:** சிறை வாழ்க்கை, தங்களுக்குத் துன்பமாக இருக்கவில்லையா?

**ம. பொ. சி:** எனக்குமட்டுமென்ன? கலையுணர்வு கொண்ட எல்லோருக்கும் சிறை வாசம் துன்பமளிப்பதுதான். ஆனல், இலக்கியத் தேனை இடையரூது உண்டால், அந்தத் துன்பமும் இன்பமாக மாறிவிடுகிறது. எனது சிறைவாசத்தில், நான் படித்த இலக்கியங்களைத் தவிர, என் மனதிற்கு இன்பமளித்தது வேறொன்றுமில்லை.

**நான்:** தாங்கள் சிறை வாழ்க்கையால் பெற்ற புதிய அனுபவம் ஏதேனும் உண்டா?

ம. பொ. சி: உண்டு. காங்கிரஸின் சாதாரண சோல்ஜராக சிறைசென்ற நான், ஒரு சுதந்திர தமிழகத்தைக் காணவேண்டுமென்ற லட்சியவாதியாக சிறையிலிருந்து வெளிவந்திருக்கிறேன்.

நான்: சுதந்திரத் தமிழகம் என்பதன் பொருள் என்ன?

ம. பொ. சி: தமிழரல்லாத இன்னொரு இனத்தவரின் எதேச்சாதிகாரத்தின் கீழ் இல்லாத தமிழகம் என்றே பொருள்.

நான்: தாங்கள் கோருவது மொழிவழி மாகாணப் பிரிவினைதானே?

ம. பொ. சி: ஆம்; நான் செல்ல விரும்பும் லட்சிய உச்சியின் முதற்படி அதுதான். ஆனால், அதனோடு எனது லட்சியம் முற்றுப்பெறவில்லை. தமிழ்நாடு தன்னுடைய விவகாரங்களைத் தானே கவனித்துக் கொள்ளும் சுதந்தரமுடையதாக இருக்கவேண்டும். தமிழ் மக்கள் ஒருவரையொருவர் சுரண்டாமல், சோஷலிஸ நெறிப்படி வாழவேண்டும்.

நான்: அப்படியானல், இந்தியாவிலிருந்து பிரிந்து, தமிழகம் தனியாக வாழவேண்டுமென்பது தங்கள் விருப்பமா?

ம. பொ. சி: அப்படி வாழவும் தமிழகத்துக்கு உரிமை உண்டு. ஆனல் நான் கோருவது அதுவல்ல. வரலாற்றுப்படிப் பார்த்தால் தமிழகம், துருக்கி-ஜெர்மனி-இத்தாலி போன்று ஒரு தனி நாடுதான்.

ஆனால், நடைமுறையில் அது இந்தியாவிலுள்ள இதர மொழிவழி நாடுகளோடு சமஷ்டியாக இருக்க வேண்டுமென்றே விரும்புகிறேன்.

நான்: தமிழ்நாடு தனியரசு பெற்றால், அந்த அரசு எந்த மொழியில் நடைபெறும்?

ம. பொ. சி: சந்தேகமில்லாமல் தமிழில்தான் நடைபெறும். தமிழரசு என்ற பெயரே அதை விளக்குகின்றதே!

நான்: தாங்கள், இந்திய சமஷ்டியில் தமிழகம் இணையவேண்டுமென்பதை ஒப்புக்கொள்கிறீர்கள். அப்படியானால், அந்த சமஷ்டி அரசாங்கம் எந்த மொழியில் நடைபெறும்? இந்தியிலா, அல்லது ஆங்கிலத்திலா?

ம. பொ. சி: இந்தப் பிரச்சினையை தமிழகம் மட்டுமே முடிவு செய்வதற்கில்லை. சமஷ்டியில் சேர்ந்த மற்ற தேசீய இனங்களின் பிரதிநிதிகளும், தமிழினத்தின் பிரதிநிதிகளும் ஒரு வட்ட மேஜையில் சந்தித்து இந்தப் பிரச்சினையில் முடிவு காணவேண்டும். என்னுடைய சொந்த அபிப்பிராயம், சமஷ்டி அரசாங்கத்தின் மொழி ஆங்கிலமாகவே இருக்கலாம் என்பதுதான். அநேகமாக தமிழ் நாட்டினரின் கருத்தும் இதுவாகத்தான் இருக்கும். ஆனால், சமஷ்டியில் கலக்கும் உறுப்புக்களில் பெரும்பாலானவற்றின் அபிப்பிராயம் இந்தி மொழிக்கு ஆதரவாகயிருக்குமாயின், அதைத் தமிழகம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இந்தி,

இங்கிலீஷ் ஆகிய இரண்டுமே தமிழ் நாட்டாருக்கு அந்நிய மொழிகள். ஆகவே, இதில் எது பொது மொழியானலென்ன?

**நான் :** மத்திய சமஷ்டிக்கு, தமிழரசு விட்டுக் கொடுக்கும் அதிகாரங்கள் யாவை?

**ம. பொ. சி :** இதைப்பற்றி இறுதியாக முடிவு செய்யும் அதிகாரம், அரசுரிமைபெற்ற தமிழகத்தில் வயதுவந்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுடையதாகும். என் சம்பந்தப்பட்ட வரை அயல்நாட்டு ராஜீய உறவு, உள்நாட்டுப் போக்குவரத்து, பாதுகாப்பு, சுங்கம் ஆகிய அதி காரங்கள் மட்டுமே சமஷ்டி அரசாங்கத்திடமிருக் கும். மற்றபடி, மாகாண மக்களில் மிகப் பெரும் பாலோரது அன்றாட வாழ்க்கை சம்பந்தப்பட்ட விஷயங்களைப் பற்றிய அதிகாரங்கள் சமஷ்டி அர சிடம் ஒப்புவிக்கப்படுவதை நான் விரும்பவில்லை.

நானும் நண்பர் வேங்கடசாமியும் ம. பொ. சி. யிடம் ஒரு புதுமையைக் கண்டோம். அன்று அவ ருடைய உடல் நிலையைக் கண்ட எவரும், அவர் மேலும் நீண்ட நாட்கள் வாழ்வது அரிது என்ற முடிவுக்கே வருவர். ஆனல், ம. பொ. சி. க்கோ தமது நீடித்த ஆயுளைப்பற்றி ஐயமிருந்ததாகத் தெரியவில்லை. இன்னும் நூறுண்டுகள் வாழ்வோ மென்ற திடசித்தம் அவரிடம் இருந்ததைக் கண்டு நாங்கள் அதிசயித்தோம்.

ம. பொ. சி. ஆற்றல் வாய்ந்த பேச்சாளர் என் பது அவருடைய எதிரிகள் கூட ஒப்புக்கொண்டுள்ள

உண்மை. அவருடைய பேச்சில் எதுகையும் மோனை யும் கொஞ்சிக் குலவும்; வளமான சொற்கள் நான் முந்தி நீ முந்தி என்று ஒன்றன் பின் ஒன்ருக ஓடி வரும். அடுக்குத் தொடர்ச்சொற்கள் அணியணியாக அமையும். அருமையான கற்பனைகள், அழகான கருத்தோவியம் கேட்போரின் கருத்தைக் கவரும்.

எங்களுடைய முதல் சந்திப்புக்குப் பின்னர், ம. பொ. சி. யை நிழல்போல பின்பற்றி பல ஊர் களுக்குச் சுற்றுப் பிரயாணம் செய்து தினந்தோ றும் அவருடைய சொற்பொழிவுகளைக் கேட்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருந்தது. இலக்கிய மேடை, பாட்டாளிகளின் கூட்டம், அரசியல் அரங் கம், மாணவர்களின் மன்றம், தாழ்த்தப்பட்டோர் சபை எனப் பல இடங்களில் பம்பரம்போல்சுழன்று சொற்பொழிவாற்றுவார் ம. பொ. சி. அந்தந்த இடங்களுக்கு ஏற்றவாறு எடுத்துக்கொண்ட பொரு ளிலிருந்து பிறழாமல் பேசுவார். பேசுகின்ற பாணி கூட தனித் தனியாகவே இருக்கும்.

இலக்கியக் கூட்டங்களில் பேசுகின்றபோது அவருடைய பேச்சில் இனிமை சொட்டும்; நகைச் சுவை நடனமாடும்.

பாட்டாளி மக்களின் மத்தியில், சுரண்டலின் கொடுமையைத் தமது சொந்த அனுபவத்தைச் சான்று காட்டிப் பேசும்போது அவருடைய கண் கள் சிவக்கும். அடுத்த கணத்தில் யுத்தமுனை புகும் படை வீரர்களுக்கு ஆணையிடும் தளபதிபோன்று வீராவேசத்துடன் பேசுவார்.

அரசியல் மேடையில் மாற்றுக் கட்சிக்கெதிராக தம்முடைய கட்சியை ஆதரித்துப் பேசுகின்ற போது, அடுக்கடுக்காக ஆதாரங்களைக் காட்டி வக்கீலைப் போன்று திறமையாக வாதிப்பார். பலஹீனமான விஷயங்கள் கூட அவருடைய வாதத் திறமையினால் பலம் பெற்றுவிடும்.

மாணவர்கள் மன்றத்தில் பேசும்போது ஆசிரியரைப் போன்று அறிவுரை கூறுவார். அவசியமான இடத்தில், "இதைச் செய்யுங்கள்; அதைச் செய்யுங்கள்!" என மாணவர்களுக்கு ஆணையிடுவார்.

தாழ்த்தப்பட்டோர் கூட்டங்களில் பேசியும் கேட்டிருக்கிறேன். அங்கு, பழங்குடித் தமிழர்கள் 'பறையர்' எனப் பழிக்கப்படும் நிலை குறித்து பதறுவார். நெஞ்சம் நைந்து கண்களில் நீர்ப் பெருக்குவார்.

ம. பொ. சி.யைப் பற்றி நினைத்தாலே மேடையும், மைக்கும் நம் மனக்கண் முன் தோன்றும். பல்லாயிரக்கணக்கான மக்களைத் தம்மிஷ்டம்போல் ஆட்டிப் படைக்கும் ஆற்றல் அவர் பேச்சுக்கு எங்கிருந்து வந்தது?

சொல்லாற்றல் என்பது அவருடைய இதய ஒலி; ஆத்மாவின் அசைவு! அவர் கொண்டுள்ள அசையாத கொள்கைகளின் இன்பநாதம். கேட்போரின் அறிவைக் கவ்வி, ஆன்மாவைச் சிக்கெனப் பிடித்திழுக்கும் ஆற்றல் ம. பொ. சி.யின் சொல்லுக்கு உண்டு. அதைத்தான் 'செலச் சொல்லும் சொல்' என்பர் புலவோர். அத்தகைய ஆற்றல் உள்ளவர்

களைத்தான் "நாநலம் பெற்றவர்கள்" என்று கூற வேண்டும். அழகான காட்சிகள், இன்பந் தோய்ந்த கற்பனைகள் இவற்றைக் காட்டி அறிவை மயக்கு வது சொல்வன்மைக்கு சீரிய இலக்கியமாகாது. அது சிந்தனையைச் சீரழிக்கும் மதுவைப் போன்றது. ஆனால், ம. பொ. சி.யின் சொல்லோ, நவில் தோறும் நயம் பயக்கும் காவியம் போன்றது. புலனுக்குக் காணாத பேருண்மைகளின் வண்ணச் சாயல்களை அவருடைய வீணைநாதம் போன்ற சொற்பொழிவுகளில் அனுபவிக்கலாம். அவரது அரசியல் பேச்சுக்களிலே வாதத்திறனும், லட்சிய உறுதியும் களிநடம் புரியும்; அவருடைய இலக்கியச் சொற்பொழிவுகளோ எனில், குற்றாலம் அருவி போல் உள்ளத்தைக் குளிர்விக்கும் பெற்றியதாகும். இடத்துக்கும், எடுத்துக்கொண்ட பொருளுக்கும் ஏற்ப சொற்களைக் கையாள்வதில் அவருக்கு நிகர் அவரே. அவருடைய பேச்சுத் திறனைக் குறித்து ராஜாஜி கூறிய ஒரு உவமை மிகவும் பொருத்த மானது:

"கிராமணியாரின் பேச்சு பெரிய காவியம் போன்றது. மாதுளைப் பழத்திலுள்ள, ரத்தினக் கற்களைப்போல் கட்டுக்கோப்புடனும் ஒழுங்காக வும் முத்துக்கள் எப்படி அடுக்கப்பட்டிருக்கின் றனவோ, அப்படி ம. பொ. சியின் பேச்சில் சொற்கள் கோர்வையாகவும், அழகாகவும் அமை கின்றன. அப்படிப் பேச அவரால்தான் முடியும்."

ம. பொ. சி. பேசுகிறார் என்றால், ஒரு கொள்கை யை விளக்குகிறார் என்றே பொருள். வாக்கு

வன்மையைக் காட்டும் சர்க்கஸ் என்று அவர் பேச்சு மேடையைக் கருதுவதில்லை. சமுதாயத்தின் இன்னல்களைத் தீர்க்கும் ரண சிகிச்சைச் சாலையாகத் தான் அவர் பேச்சு மேடையைக் கருதுகிறார். எனவே, மேடையில் உள்ள தலைவர்கள், எதிரேயுள்ள மக்கள் ஆகியோரெல்லாம் அவர் பேச ஆரம்பித்தவுடன் அவர் மனக்கண்முன் மறைந்துவிடுவார்கள். ஆனால் அவர் எந்தக் கொள்கையை அரங்கேற்ற வந்தாரோ, அந்தக் கொள்கைதான் அவர் மனக் கண்முன் காட்சியளிக்கும். அதை ஆழ்ந்து யோசித்து, ஆணித்தரமாக மக்கள் மனதில் பதியச் செய்வதில்தான் அவருடைய அத்தனை ஆற்றலும் பயன்படுத்தப்படும். அதனால்தான் அவர் ஒருவராக நின்று ஒரு கொள்கையைப் பரப்ப முயன்றாலும், அதற்கு எதிராக எத்தனை எதிர்ப்பு தோன்றினும், அவையெல்லாம் 'மழை காலத்துக் காளான்கள்' போல் மறைந்து விடுகின்றன. அவர் கொள்கை தொடர்ந்து வெற்றி பெற்றுவிடுகிறது. பேச்சு அவருக்கு ஒரு தொழிலல்ல; நாட்டுக்குத் தொண்டாற்றும் சாதனம். இதுதான் ம. பொ. சி.யின் பேச்சுக்குள்ள தனிச் சிறப்பு.

ம. பொ சி. யைத் தலைவராகப் பார்த்தோம்; சிறந்த சொற்பொழிவாளராகப் பார்த்தோம். அவரை ஒரு சாதாரண மனிதர் என்றும் கவனிப்போம்.

இளமை முதற்கொண்டே ம. பொ. சி. வறுமையைக் கண்டு அஞ்சாதவர். வறுமையிலே பிறந்து, வறுமையிலே வளர்ந்து, வறுமையிலே வாழ்ந்தும்

வருபவர். வறுமையால் வாட்டம் ஏற்படும் என்பார்கள். ஆனல், வ று மை யி ல் செம்மை காண்கிருர் ம. பொ. சி. எத்தனை துன்பம் தொடர்ந்து வரினும், 'இடுக்கண் வருங்கால் நகுக' என்பதற்கு இலக்கியமாக வாழ்கிருர். அவர் வறுமையை விளம்பரப் படுத்த மாட்டார்; அதைக் கண்டும் அஞ்சித் தளர மாட்டார். அவர் செல்வராக வேண்டும் என்று நினைத்திருந்தால் எப்போதோ செல்வச் சீமானுகியிருக்க முடியும். செல்வாக்கைக்கொண்டு செல்வத்தைத் தேடும் பண்பு அவருக்கில்லை. பணத்தையும், அதிகாரத்தையும், பதவியையும் அவர் துச்சமாகக் கருதுபவர். அவை வலிய வரினும், அவற்றிற்கு வாழ்க்கையில் முதலிடம் தருவது கிடையாது.

பணத்தையே நாட்டமாகக் கொண்டு வாழும் இந்த உலகில் நான் கண்டவரையில், பணத்தைப் பற்றி சிறிதும் கவலை கொள்ளாமல் வாழும் ஒருவர் உண்டானல், அது ம. பொ. சி. தான். அவர் ஒழுக்கத்தை உயிரினும் பெரிதாகக் கருதுபவர். அவரை எவ்வளவு குறை கூறினும் சினங் கொள்ள மாட்டார்; ஆனல், ஒழுக்கச் சிதைவுக்குத் தூண்டு கோலாக அமையும் ஒரு சிறு நிகழ்ச்சியைக்கூட கண்டிக்காமல் விடமாட்டார். அவருடைய அறிவு வளர்ச்சிக்குக் காரணமே அந்த ஒழுக்க உயர்வு தான். அவருடைய கூரிய அறிவு எக்-ஸ்-ரே போல் வேலை செய்யும்; பெரும் பெரும் திட்டங்களைத் தயாரிக்கும். அரசியல் இயக்கங்களை அவர் பொறுப்பேற்று நடத்த ஆரம்பித்துவிட்டால், அந்த இயக்கத்திற்கு வெற்றி திண்ணம். நேர்மை, ஒழுக்-

கம், திறமை என்ற மூன்று இயல்புகளும் உடையவர் ம. பொ. சி. அவருடைய பிரச்சார வன்மையை நாடறியும். இதனல்தான் அவர் எடுத்த கொள்கைகள் எல்லாம் மின்னல் வேகத்தில் தமிழ்நாடு முழுவதும் பரவி செல்வாக்கு பெறுகின்றன. சுருங்கச் சொன்னல், ம. பொ. சி. ஒரு தனி மனிதரல்லர்; அவர் ஒரு இயக்கம். இதைப் புரிந்துகொள்ளாதவர்கள்தான் அவரைத் தாக்கி அழித்துவிடலாம் என்று நினைக்கின்றனர். அவரை எதிர்ப்பதென்பது ஒரு பிரம்மாண்டமான எதிர்ப்பியக்கத்தைத் தாங்களே வரவேற்பது என்றுதான் பொருள்.

ஸாக்ரடீசைப் போன்ற சிந்தனைத் தெளிவும், லெனினைப் போன்ற செயலாற்றும் திறனும், காந்தியடிகளைப் போன்ற தன்னலமின்மையும் பொருந்திய ம. பொ. சி. தமிழ் இனத்தின் மதிக்க முடியாத மாணிக்கம். ம. பொ. சி., புதிய தமிழகத்தின் சிற்பி. தமிழின் பெருமையைப்போல் அவர் புகழ் பரவும் நாள்—அவர் தொண்டு பொலியும் நாள் நெருங்கிவிட்டது.

மதுரை காமராசர் பல்கலைக்கழ
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழ்த்துறை

# ம. பொ. சி. வாழ்க!

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி. க. சண்முகம் நூலகம்.
தமிழியல்துறை

மதுரகவி வீ. வே. முருகேச பாகவதர்

மண்பூத்த பழந்தமிழின் நினைவை ஊட்டும்
மாவீரம் தனையள்ளி வழங்கும் மீசை;
கண்பூத்த அஞ்சாத சிங்கப் பார்வை;
கனம்பூத்த முல்லைநிகர் தூய ஆடை;
பண்பூத்த உலகுக்கோ ருயிரைப் போன்ற
பாட்டாளர் உழவர்நலன் கோரும் உள்ளம்
தண்பூத்த காட்சியினை நல்கும் எங்கள்
தகைபூத்த ம. பொ. சி. தன்மை வாழ்க!

பொருத்தமிலா சாதிமதக் கோட்டை தன்னைப்
பொடியாக்கி, அதன்மீது புரட்சி மிக்கக்
கருத்தொளிரும் சமதன்ம நிலையங் காணும்
கனிவானப் பேச்சாளன்; கண்ணீர் மல்கித்
தெருமருங்கில் மரத்தடியில் குப்பை மேட்டில்
திரிந்துழலும் ஏழையரும் பிறர்போல் வாழ
அருமுரசம் முழங்குகிற உண்மைத் தொண்டன்
அன்பர்திரு சிவஞானம் கீர்த்தி வாழ்க!

சிறப்பான தாய்நாட்டைச் சுரண்டி வாழ்ந்த
செந்தலைவன் வெள்ளையனை வெளியே ஏற்ற
அறப்போரைத் துவக்கிமுதல் முழக்கம் செய்த
அஞ்சாத கட்ட பொம்மன் வீரவாழ்வும்
நிறப்பேத ஆங்கிலரை எதிர்த்தே கப்பல்
நெடுங்கடலில் செலுத்தியநம் நிகரில் வீரன்
இறப்பில்லா வ.உ.சி. நூலும், பன்னூல்
இனிதளித்த ம.பொ.சி. தொண்டு வாழ்க!

# புதுயுகத் தலைவன்!

கவிஞர் வானம்பாடி

பொன்னி நதிபாய்ந்து பொன்விளையும் தமிழ்நாட்டில்
பொற்பான தமிழ்க்குலத்தில் பொய்யா மொழிவளர்த்த
கன்னித் தமிழ்க்குமரி கண்டெடுத்த நல்வயிரம்—
கலைவளரும் தமிழ்நாட்டைக் காக்கவந்த ஒருதலைவன்
எண்ணிச் செயல்புரியும் என்தலைவன் சிவஞானம்!
எழுச்சிக்குப் பிறப்பிடமாய் எளிமைக்கு இருப்பிடமாய்
திண்ணிய மனத்திேைடும் தியாகத் திருவுருவாய்
தித்திக்கும் தமிழமுதை தினமளிக்கும் தமிழ்ஞானம்!

சுற்றிப் படர்ந்துதினம் சுட்டெரிக்கும் வறுமையிலே
சுடர்வீசித் திகழுகின்ற சொக்கஒளித் தங்கமென
நெற்றி வியர்வையிலும் நேர்மை உழைப்பினிலும்
நெஞ்சொடியும் பாட்டாளி! நீங்காக் கடமையினல்,
வற்றிய வாழ்க்கையிலும் வைரச் சிரிப்புடனே
வள்ளுவர் வழிநடந்து வாழுந் தமிழ்க்குலத்தின்
பெற்றி வளர்த்துவரும் பெருந்தலைவன் சிவஞானம்
பெருமைக் குரியதமிழ் பெற்றெடுத்த தவஞானம்!

வெள்ளையர் இந்தநாட்டில், விலங்குபோல் நமைநினைத்து
வெறிச்செயல் புரிந்தநாளில் விடுதலை காணவேண்டி
கொள்ளைச் சுதந்தரப்போர் கொழுந்துவிட் டெரிந்தவேளை
கொடியேந்தி காந்தியண்ணல் கொள்கையிலேமுன்னேறி
அல்லல்தரும் போரதனில் ஆறுமுறை சிறைசென்றும்
அருமைச் சுதந்தரத்தை அள்ளிவந்த தமிழ்மறவன்!

தொல்லையிலா நிலைகண்டு தொழிலாளர் வாழ்வதற்கு
தோளுயர்த்தி நிற்குமொரு தொழிலாளி சிவஞானம்!

பொங்கும் தமிழ்உணர்வில்—புரட்சிப் புதுச்சிரிப்பில்
போற்றும் தமிழ்க்கொடியை புதுவானில் பறக்கவிட
எங்கும் முழக்கமிட்டு எழுச்சிப் படைநடத்தி —
எழிற்குமரி தெற்காக இசைவேங் கடத்துடனே
தங்கத் தமிழ்நாட்டில் தனிக்குடி யரசுகாண
தடையாகும் சக்திகளை தகர்த்தெறிந்து வெல்வதற்கு
சிங்கக் குரல்கொடுக்கும் சிவஞானம் என் தலைவன்
சிற்பிஎனத் தமிழ்நாட்டைச் சித்தரிக்கும் ஒருகலைஞன்!

கண்ணிலே கனலெடுத்து, கருத்திலே கரும்பெடுத்து
கனிச்சாற்றின் சொற்பெருக்காய்க் காய்ச்சி வடித்ததிலே
மண்ணிலே நடனமிடும் மலர்மணத்தைக் கூட்டிவைத்து
மக்களிலே பாமரரும் மனதாரப் பருகுதற்கு—
எண்ணிலே யடங்காத ஏழைகளின் மன்றினிலே
எடுத்துக் கொடுத்துவரும் எழுச்சியிலே, பகைவரையும்
பண்ணிலே மயங்கிவிடும் பாம்பென ஆடவைத்து
பற்களைப் பிடுங்குமொரு படைத்தலைவன் சிவஞானம்!

விலைமேலே வந்ததொரு வளமான வாழ்க்கையிலே
விலைகூறி தமிழ்நலத்தை விற்றெடுத்து முதலாக்கி—
வலைமேலே வலைவீசி வாய்வீச்சில் கொள்ளையிடும்
வகுப்புவெறிப் பித்தர்களின் வாழ்வுக்கு உரங்கொடுத்து
சிலைபோலே வீற்றிருக்கும் சிந்தையிலார், தமிழ்நாட்டின்
சிறப்பிற்கு வழிகாணு சிறுமையினைப் போக்கிடவே—
அலைபோலே நிலைகுலைந்து அலைந்தாடும் தமிழினத்தை
அணிவகுத்துபடைநடத்தும்அருந்தலைவன்சிவஞானம்!

நெல்லிடத்து உமிபிரிக்கும் நீர்மைபோல், இலக்கியத்தின்
நெஞ்சிருக்கும் கருத்தெடுத்து நேர்மைக்கு வாழ்த்துரைத்தும்

செல்விடத்து சினங்காத்து செலாவிடத்தே எதிர்த்தெழுந்தும்
செந்தமிழர் பண்பாட்டின் சிறப்பிற்கோர் மாமணியாய்-
சொல்லெடுத்துப் போர்நடத்தி சோஷலிஸத் தமிழரசை
சோர்வின்றி காண்பதற்கு, சொக்கத் தமிழ்மகனுய்
வில்லெடுத்துப் போர்முடித்த வீரர் பரம்பரையில்
விடிவெள்ளி எனமுளைத்த வீரன் சிவஞானம் !

எண்ணத்தில் - தமிழர்களின் இதயத்தில் சுதந்தரத் தீ
ஏற்றிவைத்த கட்டபொம்மன் எழுச்சியை எடுத்துரைத்து —
வண்ணத்தில் தமிழெடுத்து வ. உ. சிதம்பரத்தின்
வரலாற்றை முதன்முதலாய் வரைந்தளித்து, ஏழைமக்கள்
கன்னத்தில் வழிந்தொழுகும் கண்ணீரைத் துடைப்பதற்கு—
கனலெழுப்பி முழக்கமிட்டு கடமை நெறியுணர்ந்து,
திண்ணத்தில் தமிழரசை தீரமுடன் அமைப்பதற்கு
தமிழன்குரல் கொடுக்கும் தனித்தலைவன் சிவஞானம் !

சாதனை யொன்றேநோக்காய் சத்திய மூர்த்தியோடு
சளையாது பணிபுரிந்தும், ஜனத்தலைவன் ராஜாஜிக்கு
சோதனை வந்தநாளில் சொந்தமாய்த் தனக்கென்றெண்ணி
சோர்விலா துடனேநின்றும், சொந்தமாம் தனதுவாழ்வில்
வேதனைத் தீயேவந்து வறுமையாய் சூழ்ந்தபோதும்
வெள்ளமாம் தமிழில்மூழ்கி, வெற்றியே தமிழர்காண
போதனை புரிந்துநாளும் புரட்சியாய்ப் படைநடத்தும்
புதுயுகத்தின் ஒருதலைவன் பொற்புடைய சிவஞானம் !

தளர்ச்சியுறும் வகுப்புவெறி தறுக்கர்களின் செருக்கடக்கி
தலைசிறந்த பண்பாட்டின் தலைவனெனத் தோளுயர்த்தி
வளர்ச்சியுறும் புதுக்கருத்து வாழ்த்துகின்றபுதுயுகத்தை
வரவேற்கும் சிவஞானம் வளர்தமிழாய் வாழ்ந்திடுக !
அலர்ச்சியுறும் சோஷலிஸ அமைப்பினிலே தமிழரசை
அமைக்கவந்த சிவஞானம் அருங்குறளாய் வாழ்ந்திடுக!
மலர்ச்சியுறும் கொள்கையிலே, மக்களது நன்மையிலே
மனங்கொடுக்கும் சிவஞானம் மணிச்சுடராய் வாழியவே !

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை

இன்ப நிலையம்

மயிலாப்பூர் சென்னை-4.